மாலை 47 மணி 6 ஜூன் 2005 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

## சேக்கிழாரின் அபிமான திருத்தலம் - திருநாகேச்சுரம்

## சத்தியத்திற்காக உயிர் கொடுத்த வேளாளர் சரிதம்
(பழையனூர் நீலி சரித்திரத் தொடர்ச்சி)




## பெரும்பாக்கம் நாம் பெற்ற பெரும்பாக்கியம்
ஏ.எம்.ஆர் சிறப்புக் கட்டுரை

## தெளிதல் - "எழுத்துச்சித்தர்" பாலகுமாரன்

## காலச்சுவடுகள்

## இவ்வளவு தூரம் வந்த பிறகு
புதிய தொடர் ஆரம்பம்

## காளையார் கோயில் தேர்
ஒரு சுவையான வரலாறு





அழகாம்பிகை சேக்கிழார் பாலறாவாயர்



# அருள்மிகு பாடலேஸ்வரர் திருக்கோயில்


## திருப்பாதிரிப்புலியூர், கடலூர் - 2 , : 04142 - 236728

இணையதள முகவரி : WWW.padaleswarartemple.com

மின் அஞ்சல் முகவரி : padaleswarartemple@sancharnet.in


**பக்தர்களுக்கு நன்றியும் வேண்டுகோளும்**

நிகழும் பார்த்திப ஆண்டு சித்திரை 31ஆம் தேதி சனிக்கிழமை 14-05-2005 முதல் தொடங்கி 26-05-2005 முடிய வைகாசிப் பெருவிழா இத்திருக்கோயிலில் மிகச்சிறப்புடன் நடைபெற்று உள்ளது. அதுசமயம் இத்திருக்கோயிலில் பல ஆண்டுகளாகத் தேர் இன்றிக் கட்டுத்தேரில் நடைபெற்ற உற்சவமானது,. அருள்மிகு பெரியநாயகி உடனுறை பாடலேஸ்வரர் வழிபடுவோர் சங்கத்தினரால் உபயமாக செய்யப்பெற்ற புதிய தேரின் திருப்பணி முடிந்து கடந்த 24-05-2005 ஞாயிற்றுக்கிழமை அன்று புதிய தேரோட்டம் மிகச்சிறப்புடன் நடைபெற்றுள்ளது என்பதைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இத்தேர்த்திருவிழாவில் பங்கேற்ற உயர்நீதிமன்ற நீதிபதி, மாவட்ட ஆட்சியர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தேரின் வடம் பிடித்த அனைவருக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

அப்பரடிகளின் அபிமான திருத்தலமான இத்திருத்தலத்தில் புண்ணியம் ஒன்று செய்தால் அது நூறாக விரியும் என்று தலபுராணம் கூறுகின்றது. அத்தகைய மகிமை பொருந்திய திருத்தலத்தைக் காணவும், இத்திருத்தலத்திற்கு தங்கள் மேலான நன்கொடைகளை வழங்கிப் பயன்பெறவும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

டாக்டர் கே. கிருஷ்ணமூர்த்தி, எம்.டி.,
தலைவர்.

டாக்டர் கே. நாராயணன்.
பொருளாளர்.

வி. பாலு, பி.காம்.,
ஒருங்கிணைப்பாளர்

வி.பி.எஸ். கணேசன்.
செயலாளர்.

மற்றும்
உறுப்பினர்கள்

அருள்மிகு பெரியநாயகி உடனுறை பாடலீஸ்வரர் வழிபடுவோர் சங்கம், கடலூர் - 2.

கே. முத்துக்குமரன்,
அறங்காவலர் குழுத்தலைவர்.

வை. சங்கரநாராயணன், பி.எஸ்.சி.,
செயல் அலுவலர்.

அறங்காவலர்கள்

டாக்டர் கே. கிருஷ்ணமூர்த்தி, எம்.டி., எஸ். வேலு,




திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2036 பார்த்திப ஆனி
மாலை 47 மணி 6 ஜூன் 2005


# அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்,

''ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக்கேட்ட தாய்'' என்பது திருக்குறள்.

சான்றோராய்த் திகழும் பெருமை சான்ற மக்களைப் பெறுவதால், அம்மக்கள் ''குடியிருந்த கோயிலாம்'' தாய்க்கும் பெருஞ் சிறப்பு வாய்க்கின்றது.

''திருத்தொண்டர் புராணம்'' எனும் பெருமைமிக்க பெரிய புராணக் காவியத்தைப் பாடியமையால், சேக்கிழாரைப் பெற்றேடுத்த அவர்தம் தாயார் ''அழகாம்பிகை'' யாரும் தெய்வமாகத், தாம் பெற்றேடுத்த தம் மக்கள் செல்வங்களான சேக்கிழார், பாலறாவாயருடன் குடந்தைக்கு அருகில் உள்ள ''திருநாகேச்சுரம்'' திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளார்.

இரண்டாம் குலோத்துங்கச் சோழனான அநபாயனின் ஆட்சிக்காலம் கி. பி. 1133 முதல் 1146 என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

அநபாயச் சோழனால் ''உத்தம சோழப் பல்லவர்'' எனப் பட்டம் சூட்டப்பெற்றுச் சோழ மண்டலத்தின் தலைமை அமைச்சர் பொறுப்பில் வீற்றிருந்த சேக்கிழார் பெருமான், திருநாகேச்சுரத் திருத்தலத்தைத் தம் அபிமானத்தலமாகக் கொண்டு, அவ்வாலயத் திருப்பணிகள் பலவற்றைச் செய்துள்ளார்.

தம் அபிமானத் தலமான ''திருநாகேச்சுரம்'' ஆலயத்தைப் போன்றதொரு ஆலயத்தைத் தாம் பிறந்த பெருமைக்கு உரிய குன்றத்தூரிலும் புதிதாக நிர்மாணித்து அதற்கும் ''திருநாகேச்சுரம்'' எனவே பெயர் சூட்டியுள்ளார் சேக்கிழார்.

அநபாயனின் தலைமை அமைச்சராய் வீற்றிருந்து சேக்கிழார் ஆற்றிய அறப்பணிகளை விடவும், நாம் தலைமேற் கொண்டு போற்ற வேண்டிய அரும்பணிதான், அவர் இஞ்ஞாலம் உய்ய, நாம் உய்ய, சைவ நன்னெறி உய்ய வழங்கிய அருட்கொடையாம் ''திருத்தொண்டர் புராணம்'' எனும் பெரிய புராணநூல் ஆகும்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரரும் ஒரு வடிவில் தெய்வச் சேக்கிழாராய்த் தோன்றிப் பெரிய புராணத்தைப் பாடியருளியதாக உமாபதி சிவம் அவர்கள் போற்றுகின்றார்.

''தேவரும் எழுதவொணா மறையைத் தமிழ்செய்து
திருப்பதிகம் பாடும்
மூவரும் ஒரு முதலாய் உலகத்து முளைத்த
முதற் பொருள்தான்''

என்பது சேக்கிழார் புராணப்பாடல் வரிகள் ஆகும்.

சேக்கிழாரையும் பெரிய புராணத்தையும் தம் பட்டத்து யானைமேல் ஏற்றிச் சேக்கிழார் பெருமான் வீற்றிருக்க, அவர்பின் அநபாயச் சோழமாமன்னன் தான் நின்றுகொண்டு தன்னிரு கரங்களிலும் கவரி கொண்டு வீசி தில்லையின் நான்கு மாடவீதிகளையும் வலம் வரச்செய்து, சேக்கிழாருக்குத் ''தொண்டர்சீர்பரவுவார்'' எனும் சீரியதாம் பட்டமும் தந்து போற்றினான் என்றால் அத்தகைய தெய்வச் சேக்கிழார் பெருமையை எடுத்துக் கூற நம்மால் ஆகுமா? சிறிதளவும் ஆகாது என்பதே உண்மை.

அவர் பிறந்த குன்றத்தூரில் அவர் பிறந்து வளர்ந்த இல்லம் இன்று திருக்கோயிலாகத் திகழும் பெருமை பெற்று விளங்குகின்றது.

இத்தகைய அருட்பெருந்தகையாம் தெய்வச் சேக்கிழாரின் பெருமையைக் கொண்டாடும் வகையில் தான் இம்மாதத் ''திருக்கோயில்'' இதழ் முகப்பில் திருநாகேச்சுரம் திருத்தலத்தில் தமை ஈன்ற தாயார் அழகம்மையாருடனும், தம் உடன் பிறந்த தம்பி பாலறாவாயருடனும் சேக்கிழார் பெருமான் தனிச் சந்நிதி கொண்டு விளங்கும் வண்ணப் படத்தை அலங்கரிக்கச் செய்துள்ளோம் என்பதைப் பெரு மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''பெரும்பாக்கம் நாம் பெற்ற பெரும் பாக்கியம்'' என்ற கட்டுரையை நம் அனைவரையும் ஈர்க்கும் வகையில் வழங்கியுள்ளார் ''ஜோதிடச்சக்கரவர்த்தி'' ஏ.எம்.ஆர். அவர்கள்.

''எழுத்துச் சித்தர்'' பாலகுமாரன் அவர்களின் ''தெளிதல்'' எனும் உயிரோட்டமான கட்டுரை, இன்றைய இளைய தலைமுறையினரை வழிநடத்திச் செல்லவல்ல ஒரு வரப்பிரசாதமான கட்டுரை என்பதில் ஐயமில்லை.

''தமிழ் நாட்டுச் சித்தர் பரம்பரை''யை விவரித்து வரும் ''செந்தமிழ் வாரிதி'' முனைவர் இரா.செல்வகணபதி அவர்களின் ''பட்டினத்தடிகளை''ப் பற்றிய கட்டுரை, வாசகர்களின் வரவேற்பைப் பெறும் அரிய கட்டுரையே.

''காலச் சுவடுகள்'' பகுதியில் ''காளையார் கோயில் தேர்'' பற்றிய ஒரு அருமையான சம்பவத்தை விவரித்துள்ளார் அழ. முத்துப் பழநியப்பன் அவர்கள். அரசன் உயிர் காக்கத் தன் உயிர் கொடுத்த அந்தச் சிற்பியின் வரலாறு நம் உள்ளத்தை உருக்குகிறது.

இவ்விதழ் முதலாக ''இவ்வளவு தூரம் வந்த பிறகு'' ... என்ற ஒரு புதிய சுவையான கட்டுரைப் பகுதியும் தொடங்குகிறது.

திங்களுக்குத் திங்கள் ''திருக்கோயில்'' இதழின் பொலிவும், தரமும் கூடிவருவதாக அநேக வாசகர்கள் பாராட்டுக் கடிதங்களைக் குவித்து வருகின்றனர்.

அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

அன்புள்ள

(த.பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர்காந்தி சாலை, சென்னை - 600 034

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலுக்கு வருகையும், திருத்தேர்த்திருப்பணிக்கு உதவியும்

''அன்னம் அளிக்குமூர் அண்டினரைக் காக்குமூர்
சொன்னம் மழைபோல் பொழியுமூர் துன்னினர்க்குத்
தீதுபிணி தீர்க்குமூர் திருவெலாம் சேர்க்குமூர்
ஒதுதிருப் போரூர்எம் ஊர்''

என்று சான்றோர் புகழும் தொல்பழம்பதி திருப்போரூர் ஆகும். இங்குள்ள அருள்மிகு கந்தசாமி திருக்கோயில் மிகவும் பெருமை பெற்ற திருத்தலம்.







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16-5-05 அன்று திருப்போரூர் முருகன் திருக்கோயிலுக்கு வருகை தந்து வழிபட்டார்கள்.

''இக்கோயிலுக்கென்று தனியாக மரத்தேர் இல்லை. தற்போது இக்கோயில் பிரம்மோற்சவ தேர்த்திருவிழா சிறிய சட்டத்தேரில் மட்டுமே கொண்டாடப்பட்டு வருகின்றது. இக்கோயிலுக் கென்று புதிய மரத்தேரை உருவாக்க வேண்டும்'' என்று பக்தர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் வைத்தனர். அதை ஏற்ற முதல்வர் இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் ரூ.20 லட்சம் மதிப்பில் புதிய மரத்தேரை விரைந்து உருவாக்கித் தர ஆணையிட்டுள்ளார்கள்.

## இதழின் உள்ளே ...


| | | |
|---|---|---|
| 1. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலுக்கு வருகையும், திருத்தேர்த்திருப்பணிக்கு உதவியும் | 2 |
| 2. | தெய்வச் சேக்கிழாரின் அபிமான திருத்தலம் - திருநாகேச்சுரம் | 3 |
| 3. | காலச்சுவடுகள் . காளையார் கோயில் தேர் – அழ. முத்துப்பழனியப்பன், எம்.ஏ., பி.எல். | 6 |
| 4. | தெளிதல் - ''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன் | 7 |
| 5. | கோமுகியின் கீழ் அமுதோகர் | 10 |
| 6. | திருவிளையாடல் புராணம் - இரா.அரங்கசுவாமி | 11 |
| 7. | சுகமுனிவர் வழிபட்ட சுகவனேஸ்வரர் - ஏ. கிருஷ்ணன் | 13 |
| 8. | மகாபாரதம் - முனைவர்- த. அமிர்தலிங்கம் | 17 |
| 9. | சத்தியத்திற்காக உயிர் கொடுத்த வேளாளர் சரிதம் | 18 |
| 10. | கேள்வி - பதில் | 22 |
| 11. | இவ்வளவு தூரம் வந்த பிறகு ... 'நிறைமதி' | 23 |
| 12. | திருமந்திர உபதேசம் - திருமந்திரச்செல்வர் - டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு) | 26 |
| 13. | படியாய்க் கிடந்துவுன் பவளவாய் காண்பேனே - பு.ஏ. இராமையா, இ.ஆ.ப. | 28 |
| 14. | தென்திருப்பதி எனும் ஸ்ரீஒப்பிலியப்பன் சந்நிதி | 30 |
| 15. | தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை- பட்டினத்தடிகள் - முனைவர் - இரா. செல்வக்கணபதி | 32 |
| 16. | பதினாறு வயதினில் பதினெட்டு அற்புதங்கள் - முனைவர் கே.பி. முத்துசாமி | 34 |
| 17. | திருமாகாளத்தில் நடைபெற்ற சோமயாகத்திருவிழா | 35 |
| 18. | பெரும்பாக்கம் நாம் பெற்ற பெரும்பாக்கியம் - ஏ.எம்.ஆர். | 37 |



"தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி" என்றார் மாணிக்கவாசகப் பெருமான். தென்னாடு என்பதற்கு அவர் குறித்த பொருள் எதுவாயினும் நம் தென்னாடு சிவாலயங்கள் மிக்கது. வளமும் வாழ்வும் வற்றாது விளங்கிவரும் வண்டமிழ் சோழ நாட்டில் அமைந்த தேவாரப்பதிகம் பெற்ற திருத்தலங்கள் 274 என்பர். அவற்றுள் காவிரிக்குத் தென்பால் அமைந்தவை 127 திருத்தலங்களாம் அதிற்காணும் சிறப்புமிக்க திருத்தலங்களுள் திருநாகேச்சரம் 47-வது தலமாக அமைந்துள்ளது.

வளநாடு, சென்னிநாடு, அபயநாடு, கிள்ளிநாடு, செம்பியநாடு, அகளங்கநாடு, பெருநீர் நாடு, பொன்னிநாடு எனப் பலப்பட புகழப்பெறுவது நம் சோழநாடு "தண்ணீருங் காவிரியே, தார்வேந்தன் சோழனே, மண்ணாவதும் சோழ மண்டலமே" என ஔவைப்பிராட்டியும்.

"பூவினுள் பதுமம் போலும், புருடருள் திருமால்போலும்
காவினுள் கற்பகம் போலும், கலைகளுள் ஞானம்போலும்
ஆவினுள் சுரரான் போலும் அறத்துள் இல்லறமே போலும்
நாவினுள் எந்தைநாமம் போலும் நாட்டினுள்சோழநாடு"

# சேக்கிழாரின் அபிமான திருத்தலம் - திருநாகேஸ்வரம்

என்று போற்றுவார் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்.

"ஆவேறு கிறைவனரு ளுருவுடைய
திருக்கோயிற்கு அளவே யின்று
பாவேறு மெய்ப்புலவர் பாட்டேற
அருள்சுரந்து பரவ வொண்ணாக்
கோவேறு முந்நாட்டின் முன்னாடாய்ச்
சோழர்குலக் கொடியே யென்ன
காவிரி வளங்காட்டுந் திருநாட்டின்
பெருமையது உரையப்போமோ!"

என்று இந்நாகேச்சரப் புராண ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

இத்தகு நற்சிறப்பமைந்த சோழநாட்டின் நெற்களஞ்சியமாம் தஞ்சைமாவட்டத்தில் 'பூமருவு கங்கை முதல் புனிதமாம் நதி பலவும், மாமகந்தான் ஆடுதற்கு வந்து வழிபடும்' பெற்றித்தாகிய கும்பகோணத்திற்குக் கிழக்கில் மூன்று கல் தொலைவில் அமைந்த திருநாகேச்சரம், தேவார ஆசிரியர்கள் மூவர்களாலும் முறையே பாடப்பெற்று மூர்த்தி, தலம், தீர்த்தம், மூன்றாலும் மேன்மையுற்று மக்களுயிர்க்குறுதி பயக்குமாண்பிற் சிறந்து விளங்குவது ஆகும். சிவமெய்த்தொண்டர் அன்பெலாந் திரண்டு ஒருருவெடுத்த சேக்கிழார் பெருமான் நிறைந்த பெருங் காதல்கொண்டு இத்தலத்திலே விளங்கிய தன்மையை உமாபதி சிவாச்சாரியார் "தனது பேர் உத்தமச் சோழப் பல்லவன்றானென்று உயர்பட்டங் கொடுத்திட வாங்கவர் நீர்நாட்டு நித்தனுறை திருநாகேச்சரத்திலன்பு நிறைதலினான், மறவாத நிலைமைமிக்கார்" என்று அருளுகின்றார்.




## மீனாட்சி அம்மனுக்குத் தங்கத்திருவடிகள் காணிக்கை

மதுரை மீனாட்சி அம்மனுக்கு அத்திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் கருமுத்து, தி. கண்ணன் அவர்கள் தங்கத் திருவடிகள் செய்து காணிக்கையாக வழங்கினார்.

இத்திருவடிகள் ஒருகிலோ, 24 கிராம், 300 மில்லி கிராம் எடை உள்ளதாகும். இதன் மதிப்பு ரூ6 லட்சத்து 90 ஆயிரமாகும்.

இந்தத் தங்கப்பொற்பாதங்கள் மீனாட்சி அம்மனுக்குத் தினமும் அணிவிக்கப்பட உள்ளது.



அருள்மிகு கிரிகுஜாம்பிகை

இத்தலம் சேக்கிழார் பெருமான் திருவடிஞானம் பெற்ற தலமென்பர். இதற்குச் சான்றாகச் சேக்கிழார் பெருமான் திருவுருவமும், அவர் தாயார் அழகாம்பிகை திருவுருவமும், அவர் உடன் பிறந்தவரான பாலறாவாயர் திருவுருவமும இத்திருக்கோயிலினுள் அமைந்து உள்ளன.

சேக்கிழார் சுவாமிகளால் திருப்பணிகள் செய்யப் பெற்ற இத்தலம் திருநீலக்குடிக்கு மேற்கிலும், அரிசில் நதிக்கு வடக்கிலும், திருஇடைமருதூருக்கு நிருதித் திசையிலும் அமைந்துள்ளது. இத்தலத்திற்குச் சண்பகவனம், கிரிகன்னிகைவனம் முதலிய பெயர்களும் உண்டு.

நாகராசன் பூசித்தமையால் திருநாகேச்சரமாயிற்று. காலையில் குடந்தைக் கீழ்க்கோட்டமென்னும் நாகேச்சரர் ஆலயத்தையும் உச்சிக்காலத்தில் இத்திருநாகேச்சரத்தையும் மாலையில் திரும்பாம்புரம் சேஷநாத சுவாமியையும் வழிபடல் வேண்டும் என்பர் ஆன்றோர்.

இத்தலத்திற்கு மிக அருகில் வைணவத் திருத்தலங்களுள் ஒன்றாகிய திருவிண்ணகரம் என்று போற்றப்பெறும் ஒப்பிலியப்பன் கோயில் அமைந்துள்ளது. தென் திருப்பதி என்று போற்றப்பெறும் இத்தலத்தைக் கண்டு தரிசிக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாதது.

''உயரும் நறவார் பொழில் நாகேச்சரநகருள் அறவா என வல்வினை ஆசறுமே'' என்றார் திருஞானசம்பந்தப் பெருமான். சுற்றிலும் சோலைகள் சூழ, கிழக்கு நோக்கியமைந்த இத்திருக்கோயில் நாற்கோபுரங்களும், மூன்று பிரகாரங்களும், மடவளாகமும் தேரோடும் நான்கு வீதிகளும் கொண்டு விளங்குகின்றது.

ஐந்து கண்களையுடைய கீழ்க்கோபுர வாசலின் வழியே உள்நுழைந்தவுடன் முன்னே நிருத்தகணபதி, நந்திதேவர், விநாயகர் காட்சி தருகின்றனர். இடப்பால் சூரிய புட்கரணியும், வலப்பால் நூற்றுக்கால் மண்டபமும் உண்டு. புட்கரணியருகில் மழுப்பொறுத்த விநாயகர் சந்நிதியில்

''நறைகமழ்தேன் மல்குதிரு நாகேச் சரம்வாழ்
விறைநுதலென் றாய்மாலை பேச- நிறைகூர்
மழுப்பொருத்தா னீன்ற மழகளிறு கொற்ற
மழுப்பொறுத்தார் தாள்வணங்கு வாம்''

என்று வணங்கிக் கொண்டு, உள்கோபுர வாயிலையடைத்து உள்ளே செல்கிறோம். இந்தப் பிரகாரத்து மதிற்சுவர்களை ஒட்டிச் சுற்றிலும் சென்றால் அலங்கார மண்டபத்தையடைகிறோம். அங்கே வாகனங்களும் காட்சி தருகின்றன. நவக்கிரஹ சந்நிதியும் உள்ளது.

மூலவர் அமைந்த கருவறையை அடுத்த முதல் பிரகாரத்தில் மேல்புற விநாயகர், சந்திரசேகரர், முருகன், பஞ்சலிங்கம், இலக்குமி முதலிய சந்நிதிகள் உள்ளன. வடபுறத்தில் அறுபான்மும்மை நாயன்மார்கள், நடராஜப் பெருமான் சந்நிதிகளும், பள்ளியறையும் உள்ளன.

தென்பால் சேக்கிழார், பாலறாவாயர், அவர் தாயார், நால்வர் சந்நிதிகளும் உள்ளன. சேக்கிழார் சந்நிதிக்கு வலப்பால் அமைந்த அதிகார நந்தி சிலாவிக்கிரகம் காண அரியதொன்று.

சுவாமி கோயில் சோமாஸ்கந்தர் அமைப்புடையது. பெருமான், முருகன், பிறையணிவாள் நுதல் அம்மை சந்நிதிகள் இங்கு இச்சிறப்பை அளிக்கின்றன. சுவாமி கோயில் கோஷ்டத்தில் மகேசுவர மூர்த்தங்கள் உள்ளன.

இத்தலத்தில் மற்றொரு அம்மனாகிய கிரிகுஜாம்பிகை (குன்றுமா முலையம்மை) சந்நிதி மிகவும் சிறப்புமிக்கது. இவ்வம்பிகை சந்நிதி தனிக்கோயிலாகக் காணப்பெறுகின்றது. இச்சந்நிதியின் வெளிப்பிரகாரத்தில் சுற்றிலும் சமண முனிவர்கள் சிலைகள் உள்ளன. இத்தலம் ஒரு காலத்தில் சமணர் செல்வாக்குப் பெற்றிருந்ததை இவை நினைவூட்டுவதாக உள்ளது. ஊரின் கிழக்கேயுள்ள சன்னாபுரமும் இதனை வலியுறுத்துகின்றது.

கிரிகுஜாம்பிகை தவக்கோலத்தில் அருள்பாலிக்கிறாள். பக்கத்தில் கலைமகளும்

திருமகளும் விளங்குகின்றனர். தேவியின் வடிவம் சிலாவிக்ரகம் இல்லாமையின் அபிஷேகம் கிடையாது. தை, ஆடி மாதங்களில் புனுகுத்தைலம் சாத்தப்பெறுகின்றது. இவ்வம்பிகை பலநூறு மக்களின் குலதெய்வமாய் சர்வ சக்யுடன் அருள்பாலிப்பதை இன்றும் கண்கூடாகக்காணலாம்.

இத்தலபுராணத்தில் பெருமானுக்கு இருவடிவங்களும் அம்மைக்கு இரு வடிவங்களும் சொல்லப்படுகின்றன. சண்பக மரத்தடியில் அமைந்த நாகநாதர் சந்நிதியும் அர்த்தநாரீசர் சந்நிதியும், பிறையணிவாணுதல் உமை சந்நிதியும் கிரிகுஜாம்பிகை சந்நிதியும் அவை என்பர். கோயிலின் பரப்பு கீழ்மேலடி 800 X தென்வடலடி 680.

இறைவனை உருவ, அருவ, அருவுருவ வடிவங்களில் வணங்குவதற்கு நம் சிவாலயங்கள் அரிய வாய்ப்பளிக்கின்றன. உருவ வடிவில் வழிபட கணபதி, முருகன், நடராஜர், தட்சிணாமூர்த்தி போன்ற வடிவங்கள் உள்ளன. இலிங்க வடிவம் அருவுருவமானது. அதுவே சிவாலயங்களில் மூலத்தானமாகத் துலங்குவது. அருவ வடிவில் வழிபடுவதற்காகத்தான் திருப்பள்ளியறையில் கண்ணாடி வைக்கப்பட்டுள்ளது. அது ஒளி வடிவில் இறைவனை வணங்குவார்க்கு வகை செய்வது ஆதலின் எவர் எவ்வாறு இறைவனை வணங்க விழைந்தாலும் அவ்வளவிற்கும் வகைசெய்து நம் ஆன்றோர் அமைத்த ஆலயங்களின் அருமைப் பாட்டினை என்னவென்று கூறுவது!

இத்தலத்து விநாயகர் சண்பகவிநாயகர் என்றும் சான்று விநாயகர் என்றும் அழைக்கப்படுகிறார். சிவபெருமான் கட்டளைப்படி முதலில் தன்னைப் பூசித்து வழிப்பட்டுச் சான்றாக விளங்கியதால் சான்று விநாயகர் என்றழைக்கப்படுகிறார். மூலவருக்கு நாகநாதர், நாகேச்சரர் எனும் பெயர்கள் உள்ளன. இரண்டாம் பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் இராகு பகவான் சந்நிதி உள்ளது.

இராகுபகவான் நாகவல்லி, நாககன்னி எனும் தன் இரு தேவியருடன் எழுந்தருளியுள்ளார். இராகு பகவான் பூசித்தமையால் இத்தலத்திற்கு திருநாகேசுவரம் என்ற பெயர் வந்ததாக அறிகிறோம்.

புராண வரலாற்றின்படி இத்தலத்தில் இராகுபகவான் ஸ்ரீநாகநாத சுவாமியை வழிபட்டதோடு இத்தலத்தில் தன்னையும் வழிபடுவோர்க்கும் பல நலன்களையும் அருளும் வரமும் பெற்றுத்திகழ்கின்றார்.

இராகு ஸ்தலமான திருநாகேஸ்வரத்திற்குப் பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் இராகு காலத்தில் அபிஷேக ஆராதனைகளை செய்து காரியசித்தி கைகூடி இன்புற்று வருகிறார்கள்.


இராகு பகவானுக்குப் பால் அபிசேகம் செய்தால் பால் நீலநிறமாக மாறுவது இங்குத் தனிச் சிறப்பாகும்.

16-2-86 அன்று இராகுவின் திருமேனியில் ஐந்தரை அடி நீளமுள்ள பாம்பு தனது சட்டையினை உரித்து மாலையாக அணிவித்த அந்த காட்சியைப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கண்டு வழிபட்டனர்.

அப்பாம்புச்சட்டை பெரிய கண்ணாடிப் பேழைக்குள் வைத்துத் திருக்கோயிலில் காட்சிக்கு இன்றும் வைக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகளில் சுவாமிக்கு சண்பகாரண்யேசுவரர், திருநாகேஸ்வரம் உடையார், மகாதேவர் முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. தலத்துக்குரிய விருட்சம் சண்பகமரம்.

இத்தலத்தில் பன்னிரண்டு தீர்த்தங்களுள்ளன என்பர். அவை முறையே சூரிய தீர்த்தம், இயம தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம், துர்கா தீர்த்தம், கௌதம தீர்த்தம், பராசர தீர்த்தம், இந்திர தீர்த்தம், பிருகு தீர்த்தம், கண்வ தீர்த்தம், வசிட்ட தீர்த்தம் என்பன. சூரிய தீர்த்தம் தற்போது சூரிய புட்கரணி என்ற பெயரில் கோயிலினுள் உள்ளது.




## பறவைக் காவடி வழிபாடு

நீலகிரி மாவட்டம் சேரம்பாடி விநாயகர் கோயிலில் ஆண்டுதோறும் பக்தர்கள் வேண்டிக் கொண்டு பறவைக் காவடி வழிபாடு செய்கின்றனர்.

ஒரு டிராக்டர் வண்டியில் நான்கு பக்தர்கள் வேல் பூட்டி அந்தரத்தில் தொங்கி பறவைக் காவடி வழிபாடு செய்வதை இங்குக் காணலாம்.


# காலச்சுவடுகள்
## – காளையார் கோயில் தேர்

- அழ. முத்துப்பழனியப்பன், எம்.ஏ., பி.எல்.



சிவகங்கை மாவட்டத்தில் காளையார் கோயில் என்ற ஊர் உள்ளது. அது தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம். சங்ககாலத்தில் 'கானப் பேர் எயில்' என்ற பெயர் பெற்று விளங்கியது.

இவ்வூரில் உள்ள அழகிய, நெடிய கோபுரத்தை அமைத்தவர் மருது பாண்டிய மன்னர்கள். இந்தக் கோபுரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே தாமாகவே முன்வந்து வெள்ளையர்களிடம் அகப்பட்டு உயிர் துறந்தனர். அதைப் பற்றிப் பிறிதொரு சமயம் பார்க்கலாம்.



இத்தலத்தில் உள்ள தேர் பழுதுபட்டுவிட்டது. ஆகவே புதிய தேர் செய்ய வேண்டும் என்று மருது மன்னர் உத்தரவிட்டார். புதிய தேர் செய்ய, சிற்பியும் முனைந்தார். தேரில் உள்ள விநாயகர் உருவத்தை முதலில் அமைக்க முற்பட்டார். விநாயகர் சிற்பத் தும்பிக்கை ஒடிந்து விட்டது. சிற்பச் சாத்திரத்தை எடுத்துப் பார்த்தார். பலன் வேறு மாதிரியாக இருந்தது.

ஆகவே புதிய தேர் செய்யும் பணியை தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தார். அரசர் கேட்கின்ற போது, 'தேர்ப்பணி நடைபெறுவதாகப் அளித்தார். பின்னர், தேர்ப்பணி நடைபெறவில்லை பதில் என்று அறிந்ததும், மன்னர் கோபமானார். உடன் தேர்த் திருப்பணி தொடங்கவேண்டும் என்றும், இல்லையெனில் விளைவு வேறாக இருக்கும் என்று ஆணையிட்டார். வேறு வழியின்றிச் சிற்பியும் தேர் செய்ய ஆரம்பித்தார்.

புதிய தேரும் அமைந்தது. வெள்ளோட்ட நாளும் வந்தது. மன்னர் பெரிய மருது, சின்ன மருது, அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் வந்துவிட்டனர். புதிய தேருக்குரிய வழிபாடுகள் நடந்தன. சிற்பிக்குச் சிறப்புச் செய்யப்பட்டது. மரபுப்படி முதல் முதல் தேரின் மீது, இறைவனுக்குப் பதிலாக அமர்ந்து வரும் உரிமை சிற்பிக்கு உண்டு. அவ்வாறே தேர் செய்த தலைமைச் சிற்பி தேரின்மீது அமர்த்தப்பட்டார். மக்கள் வடம் பிடித்தனர். ஆனால் தேர் மட்டும் நகரவே இல்லை.

வெறுப்படைந்த மன்னர், சிற்பியை அழைத்து விபரம் கேட்டார். சிற்பி பதில் சொன்னார், ''அரசே! தேர் நகரும்; ஆனால் ஒரு நிபந்தனை.

மன்னர் : என்ன நிபந்தனை?

சிற்பி : தேர் வெள்ளோட்டம் தொடங்கித் தேர் நிலைக்கு வரும்வரை, சிற்பியான நான்தான், இந்தச் சிவகங்கைச் சீமையின் அரசர் என்று அறிவிக்க வேண்டும். தங்கள் முத்திரை மோதிரத்தையும் எனக்கு அணிவிக்க வேண்டும்.

அரசரைச் சூழ இருந்தவர்கள் கோப முற்றனர். சிற்பியைத் தாக்கவும் முற்பட்டனர். அரசர் அவர்களைச் சாந்தப்படுத்தினார். ''சிற்பி சொன்னால் ஏதேனும் பொருள் இருக்கும்; சிற்பி சொன்ன மாதிரியே செய்வோம்'' என்றார்.

தேர் மீது ஏறி, சிற்பியின் நிபந்தனைப்படி, தேர் வெள்ளோட்டம் தொடங்கி, நிலைக்கு வரும்வரை, சிவகங்கைச் சீமைக்குத் தேர் செய்த சிற்பியே அரசர் என்று அறிவித்தார். அதுமட்டுமின்றி, தன்னுடைய முத்திரை மோதிரத்தையும் சிற்பிக்கு அணிவித்தார்.

பின்னர் சிற்பி, மர ஆப்பு ஒன்றை அசைத்துப் பிடுங்கினார். தேர் புறப்பட்டு விட்டது.

தேர் நிலைக்கு வரும் சமயம்; தேர் மீது இருந்த தலைமைச் சிற்பி தாமே தேர்ச்சக்கரத்துக்குள் குதித்து விட்டார். தேரும் அவர்மீது ஏறிவிட்டது. மன்னர் ஓடிவந்து சிற்பியை மடியில் போட்டுக் கொண்டு கதறினார். சிற்பி பதில் சொன்னார்.

'மன்னா! கவலைப்படாதீர்கள். தேர் சிற்ப சாத்திரப்படி, இந்த நாட்டு மன்னன், வெள்ளோட்டத்தின் போது இறக்க வேண்டும் என்பது விதி. இப்போது நான்தான் இந்த நாட்டின் மன்னன். நான் இறந்து போவேன். நீங்கள் நீடூழி வாழ வேண்டும் என்று கூறி உயிர் விட்டார் சிற்பி. மருது மன்னரின் கலக்கத்திற்குச் சொல்லவா வேண்டும். அரசர் வாழ்வதற்காக, தன் உயிரை மாய்த்துக் கொண்ட அந்தத் தேர்ச்சிற்பியின் வாரிசுகளுக்கு மானியங்களை வழங்கி வாழ வைத்தார்.

அந்தச் சிற்பியின் பெயர் குப்பமுத்து. இதைப் பற்றி நாட்டுப்பாடல் இவ்வாறு குறிப்பிடும் :

''மருது வந்தாலும் தேரோடாது, அவன்
மச்சினன் வந்தாலும் தேர் ஓடாது.
தேருக்கு உடையவன் குப்பமுத்து - அவன்
தோவடம் தொட்டாலே தேர் ஓடும்''

இவ்வாறு, பல சிற்பிகள் தம் உயிரைக் கொடுத்துப் பல சிற்பங்களை உருவாக்கி யுள்ளனர். அவற்றை நன்முறையில் காத்து அடுத்த தலைமுறையினர்க்கு வழங்க வேண்டியது நம்முடைய கடமை.

# தெளிதல்



''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன்

''உங்கள் கதைகள் எனக்கு மிகவும் பிடிக்குமய்யா. மிக அற்புதமாக எழுதுகிறீர்கள்''.

ஒரு இளைஞன் என்னிடம் வந்து பேசினான்.

''அப்படியா.'' மிக்க நன்றி என்று நான் பதிலுக்கு புன்முறுவல் செய்தேன். ''ஆனால், இப்போது உங்கள் கதைகளை நான் படிப்பதில்லை'' என்று அடுத்ததாக ஒரு தகவல் சொன்னான். 'நான் மெல்லப் புருவம் உயர்த்தினேன். ''ஏன்''.

''நீங்கள் ஆன்மீகமாக எழுதுகிறீர்கள் ; அதனால் எனக்கு அவை பிடிப்பதில்லை''.

''ஏன் உங்களுக்கு ஆன்மீகம் பிடிப்பதில்லை தம்பி''.

நான் மரியாதையாக வினவினேன்.

''எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை''.

''எதனால் கடவுள் நம்பிக்கை இல்லை''

''நான் என் மீது நம்பிக்கை கொண்டிருக்கிறேன். எனவே, கடவுள் என்ற விஷயம் எனக்குத் தேவைப்படவில்லை''

''உங்கள் மீது நம்பிக்கை என்றால் என்ன? உங்கள் உடம்பின் மீதா, புத்தியின் மீதா அல்லது வேறு ஏதேனுமா'' நான் கேள்வி கேட்டேன்.

அந்த இளைஞன் சற்றுத் தயங்கினான்.



''இவை எல்லாமும் தான். எல்லாவற்றின் மீதும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது''

''என்ன மாதிரியான நம்பிக்கை?''

''இதை வைத்துக் கொண்டு நான் சீராக தெளிவாக முன்னேற முடியும். வாழ்க்கையில் ஒரு நல்ல நிலைக்கு உயர முடியும். நான் எதை விரும்புகிறேனோ அந்த நல்லவைகளைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது''

''இதுதான் ஆன்மீகம். இதைத்தான் ஆன்மீகம் சொல்லித் தருகிறது'' என்று நான் சொல்ல, அந்த இளைஞன் திகைத்துப் போய் மிகக் கலவரமாய் என்னைப் பார்த்தான்.

ஒரு மனிதனுக்கு தன்மீது நம்பிக்கை ஏற்படுத்துவதுதான் ஆன்மீகத்தினுடைய குறிக்கோள்.

நான் என்று நீங்கள் சொல்லிக் கொள்வது உங்கள் உடம்பல்ல. பலமான புஜமல்ல. சுருளான கேசமல்ல. எடுப்பான நாசியல்ல. பெரிதான கண்களல்ல. வளர்ந்த முதுகல்ல. வலுவான கால்களல்ல. புத்தியும் சேர்ந்திருக்கிறது. உங்கள் ஞாபகசக்தி, உங்களுடைய அலசி ஆராயும் திறன், உங்களுடைய கூர்மையான கவனம், பொங்குகின்ற மனதை ஆற்றுப்படுத்துகின்ற திறன் இவைகளைப் பொறுத்திருக்கிறது.

சனாதனதர்மம் என்று சொல்லப்படுகின்ற இந்த இந்து மதம் மிகப் பழமையானது. நூற்றுக்கணக்கான அறிஞர்கள், ஞானிகள் தோன்றிய அற்புதமான ஒரு கலாச்சாரக் கூட்டம் இது.

பரம்பரை, பரம்பரையாக ''எது நான்?'' என்ற ஆராய்ச்சியை இந்தச் சனாதன தர்மம் செய்து வந்து அதனுடைய முடிவுகளை வெளிப்படுத்தி யிருக்கிறது. சனாதன தர்மம் என்று சொல்லப் படுகிற இந்து மதம் என்ன சொல்கிறது. எந்த ஞானி, எதைப் பற்றி பேசுகிறார் என்று ஆராய்பவர்கள் வெகு சிலர். எந்த ஆராய்ச்சியுமில்லாமல் பெரியவர்களைப் பின்பற்றுகிறவர்கள் பலர். கடவுளைத் தேடாமல் கடவுளை எதிர்ப்பது என்பது பேதமை. ஆன்மீகத்தை அறிந்து கொள்ளாமல் எனக்கு ஆன்மீகம் தேவையில்லை என்பது அசட்டுத்தனம்.

''நீங்கள் சொல்கிறீர்களே நான் என்பது இந்த உடம்பு, புத்தி இரண்டும் சேர்ந்ததுதான் என்று விளக்கினீர்களே'' அதை வெகு நுணுக்கமாக இந்தச் சனாதன தர்மம் பார்த்திருக்கிறது.

சிந்தனை கெட்டுப் போவதற்குக் காரணம் உங்கள்



# காதல் மரம்

திருவொற்றியூர் திருக்கோயிலில் உள்ள மகிழமரத்திற்குக்காதல் மரம் எனப்பெயர்வழங்குகின்றது.

சுந்தர மூர்த்திநாயனார் - பரவைநாச்சியாரை இம்மகிழ மரத்தின் அடியில் திருமணம் செய்து கொண்ட படியால் இங்குள்ள மகிழமரம் ''காதல்மரம்'' எனச்சிறப்பிக்கப்படுகின்றது.

மாசிப் பெருவிழாவின் போது சுந்தரர் - பரவையார் திருமணம் கொள்ளும் மகிழடி சேவை விழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

உடம்பு. உங்கள் உடம்பு கெட்டுப் போவதற்குக் காரணம் உங்கள் சிந்தனை. இது ஒன்றின் தொடர்பால் ஒன்று விளைவது. எனவே உணவு என்ற பழக்கத்தை மிகமிகத் தூய்மையாக வைத்துக் கொள்கின்ற பல்வேறு முயற்சிகளைச் சொல்கிறது. உன்னுடைய வேலை என்ன. அதன் பொருட்டே உன் உணவும் இருக்கும் என்று வரையறுத்திருக்கிறது.

உனக்கு ஆன்மீகப்பணிதானா. கடவுள் தேடும் வேலைதானா. உனக்கு மரக்கறி உணவு போதுமே. மாமிசஉணவு தேவையில்லையே என்று விளக்குகிறது.

குருமாவும், நெத்திலி மீனும், ஆட்டுக்கால் சூப்பும் சாப்பிடுகிறவர்களுக்கு அமைதி வராது. அருள் பொங்காது என்று யோசித்திருக்கிறது.

கடுமையான உழைப்பா? இரவும் பகலும் நடந்து நடந்து போய் செய்யும் தொழிலா ? ஆமெனில் உங்களுக்கு மாமிசம் உணவு. மாமிசம் மட்டுமே உணவு. மரக்கறி அரிசிச் சோறால் ஆவது ஏதுமில்லை என்று விளக்கியிருக்கிறது.

மாமிசம் மட்டுமல்ல. மாமிசம் போன்ற சக்தியுடைய தாவர உணவுகளையும் எடுத்து ஒதுக்கியிருக்கிறது. உளுந்து வடை என்பது கிட்டத்தட்ட மாமிசம். மாமிசத்தின் சக்தி மொத்தமும் உள்ள விஷயம். உளுந்தை சில பெரியவர்கள் உதறுவார்கள். உப்பில்லாத உளுந்து வெகு நிச்சயமாய் மாமிசம் என்று பதறுவார்கள். அதைப் போல சில காய்களைத் தவிர்ப்பார்கள். வாயுவைக் கிளறும் கிழங்குகளைத் தவிர்ப்பார்கள். உளுந்து வயிற்றில் அதிகமானால் ஒரு மந்தநிலை உண்டாகும். சிந்தனைத் தேக்கம் ஏற்படும். வேகமும், சுறுசுறுப்பும் விடைபெற்றுப் போகும் என்று கவலைப்படுவார்கள். ஆன்மீக வாழ்க்கைக்கு இந்த மந்தநிலை உதவாதே என்று அவைகளை மறுதலிப்பார்கள்.

உணவு பகுத்துப் பிரித்தல் மட்டுமல்ல. எப்போது உண்ண வேண்டும். எவ்வளவு உண்ண வேண்டும் என்பதும் வரையறுக்கப் பட்டிருக்கிறது. எப்படி உண்ண வேண்டும் என்பதும் கூட இதனுடைய உச்சகட்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது.

நீ உணவில் மிகக் கவனம் செலுத்த வேண்டுமெனில் உன் உணவை நீயே தயார் செய்து கொள். இன்னொருவர் உன் உணவை தொடலாகாது என்று ஒரு விதிமுறை இருக்கிறது. நானே இந்த விதிமுறை கண்டு சற்று ஆச்சரியப்பட்டுப் போனேன்.

தனக்கு வேண்டிய உணவை இன்னொருவர் சமைத்துக் கொடுத்தால் என்ன என்று நான் கேள்வி எழுப்பினேன்.

ஒரு பெரியவர் சரியான பதில் சொன்னார். ''நீங்கள் என்மீது அன்பு கொண்டவர். நீங்கள் எனக்கு இந்த உணவை சமைத்துக் கொடுக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். கிழவர் ஒல்லியாக இருக்கிறாரே, வலுவற்று இருக்கிறாரே, இன்னும் இரண்டு கரண்டி நெய் விடுமோமே என்று உங்களுக்குத் தோன்றும். சிக்கலான உணவும், சற்று கொழுப்பான உணவும் சேர்க்கத் தோன்றும். அன்பின் மிகுதியால் எனக்கு அளவுக்கு அதிகமாக உணவு போட்டுவிடுவீர்கள். தயார் செய்து விடுவீர்கள். உங்கள் அன்பு எனக்குத் தேவையில்லை. அது இடைஞ்சல்''.

''ஒரு சிறு கரண்டி கூடுதலான உணவைக்கூட நான் எடுக்கத் தயாராக இல்லை. அது தவிர உங்களுடைய கோபதாபங்கள், உங்களுடைய காமக்ரோதங்கள், நீங்கள் தயார் செய்கின்ற உணவில் இறங்கி அந்தக் கோப தாபங்கள், காமக்ரோதங்கள் என்னைத் தீண்டவும் வாய்ப்பிருக்கிறது. இது மிகச் சூட்சுமமான பார்வை''.

''எனவே, வேறொருவரில்லாது நானே என் உணவை தயார் செய்து கொண்டால், அளவுக்கதிகமாக தயார் செய்து கொள்ள மாட்டேன். என் மனநிலைதான் எனக்குத் திரும்பி வரும். வேறொருவர் மனநிலையால் நான் தாக்கப்பட மாட்டேன். அடுத்ததாக நானே என் உணவைத் தயார் செய்து கொள்கிறபோது ருசி என்ற விஷயம் அறுபட்டுப் போகும். நானே என் உணவைத் தயார் செய்து கொள்கின்ற வேளையில் ருசிபற்றி கவலைப்படாமல் ஏதோ ஒன்றை சமைத்து முடித்தோமென்று விழுங்க ஆரம்பித்து விடுவேன். ருசியில் சிக்க மாட்டேன்''.

''நீங்கள் தயார் செய்தால், கூட கொஞ்சம் உப்பு போட்டிருக்கலாம். கொஞ்சம் அதிகம் வதக்கியிருக்கலாம். இந்தப் பருப்பை நன்றாக வறுத்திருக்கலாம் என்ற ஆசையான எண்ணங்கள் தோன்றும். இதில் நான் தயாரித்துக் கொள்கின்ற உணவு தினம்தினம் சாப்பிட்ட உணவு என்கிற அரக்கப் பிடியிலிருந்து நான் விடுபட்டு வெறுமே உயிர்வாழத் தேவையான ஒரு விஷயமாக கைக்கொள்வேன். தாவர உணவிலேகூட வேகவைத்தக் காய்கறிகள் என்று இப்போது சாப்பிடத் துவங்கியிருக்கிறேன். சிறிதளவு உப்பு கலந்து கொள்கிறேன். உப்பையும் மெல்ல மெல்ல நிறுத்திவிடுவேன். உணவுதான் என்னை அதிகம் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கிறது'' என்று அப்பெரியவர் சொல்ல நான் திகைத்துப் போனேன்.

எந்தவித அலட்டலும் இல்லாமல் அந்த

ஆன்மீகப் பெரியவர் அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். சைவ உணவில் திடமாக, ஆரோக்கியமாக பலபேருக்கு உதவி செய்கின்ற மனப்பக்குவம் உள்ளவராக வாழ்ந்து கொண்டிருக்கிறார், என்று சொல்ல அந்த இளைஞன் வியப்போடும் ஆவலோடும் என்னைப் பார்த்தான்.

அது தவிர, இந்த உடம்பை கவனித்துக் கொள்ளுதல் என்பது இப்பொழுது எவ்வளவு தெளிவாக வருகிறது பார்த்தாயா?

இது தான் ஆன்மீகம்.

புத்தியை கவனித்தல் என்றால் என்ன ? அதை எப்படிக் கவனிப்பது. உணவைப் பேணுவதுபோல புத்தியையும் பேண வேண்டுமே. என்ன செய்வது என்று ஒரு கேள்வி எழும். அப்படிக் கேள்வி எழுந்தால் அதற்கு முதல் விடை சத்சங்கம். அதாவது நல்லோர்கூட்டு.

இது மட்டும் போதுமா ? சத்சங்கம் மட்டும் காப்பாற்றிவிடுமா? இல்லை வேறு என்ன செய்யும். இந்த சத்சங்கத்தால் நல்ல பழக்க வழக்கங்களும் ஏற்படும்.

புத்திக்கு நல்ல பழக்க வழக்கம் எது ?

மந்திரஜபம். யானையின் துதிக்கை அலைவது போல புத்தி சதா வெவ்வேறு விஷயங்களைத் தொட்டுக் கொண்டிருக்கும். அந்த யானையின் துதிக்கையை அப்படி தொடாமல் இருக்கும்படியாக பாகன் ஒரு சங்கிலியை கையில் கொடுத்து விடுவான். அந்தச் சங்கிலியை யானையின் துதிக்கை பிடித்துக் கொண்டிருக்கும். கீழே போடத் தெரியாது. வேறு எதையும் தோண்டாது.

அதே போல அலைகின்ற புத்திக்கு மந்திரஜபம் என்ற விஷயத்தைக் கொடுத்துவிட்டால் மந்திரத்தைத் திரும்பத்திரும்ப சொல்லுகின்ற பழக்கம் ஏற்பட்டுவிடும். மந்திரத்தைத் திரும்பத்திரும்ப சொல்லுகின்ற பழக்கம் ஏற்பட்டுவிட்டால் பழக்கத்தினால் மந்திரஜபம் மனதைவிட்டுப் போகாது. புத்தி வெவ்வேறு இடங்களில் தேவையற்றுத் தொடுவதும் நின்று போகும். புத்திக்கு ஏகாக்கிரகம் என்று சொல்லப்படுகின்ற ஒரு முனைப்பு வந்துவிடும். புத்திக்கு ஒரு முனைப்பு வந்துவிட்டால் கவனிப்பது என்பது மிகச்சிறந்த முறையில் ஏற்படும்.

சுவாசத்தை நன்கு புரிந்து கொண்ட நம் முன்னோர்கள், சுவாசத்தினால் தான் புத்தி இயக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டார்கள். புத்தியினுடைய தன்மை மாறுபாடு அடைய சுவாசம் காரணம். புத்தி மாறுபாடு அடைய சுவாசமும் மாறுபாடு அடைகிறது. எனவே, மூச்சைசீராக வைத்துக் கொள்ளுதல் என்பது, புத்தியைச் சீராக வைத்துக் கொள்ளுதல் என்பதற்குண்டான விஷயம்.

மூச்சை எந்த அளவுக்கு உள்ளே இழுப்பது. அதற்கு ஒரு அளவு என்ன என்ற கேள்வி வரும். அந்த அளவை துல்லியமாக ''ஓம் புற்புவஸ்ஸுவஃ தத்சத்தர்வரேண்யம்'' என்று மந்திரரூபமாய் உள்ளிழுக்கின்ற அளவைச் சொல்லி யிருக்கிறார்கள். வெளியே விடுவதற்கும் இப்படியொரு வாக்கியத்தைச் சொல்லி யிருக்கிறார்கள்.

## காளிங்கநர்த்தனம்



மனிதனின் ஆழமான, அமைதியான மனமெனும் ஏரியில் ஆசை, கோபம், பேராசை, பற்று, தற்பெருமை, பொறாமை என்ற 6 தலைகள் கொண்ட நச்சுப்பாம்பு உள்ளது.

இறைவன் திருநாமம் அத்தகைய பதுங்கியிருக்கும் கொடிய நாகத்தை மேலே வரச் செய்து, அதன் நஞ்சைஅழித்து, மனத்திற்கு இனிமையை சாஸ்விகத்தைத் தருவதே உணர்த்துவதே காளிங்க நர்த்தனம் ஆகும்.

இவைகளைத்தான் சனாதன தர்மம் என்ற இந்துமதம் விதம்விதமாகச் சொல்லித் தருகிறது. இது இதோடு முடியவில்லை. இதைத்தாண்டி உடம்பு இயங்கவும், புத்தி இயங்கவும் எது காரணம், எங்கே இருக்கிறது, அந்த உயிர்ச்சக்தி என்று ஆராய்ந்து அதற்கு ஆன்மா என்று பெயரிட்டு அதைப்பற்றியும் விதம்விதமாகப் பேசுகிறது.

''தம்பி, உடம்பையும், புத்தியையும் முதலில் தெரிந்து கொள். ஆன்ம அறிவு தானாக ஏற்படும். எவரும் சொல்லித்தரவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் அது சொல்லிக் கொடுத்துப் புரிவதில்லை. நீயாக உணர்வது. நீயாக உணர்கின்ற ஒரு தகுதியை உனக்குள் ஏற்படுத்திக் கொள். எனவே, மிதமான உணவு, மிதமான தூக்கம், மிதமான பேச்சு என்று வாழ்க்கையை பக்குவப்படுத்திக் கொள்'' என்று சொல்ல அந்த இளைஞன் மௌனமாக தலைகுனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் சிந்திக்கட்டும் என்று நான் அப்பால் போனேன்.

# கோமுகியின் கீழ் அமுதோகர்


(ஆலங்குடி ஆபத்சகாயர் ஆலயத்தில் நிகழ்ந்த ஓர் அற்புதம்)

முசுகுந்த சக்கரவர்த்தியின் முக்கிய மந்திரியாகப் பணியாற்றியவர் அமுதோகர். இவர் மிகச் சிறந்த சிவபக்தர். சகல சாஸ்திர பண்டிதர்.

ஆலங்குடி ஆபத்சகாயருக்கு ஆலயம் கட்டும் பணியில் அமைச்சர் அமுதோகர் ஆர்வத்துடன் ஈடுபட்டு இருந்தார்.

அமைச்சர் அமுதோகரை அழைத்து முசுகுந்த சக்ரவர்த்தி ''திருக்கோயில் கட்டிவரும் தங்கள் புண்ணியத்தில் ஒரு பகுதி எனக்கும் கிட்ட வேண்டும். ஆகவே பொக்கிஷத்தில் இருந்து வேண்டிய பொருளை எடுத்துக் கொண்டு திருப்பணியை விரைந்து முடித்திடுக'' என்று ஆணையிட்டார்.

சக்கரவர்த்தி அவ்வாறு அறிவுறுத்தியும் கூட அமைச்சர் அமுதோகர் அரசுக் கருவூலத்தில் இருந்து ஒரு சிறு காசும் எடுத்துக் கொள்ளாமல்,



ஆபத்சகாயர் ஆலயத் திருப்பணி முழுவதையும் தம் சொந்தமான செல்வத்திலிருந்தே செய்து முடித்து விட்டார்.

இது அறிந்த முசுகுந்த சக்கரவர்த்தி மிகுந்த கோபம் கொண்டான். ''என் ஆணையை ஏற்று அரசுக் கருவூலத்தில் இருந்து பொருள் எடுத்துக் கொள்ளாத அமைச்சர் அமுதோகர் தலையைத் துண்டியுங்கள்'' என்று வீரர்களுக்கு உத்திரவிட்டுவிட்டான்.



வீரர்களுக்கு அமைச்சர் அமுதோகரின் தலையைத் துண்டிக்க மனம் வரவில்லை. சிறந்த சிவபக்தரான அமைச்சர் அமுதோகரைத் தப்பித்துப் போகுமாறு மன்றாடினார்கள்.

அமைச்சர் அமுதோகர் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ''அரசக் கட்டளையை நிறைவேற்றிக் கடமையைச் செய்யுங்கள்'' என்று வேண்டிக் கொண்டார்.

வேறு வழியில்லாமல் வீரர்கள் அமைச்சர் தலையைத் துண்டிக்க வாளை ஓங்கினர்.

அதற்குள் ஆபத்சகாயர், திருவருள் புரிந்து அமுதோகரின் உடலிலிருந்து உயிர் நீங்குமாறு செய்து விட்டார்.

அமைச்சர் அமுதோகரின் உயிர் பிரியும் போது அக்கோயிலெங்கும், அரண்மனை எங்கும் ''அமோதக'', ''அமோதக'' என்ற பேரொலி எங்கும் பரவி எதிரொலித்தது.

அப்பேரொலியைக் கேட்ட முசுகுந்த சக்கரவர்த்தி துணுக்குற்றார். ஆபத்சகாயனைத் தேடி வந்து தன்னை மன்னிக்குமாறு மன்றாடினார். அவருடைய அபச்சாரம் நீக்கியருளினார் ஆபத்சகாயர்.

இன்றும் ஆபத்சகாயரின் கருவறையின் வெளியே கோமுகியின் கீழ் அமுதோகரின் சரீரம் இருப்பதாக நம்பப்படுகின்றது. அபிஷேக நீர் விழும் போது ''சிவசிவ'' என்ற அமைச்சர் அமுதோகரின் தியானஒலி மிக உன்னிப்பாகக் கேட்பவர்களின் காதில் ஒலித்துக் கொண்டே இருப்பதாகப் பக்தர்களால் நம்பப்படுகின்றது.





# திருவிளையாடல் புராணம்

இரா.அரங்கசுவாமி

## எல்லாம் வல்ல சித்தரான படலம்

பாண்டிய நாட்டிலுள்ள அனைவரும், அபிடேசுபாண்டியனும் இம்மை மறுமை என்ற இருநிலைக்கும் உரிய எல்லா நலன்களையும் அடைய வேண்டும் என்பதற்காகவே ''எல்லாம் வல்ல சித்தராகத் திருவேடம் தாங்குவதற்கு மதுரைத் திருக்கோயிலில் எழுந்தருளிய'' குணம் குறி கடந்த உருவினை ''யுடைய சோமசுந்தரக் கடவுள் திரு உள்ளங்கொண்டார்.

அதற்கு ஏற்றவகையில் தலை முதல் கால் வரை தேவையான எல்லாவகை மாற்றங்களையும், ஒப்பனையையும் தன் தோற்றத்தில் ஏற்படுத்திக் கொண்டு வெளிப்பட்டுக்காட்சியளித்தார்.

கடைவீதிகளிலும், சித்திரக் கூடத்திலும், நாற்சந்திப்பிலும் , நிலா முற்றத்திலும், உப்பரிகைகளிலும், மாளிகைகள், திண்ணைகள் ஆகிய இடங்கள் தோறும் சித்தர் பெருமான் அருள் வடிவம் காட்டினார்.

கிழக்கே இருப்பவர் போலக் காட்சி யளித்து மேற்கே போயிருப்பார். திடீர் என்று மறைந்து விடுவார். தூரத்தில் உள்ள மலையை அருகில் வரச் செய்வார். அருகில் இருக்கும் மலையை நெடுந்தூரம் செல்லச் செய்வார். சிறுவர்களை முதியோர் ஆக்குவார். முதியோரை இளைஞர் ஆக்குவார். மலடியை மகப்பேறு அடையச் செய்வார்.

உடல் ஊனமுற்றோரின் உறுப்புகளைச் சரிசெய்து எல்லோரையும் போல் ஆக்குவார். தரம் குறைந்த உலோகங்களை உயர்ந்த உலோகங்கள் ஆக்குவார். உடையவரின் செல்வங்களை வறியவர்களின் இல்லத்தில் நிரம்பச்செய்வார்.

நண்பர்களைத் தம்மிடையே பகை கொண்டு சண்டையிடச் செய்வார். எட்டிமரத்தில் இனிய சுவைமிக்க பழங்களைப் பழுக்கச் செய்வார். காலமில்லாத காலத்தில் ஆற்றில் நீர் பெருக்கெடுக்கச் செய்வார். கடல்நீரை நன்னீராக்குவார்.

கருடனைப்போல வானத்தில் பறந்து, கார்மேகங்களைப் பிழிந்து, இடியோடு மழையைப் பொழிய வைத்து, காண்போரை வியப்பில் ஆழ்த்துவார். இரவில் சூரியனைத் தோன்றச் செய்வார். சந்திரனைப் பகலில் தோன்றச் செய்வார்.

இவ்வாறு கடவுளாகிய சித்தர் பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார். இதை அறிந்தான் அபிடேகபாண்டியன். அந்த சித்தரை அழைத்து வரச் சொன்னான். அச்சித்தர் தான் அங்கு வருவதற்கில்லை என்று கூறிவிட்டார்.

அமைச்சர்கள் மன்னரிடம் இதைக் கூற, ''இறைவனின் திருவருளைப் பூரணமாய்ப் பெற்ற ஞானியரும், யோகியரும் அப்படித்தான் செய்வார்கள். அவர்கள் திருமால், பிரமன், இந்திரன் போன்றவர்களையே பொருட்படுத்த மாட்டார்கள் என்றால் பூமியை ஆளும் மன்னனையா மதிப்பார்கள்'' என்றான்.

## கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்

''பெரியோரை மதிப்பதே இயல்பு. நானே சென்று அவரைக் காண்கிறேன்'' என்று கூறி, சித்தரைக் காணச் சென்றான் அபிடேகபாண்டியன். அபிடேகபாண்டியனின் உள்ளக்குறிப்பை உணர்ந்த சித்தமூர்த்தி இந்திரவிமானத்தில் வடமேற்குத்திசையில் எழுந்தருளினார்.

அன்று தைமாதம் முதல் நாள், பாண்டியன் திருக்கோவிலுக்குச் சென்று வணங்கி வலம் வரும் போது அவனுடன் வந்திருந்த மெய்க்காப்பாளர்கள் சித்தமூர்த்தியைக் கண்டு பிரம்பினை நீட்டி ''இவ்விடத்தை விட்டு எழுந்து போகக்கடவீர்'' என்று கூறினர்.

அம்மெய்க்காப்பாளர்க்குப் பின்னால் வந்து கொண்டிருந்த பாண்டியன் சித்தமூர்த்தியை அணுகி, ''உமது பெயர் என்ன? உமது நாடும், ஊரும் யாது ?'' என்று வினவினான். உடனே சித்தமூர்த்தி ''அப்பா! நாம் எந்த நாட்டிலும், நகரிலும் திரிவோம். ஆயினும் இப்போது நாம் தங்கியிருக்கும் ஸ்தலம் காசி ஆகும். அடியார்களே எம் உறவினர். தில்லைவனம் முதல் எல்லாச் சிவத்தலங்களையும் வணங்க வந்தோம். எந்நாளும் வித்தை செய்து கொண்டு திரியும் சித்தர் யாம். பாண்டியனே! உம்மிடத்தில் நாம் பெறத்தக்கது ஒன்றும் இல்லை'' என்று கூறிப்புன்னகை புரிந்தார்.

இதைக்கேட்ட பாண்டியன் ''இவரைஎப்படி அளந்தறிவேன்?'' என்று எண்ணினான். அப்போது வேளாளன் ஒருவன் செழித்தோங்கிய கரும்பு ஒன்றினைக் கையில் கொண்டு வந்து அரசனை வணங்கி நின்றான்.

அரசன் அக்கரும்பினைக் கையில் வாங்கினான். சித்தமூர்த்திகளை நோக்கினான். ''வல்லவரே! இதோ நிற்கும் இக்கல்லானைக்கு இக்கரும்பினை உண்பிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் எல்லாம் வல்ல சித்தர் நீரே! மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக்கடவுளும் நீரே! நீர் விரும்பியதை அளிப்பேன்'' என்றான்.

பாண்டியன் கூறியதைக் கேட்ட சித்தமூர்த்தி ''பாண்டியனே! எமக்கு உம்மால் வரும் பயன் ஒன்றும் இல்லை. இருப்பினும் இந்தக்கல்லானை இதோ கரும்பினைக் கடிக்கின்றதைப் பார்''. என்று கூறினார். பின் கல்லானை மீது சித்தமூர்த்தி சிறிது கடைக்கண் சாத்தி அருளினார். என்ன வியப்பு! உடனே அக்கல்லானை கண்ணைத் திறந்தது. வாய்திறந்து பிளிறியது. பாண்டியன் கையிலுள்ள கரும்பை வாங்கிக் கடித்துத் தின்றது.

சித்தமூர்த்தி மீண்டும் யானையின் மீது கடைக்கண் சாத்தியருளினார். உடனே கல்லானை பாண்டியன் கழுத்திலுள்ள முத்துமாலையை எட்டிப்பிடுங்கியது. உடனே மெய்க்காவலர் கோபம் கொண்டு யானையை அடிக்கக் கோலினை ஓங்கி நெருங்கினார்.

சித்தமூர்த்தி கோபம் கொண்டு அவர்களைப் பார்த்தார். அதற்குள் யானை மாலையை விழுங்கி விட்டது. பாண்டியன் மிக்க கோபம் கொண்டான். அதனைக் கண்ட மெய்க்காவலர் சித்தமூர்த்தியை அடிக்க நெருங்கினர். உடனே சித்தமூர்த்தி புன்னகையுடன் ''நில்லுங்கள்'' என்றார்.

உடனே அவ்வீரர்கள் வைத்த அடியைப் பெயர்க்க முடியாமல் நடுங்கி ஓவியம் போல் அப்படியே அசைவற்று நின்றனர். அதனைக் கண்ட பாண்டியன் கோபம் மாறி, அச்சம் கொண்டு சித்தமூர்த்தியின் பாதங்களில் விழுந்து வணங்கி ''எளியேன் பிழையைப் பொறுத்தருள்க'' என்று வேண்டினான்.

உடனே சித்தமூர்த்தி மனமகிழ்ந்து ''வேண்டும் வரம் கேள்'' என்று அருளினார். உடனே பாண்டியன் நற்புத்திரப் பேறு அருள்க'' என்று வேண்டினான். உடனே சித்தமூர்த்தி அங்ஙனமே அருள்புரிந்தார்.

பின்னர் சித்தமூர்த்தி யானையின் மீது அருள் நோக்கம் வைத்தார். உடனே யானை தனது துதிக்கையினை நீட்டி முத்துமாலையைப் பாண்டியனிடம் கொடுத்தது. பாண்டியன் அதனை வாங்கி அணிந்து கொண்டான். அப்போது சித்தமூர்த்தி மறைந்தருளினார். யானையும் பழையபடி கல்லானையாக மாறியது. இது இறைவனின் திருவிளையாடலே என்றுணர்ந்த அபிடேகபாண்டியன் இறைவனை வணங்கித் துதித்து அபராதக் காணிக்கையும் செலுத்தி நின்றான்.

பின்னர் அரண்மனை அடைந்து ஆட்சிபுரிந்து வந்தான். சித்தமூர்த்தியின் திருவருளால் விக்கிரமனுக்கு முடிசூட்டி அவனிடம் நாட்டை ஒப்படைத்தான். இறுதியில் அபிடேகபாண்டியன் சிவலோகம் சேர்ந்தான்.

(தொடரும்)

## இரண்டு இடங்களில் இருக்கும் ஒருவர்



சிவாலயங்களில் அறுபத்து மூவரிலும் இருக்கின்றவர், அவரே தனிச் சன்னிதானத்திலும் வீற்றிருக்கின்றார். அவர்தாம் சிவ புண்ணியத்தை அடியார்க்கு வழங்கும் சண்டேசுவரர்.

## திருக்கோயில் விளக்கெரிக்க, மனைவியை விற்க முயன்ற நாயனார்.

திருவொற்றியூர் சக்கரபாடித் தெருவில், எண்ணெய் ஆட்டி விற்கும் சொக்கார் குலத்தில் தோன்றியவர் கலிய நாயனார்.

திருவொற்றியூர் தியாகராஜருக்கு இரவும் பகலும் தானே ஆட்டிய எண்ணெயை எடுத்துக் சென்று திருக்கோயிலில் விளக்கேற்றும் திருத்தொண்டு செய்து வந்தார்.

கலிய நாயனார் இறைவர் திருவிளையாடலால் விரைவில் கடனாளியானார். அப்போதும் விளக்கேற்றும் திருத்தொண்டினைக் கைவிட வில்லை.

தன் வீட்டை விற்றுக் கோயில் தீபம் ஏற்றிய இம்மகாபக்தர், விளக்கேற்றப் பெருள் வேண்டித் தம் மனைவியாரையே விற்க முயன்றார். ஆனால் யாரும் இவர்தம் மனைவியாரை வாங்கத் துணியவில்லை.

''விளக்கேற்றும் திருப்பணி தடைப் படுவதா?'' எனத் தம் கழுத்தை அறுத்துக்



கொட்டிய குருதியால் விளக்கேற்ற இவர் முயன்ற போது ஒற்றீசர் இவருக்குச் சிவபதம் தந்து ஆட்கொண்டார். திருக்கோயிலில் விளக்கேற்றினால் வீடுபேறு பெறுவது திண்ணம்.

# சுகமுனிவர் வழிபட்ட ஸ்ரீ சுகவனேஸ்வரர்

- ஏ.கிருஷ்ணன்

சேரமண்டலத்தைச் சேர்ந்த கொங்குவள நாட்டில் சேலம் என்னும் புகழ்பெற்ற திருத்தலம் உள்ளது. இத்திருத்தலத்தில் அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில் நகருக்கு நடுவில் உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது.

சாபம் பெற்ற சுகமுனிவர் கிளியுருவங் கொண்டு இறைவனை வழிபட்டதால், கிளிமுகம் கொண்ட சுகமுனிவரின் மூலவர், உற்சவ மூர்த்தியும் உள்ளது. இதனால் சுகவனம் என்றும், சுகவனேசுவரர் என்றும் சொல்லப்படுகிறது. இங்குள்ள மணிமுத்தாறு நதி பல தீர்த்தங்களைக் கொண்டுள்ளது விசேஷமாகும்.

ஸ்ரீ சுகவனேஸ்வர ஆலயம் புராணச் சிறப்பு பெற்றதாகும்.

1. **கிரேதாயுகத்தில் :** தேவர்களுடைய பாவத்தைப் போக்கியதால் இததலத்திற்குப் பாபநாசம் என்றும், பெருமானுக்கு பாபநாசர் என்றும் பெயர்.

2. **திரேதாயுகத்தில் :** காமதேனுப்பசு வழிபட்டதால் பட்டீஸ்வரம் என்றும் பெருமானுக்குப் பட்டீஸ்வரர் என்றும் பெயர்.

3. **துவாபரயுகத்தில் :** ஆதிசேடன் வழிபட்டதால் இத்தலத்திற்கு நாகீசுரம் என்றும், எம்பெருமானுக்கு நாகீசர் (நாகேசுவரர்) என்றும் பெயர் . மேலும் ஆதிசேஷன் வழிப்பட்டதால் இத்தலத்தில தவளைகள் வசிப்பதில்லை என்றும், அமண்டூகத்தீர்த்தம் எனவும் கூறப்படுகின்றது.

**4. கலியுகத்தில் நடைபெற்ற அதிசய வரலாறு**

முன்பொரு காலத்தில் பிரம்ம லோகத்தில் முப்பத்துமுக்கோடி தேவர்களும் பிரம்மதேவனின் படைப்புத் தொழிலை ஒன்றைப் போல் இல்லாமல் ஒன்றில் மற்றது நுண்மையாக வேறுபட்டிருக்கும் விதத்தினை பாராட்டினார்கள். இச்சபையில் வியாசர் மற்றும் திலோத்தமையின் தவப்புதல்வரும், ஆன்றோர் போற்றும் சுகமுனிவரும் இருந்தனர். பிறகு சுகமுனிவர் கலைமகளிடம் சென்று (சரஸ்வதி) பிரம்மசபையில் நிகழ்ந்தவற்றைக் கூறினார். உடனே சரஸ்வதி படைப்பது பிரம்மாவானாலும், அனைத்து ஜீவராசிகளுக்கும் மொழி, குரல் தந்து உயரவைப்பது நான்தான் என்று நான்முகனிடம் கூறுங்கள் என்று கூறவே, சுகர் பிரம்மதேவனிடம் இதைத் தெரிவித்தார். உடனே கோபமடைந்த பிரம்மதேவன் கற்றறிந்த முனிவராயிருந்தும் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைப் போல் செயல்பட்டதால் கிளியாக மாறக் கடவீர் எனச் சாபமிட்டார். அறியாது செய்த பிழையை - தவறை மன்னித்து அருளும்படி சுகர் வேண்ட பிரம்மதேவனும் மனம் இறங்கி பாபநாசப்பதியில் உள்ள ஈசனைப் பூசிக்க உன் பாபம் நீங்கும் ; பழைய உருபெறுவாய் என்றார்.

சுக (கிளி) உருவம் கொண்ட சுகரும் அவ்வழியே நடந்து, இத்தலம் வந்து இங்கு கிளிகளுக்கு நல்வழிகாட்டி ஈசனை வழிபட்டுவந்தார்.



பிறகு வேடன் ஒருவன் இக்கிளிக் கூட்டத்தை பிடிக்க முயன்றான். பயந்த கிளிகள் பறந்து சென்று ஒரு புற்றில் மறைந்தன. விடாமல் துரத்திய வேடன் புற்றினைக் கோடாலியால் வெட்ட கிளிகள் அனைத்தும் மாண்டன. பிறகு சுகமுனிவரான கிளி, வேடனின் கோடாலியால் லிங்கம் பாதிக்கப்படும் என்ற அச்சத்தால் தன் இறக்கையை விரித்து ஈசனை காத்தார். அதனையும் வேடன் தாக்கியதால் அக்கிளியும் மாண்டது. அடிபட்டதால் லிங்கத்திலிருந்து ரத்தம் கொட்டியது. அதன் மீது தழும்பும் ஏற்பட்டது. பிறகு சாபம் நீங்கி சுயஉருவம் கொண்ட சுகர் மூலம் விவரம் அறிந்த வேடன், தன் தவறுக்காக தன்னையே மாய்த்து கொண்டான். விடாமல் செய்த சிவபூஜையின் காரணமாக சுகரோடு சேர்ந்து மற்ற கிளிகளும் சிவலோகம் அடைந்தார்கள். வேடனும் நற்கதி அடைந்தான் என இக்கோயில் தலவரலாறு கூறப்படுகிறது.

சுகமுனிவர் சுகஉருவம் (கிளிவடிவம்) கொண்டு பூஜித்ததால் இறைவன் சுகவனேசுவரர் ... கிளிநாதர் என அழைக்கப்படுகின்றார்.

**திருவிழாக்கள் :**

இத்திருக்கோயிலில் தினந்தோறும் ஐந்துகாலப் பூஜைகள் நடைபெறுகின்றன. மேலும் வைகாசி, விசாகத் தேர்திருவிழா, சூரசம்ஹாரம் விழா, ஆனி திருமஞ்சனம், அன்னாபிஷேகம், கிருத்திகை, சஷ்டி பிரதோஷம், நாயன்மார்கள் குருபூஜை, நவராத்திரி விழா முதலானவையும் சிறப்பாக கொண்டாடப்புடுகின்றன.



# மகாபாரதம்

முனைவர் த.அமிர்தலிங்கம்

14



குருசேத்திரத்தை நோக்கி இரு தரப்புப் படைகளும் வந்து குவிகின்றன. பாஞ்சாலியின் தந்தையாகிய துருபதராசன் தன்னுடைய மருகர்களாகிற பாண்டவர்களுக்குத் துணையாக ரத கஜ துரக பதாதிகளுடன் வந்து சேர்கிறான். துரோணரைத் கொல்வதற்காகவே அவர் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து பெற்றெடுத்த மைந்தன் திட்டதுய்மனும், வீடுமரைக் கொல்வதற்காகவே பிறந்தவனாகிய மற்றொரு மகன் சிகண்டியும் துருபதராசனுடன் வந்து சேர்கிறார்கள்.

துருபதராசனுடன் அவனுடைய உறவினர்களான மன்னர்கள், உத்தமோசா, சுதாமந்யு ஆகியோரும் வருகின்றனர்.. பாண்டவர்கள் தங்கள் ஓராண்டுக்காலக் கரந்துரை வாழ்வின் போது தங்கியிருந்த விராட தேசத்து மன்னன், தம் மக்களாகிய சுவேதன் மற்றும் உத்தரகுமாரனுடனும் வந்து சேருகிறார். இன்னும் பாண்டவர்களுக்கு உதவியாக நம்முடைய தமிழகத்தை ஆண்டிருந்த சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களும் கூடப் போய்ப் போரில் கலந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களே அல்லாமல் அரக்கித் தந்தருள் கடோத்கஜக்காளையும் தன்னுடைய வீரத்தைக் காட்ட வந்து சேருகின்றான். அர்ச்சுனனின் மைந்தன் ''வீர அபிமன்யு'' என்று பாரோர் புகழும் பராக்கிரமனும் வந்து சேருகிறான். இவர்களுடன் அர்ச்சுனன் தன்னுடைய தீர்த்தயாத்திரையின் போது நாகக் கன்னியை மணந்து பெற்றெடுத்த இரவான் என்ற பலவானும் வந்து சேருகின்றான். பாஞ்சாலி ஈன்றெடுத்த உபபாண்டவர்கள் விந்தன், சோமன், வீரகீர்த்தி, புண்டலன், செயசேனன் ஆகிய ஐவரும்

அன்னையின் கூந்தல் முடிக்க அடல் போராற்ற வந்து சேருகின்றார்கள்.

இவ்வாறு பாண்டவர்களின் பக்கமாக தருமத்தைக் காக்கத் திரளும் சேனையின் அளவு மொத்தம் ஏழு அக்குரோணிகள் ஆகும். ஒரு அக்குரோணி என்பது யானைகள் 21870, தேர்கள் 21870, குதிரைகள் 65610 மற்றும் காலாள் வீரர்கள் 100930 அடங்கியதாகும். பாண்டவர் பக்கம் இவ்வாறு திரளும் மொத்த சேனையின் அளவு ஏழு அக்குரோணிகள்.

ஆனால் இவர்களை விட நான்கு அக்குரோணிகள் அதிகமாகவே - மொத்தம் பதினோரு அக்குரோணி சேனைகள் துரியோதனின் பக்கம் திரள்கின்றன. கொடியவனாகிய துரியோதனன், சேனை திரட்டுவதிலும் கூட அநியாயமாகவே நடந்து கொள்கின்றான். "தனக்கு ஆதரவாகப் படைகளுடன் வராத மன்னர்களுக்கு வாழ்வு கிடையாது'' என்பதாக மிரட்டி ஓலையனுப்பியே படையைத் திரட்டி விட்டான்.

பாண்டவர்களின் இளைய தாயும் நகுல, சகாதேவர்களை ஈன்றவளுமாகிய மாத்ரி தேவியுடன் பிறந்தவனாகிய மத்திர நாட்டு மன்னன் சல்லியன் தன் மருகர்களுக்குப் போரில் சகாயம் செய்ய, படைகளுடன் புறப்பட்டு உபப்பிலாவியம் நோக்கிப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தான்.

சல்லியன் மாபெரும் வீரன். கண்ணபெருமானுக்கு நிகராகத் தேரும் செலுத்த வல்லவன். அவனைத்தன் பக்கமாகப் போரில் சேர்த்துக் கொள்ள வஞ்சகன் துரியோதனன், அவன் வரும் வழியில், தருமர் அமைத்தாற் போல சத்திரங்கள் அமைத்து அதில் சல்லியனும் அவன் படைவீரர்களும் தங்கி உண்டு இளைப்பாறிய வேளையில் ''நானே உணவளித்தவன், எனக்கே உதவியாக வேண்டும்'' என்று கேட்டு வஞ்சகமாக சல்லியனின் செஞ்சோற்று நன்றிக்கடனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு விடுகிறான். காலமறிந்து கொடுக்கப்பட்ட ஒரு வேளைச் சோற்றுக்காகவும் செஞ்சோற்றுக் கடன் ஆற்றும் நன்றியுணர்வு மிகுந்திருந்தது அக்காலத்து மன்னர்களுக்கு.

இவ்வாறு பாண்டவர்களின் தாய் மாமனாகிய சல்லியனையும் தன்பக்கமாக்கிக் கொண்டான் வஞ்சக துரியோதனன். அது மட்டுமல்ல, கண்ணபெருமான் பாண்டவர் சகாயன் என்பது பாருக்கே நன்றாகத் தெரிந்திருந்த போதும் அவரையுமே தன் பக்கமாக வளைத்துப் போட துரியோதனன் சூழ்ச்சி செய்தான். அவனுடைய சூழ்ச்சியை கண்ணபெருமான் தம்முடைய சூழ்ச்சியால் முறியடித்து விட்டதையும் நாம் பாரதத்தில் பார்க்கின்றோம்.

கண்ணபெருமானின் துவாரகாபுரிக்குச் சென்று தனக்கு அவர் படைத்துணையாக வேண்டும் என்று முதலில் கேட்டுவிட்டால், முதலில் உதவி கேட்டவர்க்கே உதவுதல் வேண்டும் என்ற தரும நியாயத்தின்படி கண்ணன் தனக்கே உதவ வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவான் எனக் கருதிய துரியோதனன் துவாரகாபுரிக்குச் செல்கிறான்.

''துரியோதனன் வந்துவிட்டான், அவன் போரில் என்னுடைய சகாயம் கோரவே வந்திருக்கிறான். 'முதலில் நான்தானே வந்து உதவி கேட்கிறேன். அதை மறுக்காமல் தரவேண்டும் என்று துரியோதனன் வற்புறுத்தவும் கூடும். அதற்கு வழியில்லாமல் அர்ச்சுனனையும் வரவழைத்து விடவேண்டும்'' என்பதாகக் கண்ணபெருமான் திருவருள் புரிந்து உலூக முனிவரிடம் அர்ச்சுனனுக்குத் தகவலும் கூறி அனுப்புகிறார். ஆனால் அர்ச்சுனன் அத்தகவலை அறிந்து துவாரகாபுரிக்கு வருவதற்கு முன்பே துரியோதனன் கண்ணபெருமானைக் காண வந்து விட்டான். அர்ச்சனன் வந்து சேருவதற்கு முன் துரியோதனனை வரவேற்றுப் பேசக் கண்ணபெருமானுக்கு விருப்பமில்லை.

ஆதலால் அவரே வாயிற் காவலனை அழைத்து ''என்னைக் காண துரியோதனன், அர்ச்சுனன் இருவருமே வருவார்கள். அவர்களின் வருகையை எனக்குத் தெரிவிக்காமலே என்னுடைய பள்ளியறைக்குள் அனுப்பிவை'' என்பதாக ஆணையிட்டுப் பள்ளியறைக்குச் சென்று அறிதுயில் கொள்கின்றார்.

துவாரகாபுரியில் அரண்மனை மாடங்களில் பறந்து கொண்டிருக்கும் கொடிகள் ''துரியோதனா! நீவந்து முதலில் எங்கள் கண்ணபெருமானின் துணையை வேண்டினாலும், எங்கள் பரந்தாமன் பாண்டவர்தங்கட்கல்லால் படைத் துணையாக மாட்டார்'' என்று கூறுவதைப் போல் காற்றில் அசைந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் கருத்தை அறிந்து கொள்ளமாட்டாதவனாகிய துரியோதனன் நேராகத் துவாரகாபுரிக்குள் நுழைந்து காவலர் எவரின் தடையும் இல்லாமலே கண்ணபெருமானின் பள்ளியறை வரையிலும் சென்று அங்கே துயின்று கொண்டிருந்த கண்ணனைப் பார்க்கின்றான்.


கண்ணன் பள்ளி கொண்டிருந்த மஞ்சத்தின் தலைமாட்டில் அழகிய வேலைப்பாடமைந்த



ஏரிகாத்த இராமன் [...]

## சிவனும், விஷ்ணுவும் இணைந்த இரண்டெழுத்து மந்திரம்

ஓம் நமோ நாராயணா - எட்டெழுத்து மந்திரம். ஓம் நமசிவாய ஐந்தெழுத்து மந்திரம். நாராயணா என்பதில் இரண்டாவது எழுத்து 'ரா'. நமசிவாய என்பதில் இரண்டாவது எழுத்து 'ம'. இவ்விரண்டும் இணைந்து உண்டான மந்திரம் ''ராம'' மந்திரம். என்பதால் ராம மந்திரத்திற்கு மகிமை அதிகம்.



## அப்பர் கரை ஏறிய விழா

அறந்தரு திருநாவுக்கரசு சுவாமிகள் தம் தாய் சமயமான சைவ சமயத்திற்கு மாறியதைப் பொறுத்துக் கொள்ள இயலாத சமணத் துறவிகள், சமண சமயத்தவனான பல்லவ மன்னனைத் தூண்ட, அம்மன்னனும் கல்தூணில் கட்டி அப்பரடிகளைக் கடலில் வீச ஆணையிட்டான்.

“சொற்றுணை வேதியன் சோதிவானவன்” எனத் தொடங்கும் பதிகம் பாட, கல் தெப்பமாக மிதந்தது. கடலூருக்கு அருகே உள்ள வண்டிப்பாளையம் அருகில் கரை ஏறினார் அப்பரடிகள்.

அப்பர் கரை ஏறிய பகுதி இன்றும் “கரை ஏறிய குப்பம்” என்று அழைக்கப்பட்டு வருகிறது.

அப்பர் கரை ஏறிய விழா ஆண்டுதோறும் இங்குச் சிறப்புறக் கொண்டாடப்பட்டு வருகின்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்விழாவைக் கண்டு மகிழ்ந்தனர்.

ஆசனம் ஒன்று போடப் பட்டிருக்கின்றது. மாமன்னன் என்ற மமதை கொண்டு விளங்குபவனாகிய துரியோதனன், கண்ணபெருமானின் தலைமாட்டிலிருந்த ஆசனத்தில் நேராகப் போய் அமர்ந்து கொண்டுவிட்டான். இதனை அறிதுயிலில் இருந்தபடியே அறிந்து கொண்டவராகிய கண்ணபெருமானும் ''அர்ச்சுனன் இன்னும் வரவில்லையே'' என்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் அளவில் அர்ச்சுனனும், கண்ணன் ஏவலின் படியே விரைந்து வந்து, தானும் எந்த ஒரு தடையுமின்றி கண்ணபெருமானின் கால்மாட்டில் வந்துநிற்கின்றான்.

அர்ச்சுனன் வந்துவிட்டதைத் தெரிந்து கொண்டுவிட்ட கண்ணபெருமான் அதன் பிறகே கண் மலர்கின்றார். அவருடைய கண்களுக்குக் கால்மாட்டில் வந்து நின்ற அர்ச்சுனனே முதலில் தென்படுகின்றான். ''வா, வா, அர்ச்சுனா, எப்பொழுது வந்தாய்? ஏன் என்னை எழுப்பவில்லை?'' என்பதாக அன்பு மொழிகள் கூறி அர்ச்சுனனை அணைத்துத் தன் கட்டிலின் மேலேயே அமர வைத்துக் கொள்கின்றார் கண்ணபெருமான். அர்ச்சுனனே கண்ணபெருமானுக்குத் தலைமாட்டில் அமர்ந்திருக்கும் துரியோதனனைக் காட்டு கின்றான்.

துரியோதனன் வந்தமர்ந்திருப்பதை அப்பொழுதே தாம் பார்த்ததைப் போல் நடிக்கின்றார் கண்ணபெருமான். ''அடடா, இருவரும் வந்திருக்கிறீர்களே! என்ன காரணமாக வருகை புரிந்துள்ளீர்களோ?'' என்று பொதுவாக கண்ணபெருமான் வினவ, ''செருவில் நீஎமக்கு வெம்போர்செய் துணையாக வேண்டும்'' என்று இருவருமே கண்ண பெருமானை ஒரு சேர கேட்டுக் கொள்கிறார்கள்.

முன்னதாக வந்து கண்ணனின் துணையை வேண்டிப் பாண்டவர்களை ஏய்க்க வேண்டும் என்று வஞ்சம் செய்தான் துரியோதனன். தூங்குவதைப் போல் நன்றாகவே நடித்துக் கண்ணபெருமானும், அர்ச்சுனனையே தான் முதலில் பார்த்ததாகக் கூறி முதலில்தன் விழிக்கு இலக்கான அர்ச்சுனனுக்கே தாம் துணையாகப் போவதாகக்கூறியருளுகின்றார்.

''உற்றமர் உதவி செய்வான் உதிட்டிரன் தனக்கு முன்னே
சொற்றனன் ஆங்கண், ஈங்குந்துயிலுண் பொழுதுமின்று
விற்றிறல் விசயன் முந்த விழிக்கிலக்கானான் என்று
பற்றறத் துணிந்து சொன்னான் பாண்டவர்சகாயனானான்''

(வாசுதேவனைப் படைத்துணையழைத்த சருக்கம் 13)

முன்னமே போரில் தாம் உதவி செய்வதாக தருமருக்கு வாக்களித்து விட்டபடியாலும், அர்ச்சுனனே தன் கண் காண, முதலில் தனக்குத் தென்பட்டபடியாலும், பாண்டவர்க்கே தாம் துணை செய்யப் போவதாக கண்ணபெருமான் தெரிவித்து துரியோதனனின் சூழ்ச்சியைத் தம் சூழ்ச்சியால் வென்ற வரலாற்றையும் இவ்வாறு மகாபாரதத்தில் காணமுடிகிறது.

ஆனால், வஞ்சகன் துரியோதனன் தன் எண்ணம் இவ்வாறு முடியாமல் போய்விட்ட வேளையில் அதைத் தாங்கி ஏற்றுக் கொண்டானா என்றால் இல்லை.

''பாண்டவர்க்குத் துணையாகிவிட இசைந்தால் தான் என்ன? எனக்கு வேறொரு வாக்கு கொடு. போர்க்களத்தில் ஆயுதங்கள் எதையும் தாங்க மாட்டேன் என்ற வாக்கினை மட்டும் எனக்குக் கொடு'' என்று கேட்கலுற்றான் துரியோதனன்.

அதற்கும் கண்ணபெருமான் இசைந்து ''சரி! நீவேண்டியபடியே எந்த ஒரு ஆயுதத்தையும் ஏந்த மாட்டேன்!'' என்பதாக துரியோதனனுக்கு வாக்கும் தந்துவிடுகிறார். ''ஆயுதம் ஏற்காத என்னால் என்ன பயன் இருக்க முடியும் அர்ச்சுனா!'' என்று அர்ச்சுனனை நோக்கி கண்ணபெருமான் வினவ, அர்ச்சுனனும் கண்ணபெருமானைப் பணிந்து

''செருமலி யாழியங்கைச் செழுஞ்சுடர் நின்றென்தேரிற்
பொருபரி தூண்டின் இந்தப் பூதலத் தரசர் ஒன்றோ
வெருவருமியக்கர் விண்ணோர் விஞ்சையர்எனினும்என்கை
வரிசிலை குழைய வாங்கி மணித் தலைதுமிப்பன்'' (வாசுதேவனைப் படைத்துணையழைத்த சருக்கம் 55) என்று கூறக் காண்கிறோம்.

''ஆயுதங்கள் ஏந்திப் போர் செய்ய வேண்டாம் ஆபத்பாந்தவா! அடியேன் தேரில் அமர்ந்து தேரைச் செலுத்தினாலே போதும். நீபக்கம் இருந்தால், பரிகளைச் செலுத்தினால் பூதலத்தரசர்களை மட்டுமல்ல, விண்ணவர், விஞ்சையர், இயக்கர், யாவரே வந்தாலும் நின் திருவருளால் வெல்வேன்'' என்று பார்த்தன் கூற பார்த்தனுக்குப் பாரதப் போரில் சாரதியாக இசைகிறார் கண்ணபெருமான்.

பாரதப் போரில் ஆயுதம் தாங்காமல் பார்த்தனுக்குச் சாரதியாக இசையும் கண்ணபெருமான், துரியோதனனுக்குத் தன்னுடைய யாதவப்படை முழுவதையும், தம் சகோதரன் ஆன பலராமனையும் கூட இசைந்து படைத்துணையாகத் தர ஒப்புக் கொண்டுவிடுகிறார்.

பாண்டவர்களுக்கு கண்ணன் ஒருவர் மட்டுமே போரில் துணை; பலராமன் உள்ளிட்ட யாதவப்படை முழுவதும் துரியோதனனுக்குத் துணை. அப்படியானால் அவன் பக்கம் பதினொரு அக்குரோணி சேனைகள் திரளுவதில் விந்தை என்ன இருக்க முடியும்?

பதினொரு அக்குரோணி சேனைகள்தான் துரியோதனன் பக்கம் திரளட்டுமே! கண்ணபெருமான் ஒருவர் துணை நிற்க பாண்டவர் ஐவரும் சேர்ந்து தனியாகவே பொருதாலும், சத்தியத்தைக் காக்க கண்ணபெருமான் ஒருவரின் துணைதான் முக்கியமே தவிர, அக்குரோணி சேனைகள் முக்கியம் அல்ல. கருவிகள் ஏதுமின்றியே காரியத்தை நடத்தவல்லவர் இறைவனாகிய கண்ணபெருமான். அவர் போரில் எந்தப் படைக்கலத்தையும் ஏந்தமாட்டேன் என்று துரியோதனனுக்கு வாக்கு கொடுத்தமையும், இறைவனின் ஆற்றலை விளக்கும் இந்த அற்புதத் தத்துவத்தைக் காட்டுவதற்கே ஆகும்.

மேலும் பெருகிக் கிடக்கும் அதர்ம உயிர்களின் பாரம் தாங்காத பூமியின் பாரத்தை இப்போரின் மூலமாகக் குறைப்பதே கண்ணபெருமானின் நோக்கமும் ஆவதை முன்னமே சகாதேவன்,

**''நீபாரத அமரில் யாவரையும் நீறாக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா''**

என்று கூறியிருப்பதையும் நாம் அறிவோம். ஆகவே தான் தன்னுடைய சேனைகளையும் கூட துரியோதனன் வேண்டாமலே கண்ணபெருமான், அவனுக்குத்துணையாக்குவதைக் காணுகின்றோம்.

இவ்வாறு குருசேத்திரப் போர்க்களத்தில் பாண்டவர்களின் ஏழு அக்குரோணி சேனைகள் ஒருபுறமும், துரியோதனனின் பதினொரு அக்குரோணி சேனைகள் மறுபுறமுமாகத் திரண்டுவிடுகின்றன. போரில் வெற்றி பெற வேண்டுமானால், போர்த் தெய்வமாகிய காளிக்கு உத்தம குணங்கள் நிறைந்த ஓர் ஆடவனை நல்ல நேரம் பார்த்துப் பலி கொடுத்தாக வேண்டும்.

''களப்பலி கொடுப்பதற்குத் தகுதி வாய்ந்த ஆடவன் யார்? களப்பலி கொடுப்பதற்குப் பொருத்தமான நேரம் எது?'' என வீடுமனை வினவுகின்றான் துரியோதனன்.

''களப்பலிக்குப் பொருத்தமான உத்தம குணம் நிறைந்த ஆடவன், அர்ச்சுனன் மகனாகிய இரவானே. அவனை அடைந்து எங்களுக்குக் களப்பலியாக இசைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டால், பகைவன் எனப் பாராது அவனும் பலியாக இசைவான். களப்பலிக்கு உரிய நேரத்தைக் கணித்துத் தரவல்லவன் தருமனின் தம்பியாகிய சகாதேவன் ஒருவனே. அவனைப் போய் நேரம் கணித்துத் தரச் சொன்னால், அவனும் பகைவன் எனப் பாராது கணித்துத் தருவான்'' என்று வீடுமர் துரியோதனனுக்கு அறிவுறுத்த, துரியோதனனும் இயந்திர விமானத்தில் ஏறிப் பாண்டவர்கள் தங்கி யிருக்கும் உபப்பிலாவியம் உடனே போய்ச் சேருகின்றான்.

(தொடரும்)

## வடலூர் திருவிழா நாட்குறிப்பு



வடலூர் வள்ளலார் திருச்சபையில் மாதம் தோறும் பூசம் விழா சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. பக்தர்களின் வசதிக்காக ஓராண்டுக்கான திருவிழா நிகழ்ச்சி நிரல் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம். மே 5, 2005 தருமச்சாலை துவக்கிய நாள்

ஜூன் 10, ஜூலை 7,
ஆக.4, ஆக.31,
செப்.27, 2005 மாதப்பூசம்
அக்.5, 2005 வள்ளலார் அவதரித்த நாள்
அக்.24, 2005 சித்திவளாகக் கொடிநாள்
அக்.25, நவ.21,
டிச.12, 2005,
ஜன.15, 2006 மாதப்பூசம்
பிப்.10, 2006 கொடியேற்றம்
பிப்.11 2006 தைப்பூசப் பெருவிழா
மார்ச் 10,
ஏப்.6, 1006 மாதப்பூசம்

- தகவல் திரட்டு :
தென்னம்பட்டு ஏகாம்பரம்
செயல் அலுவர்

# சத்தியத்திற்காக உயிர் கொடுத்த வேளாளர் சரிதம்

(பழையனூர் நீலி சரித்திரத் தொடர்ச்சி)

காஞ்சியில் புகழோடு வாழ்ந்து வந்த தரிசனன் தன் தந்தையைக் காட்டிலும் வியாபாரத்துறையில் புகழோடு விளங்கினான். பழையனூரின் வளமையையும், சிறப்பையும் கேள்வியுற்ற தரிசனன் அங்குச் சென்று வணிகம் செய்ய எண்ணங்கொண்டான்.

பெற்ற தாயும், மனைவியும் உற்றார் உறவினரும் தரிசனனைப் பார்த்து, ''உன் தந்தை கூறியதை எண்ணிப்பார். வடதிசையே போகக்கூடாது என்றல்லவா கூறியுள்ளார். பழையனூர் நமக்கு வடக்கில் தானே உள்ளது'' என்று கூறித்தடுத்தார்கள்.



''என்னிடம் தான் மந்திர உருவேற்றம் செய்யப்பட்ட கத்தி உள்ளதே'' என்று கூறித் தரிசனன் பழையனூரை நோக்கி வியாபார நிமித்தமாகப் புறப்பட்டான். வியாபார நிமித்தமாகச் செல்வதால் குழந்தையையும், உன்னையும் அழைத்துச் செல்வது சிரமம்'' என்று கூறித் தரிசனன் தடுத்தும், கேளாமல் அவனது மனைவியும் அவனுடன் சென்றாள்.

தக்கோலம் என்ற ஊர் வந்ததும் மாலைப்பொழுது சாய இருவரும் இரவு அங்கு தங்க முடிவு செய்து தங்கினார்கள். தன் மனைவியை உடன் அழைத்துச் செல்ல விரும்பாத தரிசனன் தன் மனைவி அயர்ந்து தூங்கும் நள்ளிரவு நேரத்தில் அவளை விட்டுவிட்டுத் தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

விடிந்ததும் உறக்கம் கலைந்து எழுந்து தன் கணவனைக் காணாத அப்பெண் மிகவும் வருந்தி அழுது புலம்பினாள். அப்பெண்ணின் நிலையைக் கண்டு இரக்கங்கொண்ட அவ்வூர் பொதுமக்கள் அவளுக்குத் தக்க துணை சேர்த்துக் காஞ்சிபுரத்திற்கே திருப்பி அனுப்பி விட்டார்கள்.

தரிசனன் திருவாலங்காட்டின் வழியே வரும்போது முன்பிறவிப் பழியைத் தீர்த்துக் கொள்ள காத்திருந்த நீலிப்பேய் அவனைக் கண்டுகொண்டது. பழிவாங்க இதுவே தருணம் என்று எண்ணி ஒரு வேசிப்பெண்ணாக உருவம் கொண்டு அவனை வழி மறித்து, ''வாருங்கள் சிலநாள் இங்குத் தங்கி இன்பம் அனுபவித்துச் செல்லலாம்'' என்று கூறித் தடுத்தது.

தரிசனன் ''இச்செய்கை உனக்கும், எனக்கும் எவ்வித நன்மையையும் தராது ; மாறாக எனக்குப் பாவம் உண்டாகும். நான் உனது செய்கைக்கு இணங்கமாட்டேன்'' என்று பல்வேறு நீதிகளை எடுத்துக் கூறி அவளை விட்டு விலகித் தன்வழியே நடந்தான்.

தரிசனனிடம் மந்திரசக்தி வாய்ந்த கத்தி இருந்தமையால் அவனை நீலியால் நெருங்க முடியவில்லை. சற்று தூரம் சென்றதும், நீலி ஒரு சிறு மளிகைக் கடையை நிர்மாணித்துக் கொண்டு வியாபாரம் செய்பவள் போல் அமர்ந்து, மீண்டும் அவனை அழைத்து, ''இங்கேயே தங்கி வியாபாரம் செய்யலாம்'' என ஆசைக்காட்டி உபசரித்தாள்.

இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று உணர்ந்த தரிசனன் தனது மந்திரக் கத்தியை உறையில் இருந்து எடுத்தான். மளிகைக்கடை சரக்குகள், பெண் ஆகிய அனைத்தும் மாயமாய் மறைந்தன.

இதைக் கண்ட தரிசனனுக்கு அச்சம் ஏற்பட்டது. ''பெரியவர்களின் சொல்லைக் கேளாமல் வந்துவிட்டோமே'' என அவன் பெரிதும் வருந்தினான். பயம் மேலிட விரைவாகப் பழையனூரை நோக்கி நடந்தான்.

நீலிப்பேய், தன் சுய உருவங்கொண்டு, ''உனக்கு மனைவியாய் வாழ்ந்து, ஒரு பாவமும் செய்யாத என்னைக் கொலை செய்த உன்னையும், என் தமையன் இறப்புக்குக் காரணமான வேளாளர்களையும் ஒரு சேரப் பழிதீர்த்துக் கொள்வேன்'' என்று வஞ்சினம் கூறி மறைந்தாள்.

பெரியவர்களின் சொல்லை மீறி வந்த காரணத்தால் இடர்ப்பட நேர்ந்ததே என வருந்தி மனம் நொந்த தரிசனன் தாகம் மேலிட நீர் இருக்கும் இடத்தைத் தேடி அலைந்தான். பழிதீர்க்க எண்ணம் கொண்ட பேய் மீண்டும் ஒரு தண்ணீர் பந்தலை அமைத்துக் கொண்டு, ''வாருங்கள் வந்து நீர் பருகி இளைப்பாறிச் செல்லுங்கள் !'' என்று கூறி அழைத்தது.

இதுவும் முன்போலச் சூழ்ச்சி தானோ என ஐயம் கொண்ட தரிசனன் தனது கத்தியை உறையில் இருந்து வெளியே எடுத்தான். முன் போலவே தண்ணீர்ப் பந்தலும்,



அப்பெண்ணும் மாயமாய் மறைந்தனர். தொடர்ந்து எழுந்த பயத்தால் அவன் ஓடத் துவங்கினான்.

அவனை இடைமறித்த பேய், '' நீஎங்கு போனாலும் இன்று இரவு உன்னையும் நாளை வேளாளர்களையும் பழி வாங்குவது உறுதி'' என்று சபதம் இட்டு மறைந்தாள்.

தரிசனன் பழையனூர் வேளாளர் பெருமக்களிடம் அடைக்கலம் புகுந்து நடந்தவற்றைச் சொல்லித் தன்னைக் காப்பாற்றவேண்டும் என்று முறையிட்டான். அப்பெருமக்களும் ஆறுதல் கூறி, அவனது தாகத்தைத் தீர்த்து உணவளித்து இருக்கச் செய்தார்கள்.

பழிவாங்க தக்க தருணத்தை நோக்கி இருந்த நீலிப்பேய் தரிசனன் தன் வீட்டில் விட்டுவந்த மனைவியைப் போல உருவம் கொண்டு, ஒரு பெரிய சுள்ளிக் கட்டையை எடுத்து, அதனைக் குழந்தையாக்கி, இடுப்பில் வைத்துக் கொண்டு, தலைவிரி கோலத்துடன் பழையனூரில் தரும சபை மண்டபத்தில் தரிசனனுடன் கூடியிருந்த வேளாண் பெருமக்கள் கேட்கும் வண்ணம் தரிசனனைப் பார்த்து புலம்பினாள்.

''ஐயா ! வடதிசைபோகக்கூடாது என்று பெரியோர்களும், ஜோதிடர்களும் சொன்னதைக் கேட்காமல் புறப்பட்டு வந்துவிட்டீர்கள். உடன் வந்த என்னையும் நம் குழந்தையையும் தக்கோலத்தில் இரவு தங்கியபோது தனியாக விட்டுவிட்டு வந்தீர்கள். இது நியாயமா! தாங்கள் என்ன கதியாவது அலைந்து திரிந்து நீங்கள் இருக்கும் இடத்தை அடைந்துவிட்டேன். இதுதான் என் மாங்கல்ய பலம்'' என்று கூறினாள்.

தரிசனன் ''உன் மாயா ஜாலங்களை எல்லாம் தெரிந்துள்ளேன். நீயார் என்பது எனக்குத் தெரியும். நீஎன் மனைவி இல்லை. இங்கிருந்து போய்விடு!'' என்றான்.

''பெரியோர்களே ! தருமவான்களே! இவருக்கு ஏற்கனவே திருமணமாகி இருக்கும் போது என்னை ஏன் திருமணம் செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்துகொண்டு நடுக்காட்டில் அழைத்து வந்து விட்டுவிட்டு வரலாமா? இது நியாயமா? இப்பழி இவரை விடுமா?'' என முற்பிறவியில் செய்த பழியை மறைமுகமாகச் சுட்டிக்காட்டி அழுது புலம்பினாள்.

''பெரியோர்களே! இதுவரை நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் முன்னமே உங்களிடம் கூறிவிட்டேன். இவள் என் மனைவியுமில்லை, இக்குழந்தை என் குழந்தையுமன்று, இவள் என்னையும், உங்களையும் பழிவாங்க, உறுதி கொண்டுள்ளாள். இவளை நம்ப வேண்டாம்'' என்று தரிசனன் கூறினான்.

'' ஐயோ! இவர் என்னைப் பேய் என்றும், பிசாசு என்றும் பழிக்கின்றாரே! வடதேசம் போகக்கூடாது என்று சொன்னதற்கு ஏற்ப இவரது குணம் மாறிவிட்டதே '' என்று நீலி மீண்டும் அழுது புலம்பினாள்.



# திருக்கோயில் திருத்தேரோ

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் தேவஸ்தானத்தி ஸ்ரீசக்ரத்தேரோட்டம் (கிண்ணித் தேரோட்டம்) நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டம், சிறுவாச்சூர் அருள்மிகு மதுரகாளி திருத்தேரோட்டவிழா 25.5.05 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்

காஞ்சி வரதராஜப்பெருமாள் கோயில் பிரம்மோற்சவ திருத்தேரோட்டம் 26.5.05 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது

உளுந்தூர்ப்பேட்டை அடுத்த பரிக்கல் லட்சுமி நரசிம்ம திருத்தேரோட்டம் 29.5.05 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது

பல்லாயிரக்கணக்கான மக்கள் இத்தேர்த் திருவிழாக்களை உற்றனர்.

வேளாளர் பெருமக்கள் அந்தப் பெண்ணைப்பார்த்து, ''உங்களது குடியின் பெயரையும், கோத்திரத்தையும் சொல்! என்று கூறினர்.'' அவளும் அதைச்சரியாகச் சொன்னாள்.

''இது தவிர வேறு ஏதேனும் அத்தாட்சி உள்ளதா? என்று கேட்க, பெண் உருவம் கொண்ட நீலி தன் குழந்தையை இடுப்பில் இருந்து இறக்கிவிட்டாள். அது தரிசனனின் மடியில் சென்று அமர்ந்து கொஞ்சிக் குலாவியது.

இதைக் கண்ட தர்ம சபையினர், '' வணிகரே உமது வாதம் நியாயம் இல்லாதது, உமது மனைவியின் மீதுள்ள கோபத்தை விட்டுவிட்டு ஒற்றுமையாய் இருந்து குடும்பம் நடத்துங்கள். இதுதான் தர்மம். இதோ இங்குள்ள வீட்டில் தங்கிக் காலையில் செல்லுங்கள்'' என்று கூறி ஒரு வீட்டில் இருக்கச் செய்தார்கள்.

தர்ம சபையினரின் பேச்சுக்கு மதிப்பளித்துத் தரிசனன் வீட்டினுள் சென்றான்.

அப்போது நீலிப் பெண், '' என் கணவர் கோபக்காரர்; மானத்திற்குப் பயப்படுபவர்; பெரியோர் முன்னிலையில் நான் உண்மையைப் பேசியபோது அவரது முன்னிலையில் நான் உண்மையைப் பேசியபோது அவரது முகம் கோபத்தால் சிவந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நாங்கள் உள்ளே இருககும் போது, நீஎன்னுடன் வாழத்தகுதியற்றவள் என்று பேசி என்னைக் கொன்று போட வாய்ப்புள்ளது. இவர் கையில் கத்தி ஒன்று உள்ளது. அதை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று மிகவும் பயந்தவள் போல் பாசாங்கு செய்தாள். கூடியிருந்த பெரியோர்கள், ''செட்டியாரே உம்மிடம் உள்ள கத்தியை இப்படிக் கொடுங்கள், நாளை மறுபடியும் உங்களிடம் தருகிறோம் இன்றிரவு ஒற்றுமையாய் இருங்கள்'' என்று கூறினர்.

''ஐயா! இந்தக் கத்தி என் கையில் இருந்ததால்தான் நான் இதுவரை பிழைத்து வந்துள்ளேன். இதை நீங்கள் எடுத்துக் கொண்டால் இன்றிரவு இப்பேய்க்கு நான் இரையாவது உறுதி; இந்தப் பழி உங்களையே சாரும்!'' என்றான்.

''செட்டியாரே! உங்கள் மனைவி சொன்னது சரியாகத்தான் உள்ளது. அப்படி உம் உயிர் போனால் நாங்கள் எழுபது பேரும் எங்கள் உயிரைக் கொடுக்கின்றோம்!'' என்று சொல்லி அங்கிருந்த சாட்சிபூதேசுவரரைச் சாட்சியாக வைத்து சத்தியம் செய்து கொடுத்துக் கத்தியை வாங்கிக் கொண்டார்கள்.

அன்று இரவு நடுநிசியில் சுய உருவம் எடுத்து நீலிப்பேய் தரிசனனைக் கொன்று தன் முற்பிறவிப் பழியைத் தீர்த்துக் கொண்டது. சுள்ளிக் கட்டையிலான குழந்தையையும் கீழே போட்டுக் காலால் தேய்த்துக் கொன்றுவிட்டது. இந்தப் பாறையும், கால் அடையாளமும் செந்நிறமும் இன்றும் இங்குச்சான்றாக உள்ளன.

விடிந்ததும் வேளாண் பெருமக்கள் அவ்வீட்டை வந்து பார்த்தபோது தரிசனன் இறந்திருப்பதைக் கண்டு, ''எவ்வளவோ உண்மையை அவன் எடுத்துச் சொல்லியும் ஊழ்வினை நம் கண்ணை இப்படி மறைத்துவிட்டதே ! இது என்ன பாவமோ?'' என்று அலறித்துடித்தனர்.

எப்படியும் வணிகனுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணிச் சாட்சிபூதேஸ்வரர் முன்பு தீ வளர்த்துத் தீயில் பாய்ந்து உயிர்துறந்தனர்.

அவர்களில் ஒருவர் நிலத்தில் ஏர் உழச் சென்றிருந்தார். அங்கு அவரது மனைவியைப் போல் உருவம் எடுத்துச் சென்ற நீலிப்பேய், ''அறுபத்தொன்பது பேரும் தீயில் பாய்ந்து விட்டார்கள். நீங்கள் ஒருவர் தான் உயிர் தப்பினீர்கள்'' என்று கூறியது. இதைக் கேட்டு இன்னும் உயிர்தரித்து இருப்பதா? என்று ஏங்கிக் கலப்பையில் உள்ள கூரிய கொழுவை எடுத்துத் தன்

## ...ருத்தேரோட்டங்கள்

...ர் தேவஸ்தானத்தில் 22.5.05 அன்று இரவு ...ம்) நடைபெற்றது.

...ருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில் ...சிறப்பாக நடைபெற்றது.

... பிரம்மோற்சவ விழாவை முன்னிட்டு ...பாக நடைபெற்றது.

... லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில் ...பாக நடைபெற்றது.

...த் திருவிழாக்களைக் கண்டு பேரானந்தம்



கழுத்தில் குத்திக் கொண்டு அங்கேயே அவர் உயிர் துறந்தார். இவ்வாறு நீலிப்பேய் தரிசனனையும், எழுபது வேளாளர் பெருமக்களையும் கொன்று பழிதீர்த்துக் கொண்டது.

இச்சரிதம் நடந்தது சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பு என்று கருதப்படுகிறது. இவ்வரலாறு சார்ந்த அடையாளங்களும், கோயிலும் இன்றும் உள்ளன. வேளாண் பெருமக்கள் சாட்சியாய்வைத்த லிங்கத் திருவுருவம், அதற்கு எதிரே நான்கு பெரிய பாறைகளில் வேளாண் பெருமக்களைச் செதுக்கிய உருவச் சிலைகளும், அவர்கள் தீப்பாய்ந்த குட்டையும் பழுதுபட்டு இருந்தாலும் அழியாமல் இன்றும் உள்ளன. எத்தனையோ லிங்க உருவங்கள் அழிந்துபோய் இருக்க, அவை மட்டும் இன்றும் உருமாறாமல் நிலைத்திருப்பதைப் பார்த்தால் சத்தியத்தை அழிக்க எவராலும் எக்காலத்திலும் இயலாது என்பது புலனாகிறது.

உண்மையாகவே நடந்த இந்நிகழ்ச்சி உலகமெங்கும் பரவியது. இதனைக் கேட்ட முடியுடைய மன்னர் மூவரும் தம் முன்னோர் செயலைப் பின் பற்றி நாற்பெரும் படையொடும் தனித் தனியே திருவாலங்காடு போந்து அவ்விடத்தைத் தரிசித்து அச்செயலை வியந்து ஒவ்வோர் வெண்பா பாடியுள்ளனர்.

ஏழாம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தப் பெருமான் இவ்வூர்ப் பதிகத்தில், **''முன்நட்பாய் வஞ்சப்படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகை கேட்டஞ்சும் பழையனூர்''** என்று எடுத்துக் கூறியுள்ளார்.

இதனையே 12- ஆம் நூற்றாண்டில் தெய்வச் சேக்கிழார் பெருமான் எஞ்சிலா வகை முறையே பழையனூரார் இயல் மொழிகாத்த கதையைச் சிறப்பித்தேத்தி திருஞானசம்பந்தர் புராணத்தில்

''நற்றி றம்புரி பழையனூர்ச் சிறுதொண்டர் நவைவந்(து)
உற்ற போதுதம் உயிரையும் வணிகனுக் கொருகால்
சொற்ற மெய்ம்மையுந் தூக்கிஅச் சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு''

என்று பாராட்டிப் பாடியுள்ளார்.

14-ஆம் நூற்றாண்டில் உமாபதி சிவம்,

''மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால்
**வணிகன் உயிர் இழப்பத் தாங்கள் கூறியசொல்**
**பிழையாது துணிந்து செந்தீக் குழியி**
**லெழுபது பேரும் மூழ்கிக் கங்கை**
**ஆறணிசெஞ் சடைத் திருவாலங் காட்டப்பர்**
**அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின் கீழ்மெய்ப்**
**பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால்பிறித்**
**தளவிட்டு இவ்வளவெனப் பேசவாமோ''**

(திருத்தொண்டர் புராணம் வரலாறு - 19)

என்று விரித்துப் பேசியுள்ளார். இவ்வரலாற்று நிகழ்ச்சியினைத் தொண்டை மண்டல சதகத்திலும் வள்ளலார் பாடல்களிலும் காணலாம்.

# பதில்



★ சுசீலா, ராஜபாளையம்

**கேள்வி :** *புது வீடு குடியேறும் போது பால் காய்ச்சுவது என்ற சம்பிரதாயம் ஏன் உண்டாக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறவும்*

**பதில் :** பசு இலட்சுமியின் அம்சம். அதன் பால் மகாலட்சுமிப் பிரசாதம். அதனால் புதுவீடு குடியேறும்போது முதன் முதலில் பால் காய்ச்சிச் சாப்பிடும் சம்பிரதாயம் உண்டாக்கப்பட்டுள்ளது.

★ மகாராணி, வண்ணாரப்பேட்டை


**கேள்வி :** *உப்பின் மேல் கால்படக்கூடாது என்று பெரியவர்கள் கூறுகிறார்களே! அது ஏன்?*

**பதில் :** உணவுப் பண்டம் எதன் மீதும் கால் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உப்பில் மகாலட்சுமி வாசம் செய்வதால், உப்பை மிதிக்கக்கூடாது.

★ சத்தியநாராயணன், அயன்புரம்

**கேள்வி :** *சப்த கோடி மகாமந்திரங்கள் என்றால் என்ன?*

**பதில் :** மந்திரங்கள்; 1. நம, 2. ஸ்வாஹா, 3. ஸ்வதா, 4. வௌஷட், 5. வஷட், 6. பட், 7. உம் என முடியும். இவ்வாறு முடியும் மந்திரங்களையே சப்தகோடி மகாமந்திரங்கள் என்று கூறுகின்றனர்.



★ கமலா, சேலம்.

**கேள்வி :** *ஒரு வீட்டில் இருந்து மற்றொரு வீட்டுக்கு விளக்கை ஏற்றிக் கொண்டு போகக் கூடாது என்கிறார்களே, அது ஏன்?*

**பதில் :** தீபத்தில் மகாலட்சுமி வாசம் செய்வதால் ஒரு வீட்டில் இருந்து மற்றொரு வீட்டுக்கு தீபத்தை ஏற்றிக் கொண்டு போகக்கூடாது.

★ பவானி, குமாரபாளையம்.

**கேள்வி :** *வெள்ளி, செவ்வாய் ஆகிய நாட்களில் நெய் காய்ச்சக் கூடாது என்பது என்ன?*

**பதில் :** இந்நாட்கள் மகாலட்சுமிக்கு உகந்தவை. வெண்ணெயில் மகாலட்சுமி இருப்பதால் வெள்ளி, செவ்வாய் நாட்களில் நெய் காய்ச்சக் கூடாது எனப் பெரியவர்கள் விதித்துள்ளார்கள்

★ கோபாலன், புதுவை.

**கேள்வி :** பசுவை ஏன் பூஜிக்க வேண்டும்?

**பதில் :** *பசுவின் உடலில் சகல தேவதைகளும் உள்ளனர். பசுவின் முன்புறம் தர்மதேவதையும், பின்புறம் மகாலட்சுமியும் வசிக்கிறார்கள். பசுவைப் பூசித்தால் சகல தேவதைகளையும் வழிபட்ட புண்ணியம் உண்டாகும்.*

★ சாஸ்திரி, பெங்களூர்.

**கேள்வி :** *திருமணத்தில் மணமக்களை அட்சதை இட்டு வாழ்த்துவது ஏன் எனக் கூறவும்?*

**பதில் :** அரிசி சிவாம்சம். மஞ்சள் அம்பாள் அம்சம். சிவமும் சக்தியும் போல் சிறப்பாக வாழ வேண்டும் என்ற பொருளில்தான் மஞ்சள் கலந்த அட்சதை அரிசியைத் தூவி மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

★ சரவணன், சித்தூர்.

**கேள்வி :** *விடலை தேங்காயை விநாயகருக்கு மட்டும் உடைப்பது ஏன்?*

**பதில் :** தேங்காய் பிள்ளையாருக்கு விருப்பமான பொருள். எனவே நினைத்த காரியம் நடக்க வேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொண்டு பிள்ளையாருக்குப் பிடித்த தேங்காய் உடைக்கப் படுகின்றது.

★ கோபால், திருவாரூர்

**கேள்வி :** ''தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே'' என்பதன் பொருள் விளக்கம் என்ன?

**பதில் :** தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்கக்கூடாது எனப் பலர் பொருள் கொண்டு, சுகாதாரமற்ற தண்ணீரையும் குடித்து நோய்களுக்கு ஆளாகின்றனர்.

இதனுடைய உண்மையான மூலமான பழமொழி ''தாயிற் பிழைத்தாலும் தண்ணீரிற் பிழையாதே'' என்பது தான்.

பெற்ற தாய்க்குச் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றைச் செய்யாமல் பிழை செய்தாலும் செய்யலாம். பல்லாயிரக்கணக்கான மக்கள் பருகும் நீர் நிலையில் பிழையான ஒன்றைச் செய்யக்கூடாது என்பதே இதன் பொருள்தரும்.



# இவ்வளவு தூரம் வந்த பிறகு

நிறைமதி

அண்மையில் எங்கள் நெருங்கிய உறவினர்களுடன் முருகப்பெருமானின் நான்காம் படைவீடாகிய ''திருவேரகம்'' எனும் சுவாமிமலை சென்று அருள்மிகு சுவாமிநாத சுவாமிக்கு நடைபெற்ற சிறப்பு அபிஷேகத்தைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தோம். சுவாமிமலை திருத்தலம் கும்பகோணத்திலிருந்து மேற்கே 7 கி.மீ தொலையில் அமைந்துள்ள அற்புதமான முருகன் திருத்தலம் ஆகும்

அருள்மிகு சுவாமிநாத சுவாமிக்கு நடைபெறும் அபிஷேகமும் அலங்காரச் சிறப்பும் காண ஒவ்வொரு பக்தருக்கும் நாலாயிரம் கண்களை அந்த நான்முகன் கொடுத்தால்தான், அழகன் முருகனின் பேரானந்தப் பேரழகை முழுவதும் கண்டு இன்புற இயலும்.

விபூதி அபிசேகம் செய்யப்பட்ட நிலையில் அருள்பழுத்த ஞானியாக முருகப் பெருமான் காட்சி தருகிறார். சந்தன அபிசேகம் செய்து, அர்ச்சகர், சுவாமியின் கண்திறக்கும் காட்சி, பக்தர்களைப் பக்திப் பரவசத்தில் திளைக்கச்செய்யும்.

அபிசேகம் நிறைவுபெற்று கிரீடமும், பதக்கமும், கவசமும், மாலையும் அணிந்து கம்பீர இராஜகோலத்தில் சுவாமிநாத சுவாமி வீற்றிருக்க தீபாராதனைக் காட்டப்படும் நேரத்தில் பக்தர்கள் கொள்ளும் பரவசநிலையை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை எனலாம்.

சுவாமிநாத சுவாமியின் சரணகமலாலயத்தை அரைநிமிட நேரம் ஒருமைப்பட்ட மனத்துடன் வழிபாடு செய்பவர்கள் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வு பெற்று சிவ ஞான முக்தி பெற்றுய்வது திண்ணம் என்பதை அருணகிரிநாதர் திருப்புகழ்ப்பாட்டில் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார்.

''சரண கமலாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சகடசட மூடமட்டி பவவினையிலே சனித்த
தமியன் மிடியால் மயக்கம் உறுவேனோ?
கருணைபுரி யாதிருப்ப தென்னகுறை இவ்வேளை செப்பு
கயிலை மலை நாதர் பெற்ற குமரோனே!
கடகபுய மீதில் ரத்னமணி யணி பொன்மாலை செச்சை
கமழு மணமார் கடப்பம் அணிவோனே!
தருணம் இதுஐயா மிகுத்த கனமதுறு நீள் சௌக்யம்
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமை சிவஞான முத்தி பரகதியும் நீ கொடுத்து
அருள்புரிய வேணும் மெய்த்தவ வடிவேலா!
அருணதள பாதபத்மம் அது நிதமுமே துதிக்க
அரிய தமிழ் தான் அளித்த மயில்வீரா !.
அதிசயம் அநேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழக திருவேரகத்தின் முருகோனே!''

சுவாமிமலையில் விளங்கும் ஞான சற்குருநாதனை வழிபாடு செய்து முடித்தபின், நான் சென்னை செல்ல என்ன பேருந்து உடனே உள்ளது என்பதிலேயே நாட்டமாக இருந்தேன்.

''இவ்வளவு தூரம் வந்த பிறகு, கோயில் நகரமான கும்பகோணத்துத் திருத்தலங்களில் முக்கியமானவற்றைத் தரிசிக்காமல் உடனே ஊருக்குப் புறப்படுவதிலேயே குறியாக இருக்கிறீர்களே!'' என்று வருத்தப் பட்டுக் கொண்டார் என் உறவினர்.


குமரகுருபர சுவாமிகள் தாம்பாடியுள்ள முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழில்

''ஒழியாத புவனத்து உயிருக்கு உயிரதாய்
நிற்ப ஒரு தெய்வம்.. மெய்கண்ட தெய்வம்
இத்தெய்வமல்லால் புவியில் வேறில்லை''

என்று போற்றியுள்ளார். அத்தகைய

# நால்வர் இறைவனை வழிபட்ட முறை

1. ஞான சம்பந்தர் இசையால் வழிபட்டார் (அவர் கைகளில் தாளம்)
2. நாவுக்கரசர் தொண்டால் வழிபட்டார். (அவர் கைகளில் உழவாரப்படை)
3. சுந்தரர் மலரால் வழிபட்டார். (அவர் கைகளில் தாமரை)
4. வாதவூரர் ஏட்டால் வழிபட்டார். (அவர் கைகளில் ஓலைச்சுவடி)




முருகப்பெருமானை - தகப்பன் சுவாமியை வழிபட்ட பிறகு வேறு எந்தத் தெய்வம் வழிபட வேண்டும்!''

''எல்லாம் சுவாமி மலையிலேயே கிடைத்து விடுகிறதே'' என்று நான் சமாதானம் சொன்னேன்.



ஆனால் என் உறவினர் விடுவதாயில்லை

'' முருகப்பெருமானை வழிபட வேண்டுமென்றால் சென்னையில் வடபழநிஇல்லையா? கந்தக்கோட்டம் இல்லையா? ''எங்கே நினைப்பினும் அங்கே என் முன் வந்து எதிர் நிற்பனே'' என்று அருணகிரிநாதர். இருந்த இடத்தில் இருந்தவாறே முருகனை நினைத்தால் அங்கே வந்து எதிர் நின்று முருகன் அருள்புரிவார் என்று பாடியிருக்கவில்லையா?''

''திருமூலரும் என்ன சொல்கிறார்?

''நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பண்மின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக்
கொள்வனே''

என்று திருக்கோயில்களைத் தேடித் தேடி வலம் வந்து வழிபட வேண்டும் என்று பாடியிருக்கவில்லையா?''

''ஆகவே கும்பகோணத்துத் திருத்தலங்களில் முக்கியமான தலங்கள் சிலவற்றை வழிபட்ட பிறகுதான் ஊருக்குப் புறப்பட வேண்டும்'' என்று வலியுறுத்தினார் என் உறவினர்.

''சுவாமிமலைக்கு வந்தோம். கண்ணார வழிபட்டோம். சுற்றிலும் உள்ள திருத்தலங்களில் முக்கியமாக சிலவற்றை இப்போதே வழிபட்டுச் செல்வதால் நம்முடைய காலவிரயத்தையும், பணவிரயத்தையும் குறைக்கலாம். இங்குள்ள தலங்களை தரிசிக்க ஒவ்வொரு முறையும் வருவதென்றால் ஆகுமா?'' என்று என் உறவினர் சொன்ன கருத்தும் எனக்கும் மிகச்சரியாகவே பட்டது.

''அப்படியானால் எந்தெந்தத் திருத்தலங்களைத் தரிசிக்கலாம். நீங்களே கூறுங்கள்'' என்று நான் என் உறவினரைக் கேட்டுக்கொண்டேன்.

கும்பகோணத்தைச் சுற்றிலும் 5 முதல் 50 கி.மீ தொலைவில்தான் அநேகத் திருத்தலங்கள் அமைந்துள்ளன. ஒரு மகிழ்வுந்தை வாடகைக்கு அமர்த்திக் கொண்டால் இத்திருத்தலங்கள் எல்லாவற்றையும் இரண்டு நாட்களில் வழிபட்டு முடித்துவிடலாம்'' என்றார் என் உறவினர்.

''திருமணப் பிரார்த்தனைத் தலமான புகழ்பெற்ற திருமணஞ்சேரி திருத்தலமும் இங்கிருந்து மிகப்பக்கம்தான். இராகு, கேது

## நால்வரை இறைவன் ஆட்கொண்ட முறை

1. சம்பந்தருக்குப் பாலைக் கொடுத்து ஆட்கொண்டார்.
2. அப்பருக்குச் சூலை கொடுத்து ஆட்கொண்டார்.
3. சுந்தரருக்கு ஓலை கொடுத்து ஆட்கொண்டார்.
4. மாணிக்கவாசகருக்குக் காலைக் கொடுத்து ஆட்கொண்டார்.

பிரார்த்தனைத்தலமான திருநாகேஸ்வரம், மணிவிழா காணும் பக்தர்கள் வந்து ஆயுள் யோமம் செய்யக் கூடிய திருக்கடவூர் முதலான பற்பல புண்ணியத் திருத்தலங்களும் இங்கிருந்து பக்கம் தான்''என்றார் என் உறவினர்.



அப்போதே ஒரு மகிழ்வுந்தை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு

**''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே''**

என்று திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பாடலைப் பாடியவாறே குடந்தையிலும், குடந்தையைச் சுற்றியுமுள்ள புண்ணியத் திருத்தலங்கள் பலவற்றையும் தரிசிக்கப் புறப்பட்டு விட்டோம் நாங்கள்.

உங்களையும் ஆற்றுப்படுத்த இதோசில தகவல்கள்:

குடந்தையிலும் குடந்தையைச் சுற்றியுமுள்ள வழிபட வேண்டிய சில முக்கியத்தலங்களின் விவரம் பின்வருமாறு.:

1. அருள்மிகு ஆதிகும்பேஸ்வர சுவாமி திருக்கோயில், கும்பகோணம் - கும்பகோணத்தில் நகர்நடுவே உள்ளது.
2. அருள்மிகு சாரங்கபாணி சுவாமி திருக்கோயில், கும்பகோணம் - கும்பகோணத்திற்குக் கிழக்கே 6 கி.மீ தொலைவில் உள்ளது.
3. அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம் - கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 5கி.மீ தொலைவில் உள்ளது.
4. அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில், ஒப்பிலியப்பன் கோயில் - கும்பகோணத்திற்கு கிழக்கே 6 கி.மீ தொலைவில் உள்ளது.
5. அருள்மிகு சுவேத விநாயகர் திருக்கோயில், திருவலஞ்சுழி - கும்பகோணத்திற்கு மேற்கே 10 கி.மீ தொலைவில் உள்ளது. சுவாமிமலையிலிருந்து தெற்கே 1 கி. மீ தூரம் தான்.
6. அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயில், திருவிடைமருதூர் - கும்பகோணத்திற்கு கிழக்கே 7 கி.மீ தொலைவில் உள்ளது.
7. அருள்மிகு சிவசூரியப் பெருமான் கோயில், சூரியனார் கோயில் - கும்பகோணத்திற்கு வட கிழக்கே 13 கி.மீ தொலைவில் உள்ளது.
8. அருள்மிகு உத்வாகநாத சுவாமி திருக்கோயில், திருமணஞ்சேரி - கும்பகோணத்திலிருந்து மயிலாடுதுறை செல்லும் வழியில் குத்தாலம் எனும் ஊர் உள்ளது. அங்கிருந்து வடக்கில் 4 கி.மீ தொலைவில் உள்ளது இத்தலம்.
9. அருள்மிகு தேனுபுரீஸ்வரசுவாமி திருக்கோயில், பட்டீச்சரம் - கும்பகோணத்திற்குத் தென்மேற்கே 8 கி.மீ தொலைவில் உள்ளது.
10. அருள்மிகு கோமுக்தீஸ்வரசுவாமி திருக்கோயில், திருவாவடுதுறை - கும்பகோணத்திற்கு கிழக்கே 21 கி.மீ தொலைவில் உள்ளது.
11. அருள்மிகு கம்பகரேசுவரசுவாமி திருக்கோயில், திருபுவனம் - கும்பகோணத்திற்கு கிழக்கே 6 கி.மீ தொலைவில் உள்ளது.
12. அருள்மிகு ஐராவதேஸ்வரசுவாமி திருக்கோயில், தாராசுரம் - கும்பகோணத்திற்கு தென்மேற்கில் உள்ளது.

* * *



## பிடாரி என்பதன் பொருள்

பீடைகளை (கஷ்டங்களை போக்குவதால் அம்பாள் பீடாபரிக என்று அழைக்கப்படுகிறா இச்சொல்லே மக்கள் வழக்கி ''பிடாரி'' என்று வழங்குகின்றது.

# திருமந்திர உபதேசம்

''திருமந்திரச்செல்வர்'' டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

ஞான குருவின் திருவடிகளைச் சார்ந்து, தனது உடல், உயிர், உடமை ஆகியவற்றை ஆசிரியருக்கு அர்ப்பணிக்கத் துடிக்கின்றான் சீடன். அவனுக்கு உண்மை தெரிந்து விட்டது. தனக்கு இறைஞானத்தைக் கொடுக்கப் போகின்றவன் குருவென்று. குருவே அவனுடைய மலங்களையும் நீக்குவான். திருவருள் உணர்வு, அவனது உள்ளத்தில் வந்து சேர, அத்துவசுத்தி செய்வதும் குருவே.


மனிதர்களும், தேவர்களும், பிறவிச் சூழலில் மூழ்கிக் கிடக்கின்றபோது, அதைக் கடந்து, சிவஞானம் பெற்று, உலகத்தில் வாழ்வோரையும் வினைக்கடலிருந்து காப்பாற்றக் கூடிய ஆற்றல் மிகுந்த நிலையில் திருமூலர், குருவே சிவம் என்று வலியுறுத்திச் சொன்னார். குரு என்பவன் ஞானி ; குற்றமற்றவன். எனவே அவனைப் 'பதி'' என்றே கூற வேண்டுமன்றி, வேறு சொல்வதற்கில்லை என்பார்.

''நரருஞ் சுரரும் பசுபாசம் நண்ணிக்
கருமங்களாலே கழிதலின் கண்டு
குரு என்பவன் ஞானி கோதிலன் ஆனால்
பரம் என்றல்அன்றிப் பகர்வொன்றுமின்றே''

(திருமந்திரம் , ஏழாம்தந்திரம் - 2120)

ஞான குருவின் இருப்பிடத்திற்கு விரைந்து செல்கிறான் சீடன். அதோ, தொலைவில் தெரிகிறது அந்தக் குருமடம். அதைப் பார்க்கும் போதே உள்ளத்தில் உவகை பொங்குகிறது. உடம்பிலிருந்து பெரும் பாரம் இறங்குகிறது. அன்பு பெருக்கெடுத்தோடுகிறது. தனது வினைகள் நீங்கும் உணர்வு வருகிறது. இறைவன் மீதும், ஞான குருவின் மீதும் பக்தி தோன்றி, தான் பெற்ற பேறுக்கு எவ்வாறு கைம்மாறு செய்வது என்கிற மலைப்பு மனதிலே உண்டாகிறது.

மணிவாசகப் பெருமான், குதிரைகள் வாங்க திருப்பெருந்துறையை நோக்கிச் செல்கிறார். அந்த ஊரை அடைவதற்கு முன் அவர் கண்ட காட்சி அவருடைய உள்ளத்தைத் தாக்குகிறது. அங்கே குருந்தமரம் ஒன்று; அந்த மரநிழலில் வீற்றிருக்கும் சிவகுரு. அவரைச் சுற்றி அமர்ந்திருந்த திருக்கூட்டம். ஐந்தெழுத்து மந்திர ஒலி. பெருமான் பரவசம் அடைகின்றார். சிவகுருவைக் கண்டமாத்திரத்திலேயே அவரால் ஆட்கொள்ளப் பட்டார் மணிவாசகர்.



''அருபரத்தொருவன் அவனியில் வந்து
குருமகனாகி அருளிய பெருமையைச்
சிறுமையென்றி கழாதே திருவடி இணையை
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின்னாகி முனியாது அத்திசை
என்பு நைந்துருக நெக்குநெக்கேங்கி
அன்பெனும் ஆறுகரையதுபுரள
நன்புலன் ஒன்றி ''நாத'' என்றரற்றி
உரை தடுமாறி, உரோமஞ்சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்களி கூர, நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறுந்தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி''

மணிவாசகப் பெருமானுடைய உணர்வுப் பெருவெள்ளம் ஒப்பற்ற பாடலாக மிளிர் கின்றது. (போற்றித்திருவகவல், திருவாசகம்)

குரு மடத்தில் வேள்விகள் நடைபெறு கின்றன. படைப்புகள் படைக்கப்பெறுகின்றன. மந்திர ஒலியும், வேத ஒலியும், மணி ஒலியும், திருமுறை ஒலியும், தூபத்தின் புகையும் எல்லாம் கலந்து வந்து, இதுதான் குருமடம் என்று சீடனை உணர்த்துகின்றன. இதைக் கண்ணால் காண்பவர்கள் சிவபெருமானது திருவடியைச் சார்வார்கள் என்கிறார் திருமூலர்.

''பலியும், அவியும் பரந்து புகையும்
ஒலியும் எம்ஈசன் தனக்கே உள்கிக்
குவியும் குருமடம் கண்டவர் தாம் போய்த்
தளிரும் மலரடி சார்ந்து நின்றாரே''

(9ம் தந்திரம் , குருமடதரிசனம் - 2649)

குருமடமே சிவனது இல்லம் என்கிறார். திருமூலர் பெருமான் ஞானாசிரியனை ஒரு தனி மனிதனாகப் பார்க்கும் வரை குருமடமும் சிவனுடைய வியாபகமும் வெவ்வேறு

## தேடி வைக்க வேண்டியவை

1. இரவுக்கு வேண்டியதைப் பகலில் தேடிக் கொள்ள வேண்டும்.
2. மழைக் காலத்திற்கு வேண்டியதை மற்றைக் காலத்தில் தேடிக் கொள்ள வேண்டும்.
3. முதுமைக்கு வேண்டியதை இளமையில் தேடிக் கொள்ள வேண்டும்.
4. மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக் கொள்ள வேண்டும்.



பொருள்கள் என்று கருதத் தோன்றும். ஆனால் சிவகுருதான், உண்மையாக சிவன் இருக்கும் இடம் என்று தெரிந்து கொண்டபிறகு பேதத்திற்கு இடமில்லை. இது தெரியாமல் மனிதர் ஏதேதோ சொல்வார்கள் என்கிறார் திருமூலர்.

*''அவனுக்கு இவன் இல்லம் என்றென்றறிந்தும்*
*அவனைப் புறம்பென்று அரற்றுகின்றாரே''*

அத்தகைய குருமடத்தை நான் சென்று தரிசித்தேன் என்கிறார் திருமூலர். அது எத்தகைய இடம்? ஞானத்தை நாடிப் பெற விருப்பமுடையவர்கள் சேர வேண்டிய பெருந்துறையாகும் என்கிறார். சிவனது சேவடிகள் தேடி அடைய அரியனவாக இருக்கலாம். ஆனால் திருமடத்தைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டுள்ள ஞானகுருவே எங்களுக்குச் சிவனாக விளங்கும் இடம் என்றும் சொல்வார்.

*''நாடும் பெருந்துறை நான் கண்டுகொண்டபின்*
*கூடும் சிவனது கொய்மலர்ச் சேவடி*
*தேட அரிய சிறப்பில்லி எம்மிறை*
*ஓடும் உலகு உயிராகி நின்றானே''*

(9ம் தந்திரம் , குருமட தரிசனம் - 2651)

இந்தக் குருமடத்தில் ஞான குருவினைத் தரிசிக்கப் போகின்றோம். ஞானகுருவின் இயல்பு யாது? அவனிடம் அசுத்த மாயை, பிரகிருதி மாயை போன்றவற்றின் சேட்டை அறவே ஒழிந்து விடும். பலவிதமான தூல, நுட்ப சரீரங்களின் இயக்கத்தை, நன்கு அறிந்து, அவற்றிலிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்வான்.

உடலும், உடலைப் பற்றி நிற்கும் கருவிகள் தத்துவங்கள் எனக் கழற்றி வைக்கப்படும். பாசஞானம் அகன்றுவிடும். தான் உடலென்று இருந்த உணர்வு ஒடுங்கிவிடும். திருவருள் வழிகாட்ட சிவஞானம் ஆசாரியனின் உள்ளத்தில் தோன்றி, வளர்ந்து, ஞானியானவன் அந்த ஞானத்தில் ஒடுங்கி நிற்பான். சிவஞான அநுபவத்தில் ஆழ்ந்து, மோனநிலையில் வீற்றிருக்கும் ஞானி சீடனை வரவேற்கக் காத்திருக்கின்றான்.

குருவை வணங்குங்கள், பல பிறவிகளில் அறியாமையை வளர்த்துத் தன்னை உடலெனக் கருதி, உடலுடனும் கருவிகளுடனும் இணைந்து, செயல்பட்டு வரும் உயிர் அறிவு பெறுவதற்கான குருவின் உபதேசத்தை, குருவிற்குச் செய்யும், ஆழ்ந்த உணர்வுடைய வணக்கமே தந்துவிடும். அந்த உபதேசம் சிவபெருமான் திருவடிகளை அடைவதற்கு வழிவகை செய்யும். சிவானந்தப் பேற்றினையும் தரும். அது, முடிவின்றி, வளரும் அனுபவமாகத் திகழும். இது திருமூலரின் அறிவுரை:

*''ஆறொடுடுப்பதும் அங்கே அடங்கிடல்*
*கூறக் குருபரன் கும்பிடு தந்திடும்*
*வேறே சிவபதம் மேவா அளித்திடும்*
*மேறாக ஆனந்தம் மேலும் பெருகவே''*

(9ம் தந்திரம், ஞான குரு தரிசனம் - 2656) .

திருமூலருடைய ஞானாசி[illegible]ன் நந்தியெம்பெருமான் ஆயிற்றே ! அவனை நினைக்கும் போதே திருமூலருக்கு உணர்வு பெருக்கெடுத்து ஓடுகிறது. தன்னுடைய குரு தனக்குத் தாய் போன்றவர் என்கிறார். தாயின் கருணை உள்ளத்தை அவரிடம் பார்க்கின்றார். அவருடைய உபதேசம் வாய்மையை இருப்பிடமாகக் கொண்டது. அவரை வணங்குவதற்கென்றே நான் என் தலையைப் பெற்றேன் என்கிறார் திருமூலர்.

அவருடைய திருவடிகளில் என் தலைபட வேண்டும். அவரை வாழ்த்துவதற்காகவே நான் வாயைப் பெற்றேன். அவரைக் காண்பதற்காக அல்லவா இந்தக் கண்கள் !. அவரைப் பற்றிய சிந்தனை என்னுள் இருப்பதற்காகவே என் மனத்தைப் பெற்றேன். இது திருமூலர் தன்னுடைய குருவுக்குக் சூட்டும் புகழ்மாலை.

*''ஆயனநந்தி அடிக்கு என் தலை பெற்றேன்.*
*வாயன நந்தியை வாழ்த்த என் வாய் பெற்றேன்.*
*தாயன நந்தியைக் காண என்கண் பெற்றேன்.*
*சேயன நந்திக்கென் சிந்தை பெற்றேனே!''*

(9ம் தந்திரம், ஞான குருதரிசனம் - 2658)

திருநெறியை அடைய வழிகாட்டுவது குருநெறி என்று சைவசித்தாந்தம் உணர்த்துகிறது. குருநெறி என்பது ஞானகுருவை அடைந்து தீட்சைபெற்று, குருவின் திருவடிகளைச் சார்ந்த வண்ணம் சீடன் குருவருளால் உபதேசம் மூலமாக ஞானத்தைப் பெற்று, ஞானத்தின் வழி நிற்பதாகும். ஞானோபதேசம் என்பது சீடனின் மனம், புத்தி, சித்தம் இவற்றால் அடையப் பெற்று, அங்கே மண்டிக் கிடக்கும் உலகப்பற்றுகளையும், உணர்ச்சிகளையும் நீக்கிக் கிடைக்கப்பெறும் தெளிவு நிலையாகும். திரையற்ற நீர் போல் சிந்தை தெளிந்த நிலையாகும்.




# ''படியாய்க் கிடந்துவுன் பவளவாய் காண்பேனே''

திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

உலக நாகரீகத்தின் முதல் இனம் தமிழ் இனம் என்பது உலகம் கண்ட உண்மை. தங்களுடைய வாழ்க்கை முறைகளை இயற்கையோடு இணைத்ததோடு மட்டுமல்லாமல் இறைஉணர்வை வாழ்க்கையில் நடனமாட வைத்தவர்கள்தமிழர்கள்.

தாங்கள் வாழ்ந்த பகுதியை ஐந்து நிலங்களாக, அதாவது, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பிரித்து அதற்கான தெய்வங்களை முறைப்படியே வகுத்து வாழ்ந்து தங்களுடைய வரலாற்றை வளமாக வளர்த்தார்கள்.

முல்லை நிலம் என்று சொல்லக்கூடிய காடும் காடு சார்ந்த இடத்திற்கு முழுமைப் பொருளான, முற்றுணர்ந்தோனான மாயோனைக் கடவுள் என்கின்றனர். அதனால் தான் தொல்காப்பியப் பெருமானும் ''மாயோன் மேயக் காடுறை உலகமும்'' என்று சொல்லி வைத்தார்.



மக்களுடைய பெரும் துன்பத்தைத் தீர்க்க வேண்டுமென்று திருமால் அகன்ற உலகில் பன்னிரு ஆழ்வார்களாக அவதரிக்கச் செய்து பரம்பொருளின்மேல் பாசுரங்களைப் பாடி மக்களுக்கு எல்லாம் நன்மை பயக்க அருளிச்செய்தார்.

இறைபக்தியைத் தம்முடைய முழுமையான வாழ்க்கை நெறியாகக் கொண்ட ஆழ்வார்கள் எல்லாம் இறை முழக்கத்தோடு செந்தமிழ் முழக்கத்தையும் செழிக்கச் செய்தவர்கள். குலசேகர ஆழ்வார் என்று சொல்லக்கூடிய பெருமான் தன்னுடைய அரசவாழ்க்கையைத் துறந்து அனுதினமும் எம்பெருமான் இராமபிரானுடைய திருப்பாதத்தை பார்க்கக்கூடிய வாய்ப்பு ஒன்று கிடைக்குமானால் அது தான் தாம் செய்த பெரிய புண்ணியம் என்று வேண்டுகின்றார்.

''செடியாய வல்வினைகள்
தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா!
நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும்
அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன்
பவளவாய்க் காண்பேனே!''

துன்பங்களைத் தரவல்ல கொடிய வினைகளைத் தீர்க்கும் ஆற்றல்மிக்க திருமாலே! திருவேங்கடத்து உறையும் எம்பெருமானே! உன்னுடைய திருவடியைப் பார்ப்பதற்கு உனது அடியார்கள் காத்துக் கிடக்கின்றார்கள். உன்னைத் தொழுது வாழ்க்கையிலே உயர்வு பெற வேண்டுமென்று தேவர்களும், அழகு மிக்க அரம்பையர்களும் தரிசனத்திற்குத் தவம் கிடக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் வருவதும் போவதுமாக இருக்கிற நின் திருக்கோயிலில் திருப்படிக் கல்லாக இருந்து தவம் கிடந்து உன் திருப்பவழ வாயழகை மட்டுமாவது காண்கின்ற பேற்றினை பெறமாட்டேனா? என்று ஏங்குகிறார்.

''ஆனாத செல்வத்து
அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும்
மண்ணரசும் யான்
வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத்
திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும்
விதியுடையே னாவேனே!''

குறைவில்லாத செல்வத்தோடு கூடி வாழும் வாழ்க்கை, அரம்பையர்கள் போன்ற அழகிய மங்கையருடனிருந்து இன்பம் தரக்கூடிய வாழ்க்கை, வானுலகையே ஆளுகின்ற உயர்ந்த செல்வ வாழ்க்கை ஆகியவை எல்லாம் எனக்கு வேண்டாம். தேன் நிறைந்த மலர்கள் மலர்ந்து மணம் வீசும் சோலைகளாகச் செழிப்புற்றுத் திருவேங்கட மலையில் இனிய நீரினைக் கொண்டு இருக்கும் சுனைகள் பல இருக்கின்றன. அச்சுனைகளில் வாழும் ஒரு மீனாக பிறந்து விட்டால் போதும். நான் பெரும்பேறு உடையவனாகி விடுவேன் என்று தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார்.

''ஊனேறு செல்வத்து உடற்பிறவி
யான்வேண்டேன்
ஆனேறேழ் வென்றான் அடிமைத்
திறமல்லால்
கூனேறு சங்கம் இடத்தான்தன்
வேங்கடத்து
கோனேரி வாழும் குருகாய்ப்
பிறப்பேனே!''

செல்வங்களும், செழிப்புகளும் மனித

வாழ்க்கையில் கூடக் கூட மனிதன் அழகு பெறுகின்றான். ஆனந்தம் அவன் முகத்திலே தாண்டவம் ஆடுகின்றது. சாதாரண லெளகீக வாழ்க்கையில் மதிக்கப்படுகின்றான். பிறவிப் பயனை அடைந்ததாக பெருமை அடைகின்றான். தன்னை உலகம் மதிக்கின்றது என்று உவகை கொள்கின்றான். இவற்றுக் கெல்லாம் அணியாக இருக்கக்கூடிய எவ்வளவு செல்வம் கொடுத்தாலும் எனக்கு வேண்டாம். கொடிய எருதுகளை வென்று தனது ஆற்றலை நிலைநாட்டிய செல்வத்திருமாலாகிய எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்வதை மட்டும் தான் நான் விரும்புகின்றேன்.

அதே நேரத்தில் இந்த மண்ணுலகத்தில் பிறக்கவும், வாழவும் நான் விரும்புகின்றேன். ஏன் என்று தெரியுமா? வளைந்த வலம்புரி சங்கினைத் தன் இடக்கையில் தரித்திருப்பவன் திருமால். அவன் தரித்திருக்கும் இடம் திருவேங்கடமலை. அந்தத் திருவேங்கடமலையில் 'கோனேரி' உள்ளது. அந்த புனித நீர் நிலையில் நாரையாக நான் பிறந்தால் அப்பெருமான் வாழும் இடத்தில் நான் பிறந்தேன் என்று பெயர் உண்டு. என் பிறப்பும் வாழ்வும் திருவேங்கடத்திலே நிகழ வேண்டுமென்பது என் ஆசை. அந்த ஆசையை எனக்கு உருவாக்கித்தர வேண்டுமென்று வேண்டுகிறார் குலசேகர ஆழ்வார்.

எனக்கு உன்னை விட்டால் கதி இல்லை. உன்னுடைய சீரடியை விட்டால் நான் உலகில் சீர் பெற முடியாது. உன்னுடைய திருநாமம் எனக்குக் கிடைக்கவில்லை என்றால் நான் மனிதனாக வாழ முடியாது. என்னை நீஉதைத்தாலும் அடித்தாலும் நீதான் என்னை அரவணைக்க வேண்டும். பெற்ற தாய் தனது பிள்ளையை எவ்வளவு தான் அடித்தாலும் உதைத்தாலும் மீண்டும் தாயிடமே அக்குழந்தை வந்து சேரும். அதுபோல நீஎன் மீது கருணை கொள்ளாவிட்டாலும், உன் கருணை எனக்குக் கண்டிப்பாக வேண்டும். உன் கருணை இல்லை என்று சொன்னால் நான் மனிதனாக வாழ முடியாது. நான் மனிதனாக வாழ்வதற்கு அருகதை இல்லாமல் போய்விடும்.

***"தருதுயரம் தடாயேல்உன்***
***சரணல்லால் சரணில்லை***
***விரைகுழுவு மலர்பொழில் சூழ்***
***வித்துவக்கோட்டம் மானே!***
***அரிசினத்தால் ஈன்றதாய்***
***அகற்றிடினும் மற்றவள் தன்***
***அருள் நினைந்தே யழும் குழவிஃ***
***அதுவேபோன் றிருந்தேனே!"***

இவை போன்ற பல பாடல்களைப் பாடி குலசேகர ஆழ்வார் எம்பெருமானின் இறை பக்தியை இதன்மூலமாக உலகுக்கு எடுத்துக்காட்டினார். மனித வாழ்க்கையில் மிக முக்கியமான இரண்டு அம்சங்களை அவர் தம் பாசுரங்கள் மூலம் உலகிற்கு எடுத்துக் காட்டுகிறார். ஒன்று எண்ணத்தில் தெளிவு, மற்றொன்று செயலில் தூய்மை.

**எண்ணத்தில் தெளிவு**

ஆழ்வார்களில் குறிப்பாகக் குலசேகர ஆழ்வார் மனித வாழ்க்கையினுடைய மகத்துவத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் உணர்த்துகின்றார். மனித வாழ்க்கை நிலையற்றது. மாசுகள் நிறைந்தது. இந்த மாசுகள் படிய அனுமதி அளிக்கப்படுகின்றபொழுது மனிதன் மிருகமாகின்றான். மாசுகள் மனத்தையும் எண்ணத்தையும் விட்டு விலகுகின்றபொழுது தெய்வம் ஆகின்றான். ஆக மனித வாழ்க்கையில் பொய் பேசுதல், களவாடுதல், பிறன் மனை நோக்குதல், பொறாமை கொள்ளுதல், ஆணவம், கண்மம், மாயை போன்ற எண்ணங்கள் எல்லாம் இருத்தல் ஆகா. இதற்குத் தெளிவான ஒரு சிந்தனை இருக்க வேண்டும். இதையே குலசேகராழ்வார் தம் பாசுரங்களில் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

**செயலில் தூய்மை**

வாழ்க்கையினுடைய முழு அர்த்தமும் சந்தேகமறத் தெரிந்தபின் என்ன வழிமுறைகளை கடைப்பிடித்தால் வாழ்க்கை இன்பமுறும்? ஓயாது உழைக்க வேண்டும். வாழ்க்கை இன்பமுற எல்லாம் வல்ல இறைவனை நாடுவதுதான் என்பதை அறிந்த அடியார்கள் எல்லாம் காலமெல்லாம் ஓயாது பெருமானின் கருணைக்காக அருளுக்காகப் பாசுரங்களைப் பாடியும், ஆடியும் ஆலயங்களை நிர்மாணம் செய்தும் இறைப்பணி செய்தனர். ஆண்டவனின் சன்னதியில் சரணாகதி அடைந்து மனித குலம் தழைக்க மாசற்ற பணியினைச் செய்தவர் குலசேகராழ்வார்.

## பன்னிரு ஆண்டுகளுக்கொரு முறை கும்பாபிஷேகம் ஏன்?



*12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்ய வேண்டும்.*

*அவ்வாறு செய்யாவிடில் தெய்வ மூர்த்திகளிடமுள்ள சக்தி தலவிருட்சத்திற்குச் சென்று 12ஆண்டுகள் தங்கி இருக்கும்.*

*அடுத்த 12 வருடத்திற்குள் கும்பாபிஷேகம் நடைபெறாவிட்டால் அந்த தெய்வச் சக்தி வானில் சென்று கலந்து விடும்.*

*ஆகவே 12 ஆண்டுகளுக்கொரு முறை அவசியம் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும்.*

# தென் திருப்பதி எனும் ஸ்ரீ ஒப்பிலியப்பன் ஸந்நிதி

**1. செல்லும் வழி**

இத்திருத்தலம் கும்பகோணம் நகருக்குத் தெற்கில் 7 கி.மீ. தூரத்தில் காரைக்கால் - திருநள்ளாறு செல்லும் சாலையிலிருந்து 1/2 கி.மீ. தூரத்தில் உள்ளது. கும்பகோணம் பேருந்து நிலையத்திலிருந்து அடிக்கடி இத்தலத்திற்கு நகரப் பேருந்துகள் வருகின்றன. 'ராகுஸ்தலம்' நாகநாதசுவாமி திருக்கோயிலுக்கு மிக அண்மையிலேயே உள்ளது.




**6. ஐந்து திருமேனிகள்**

இவ்வெம்பெருமான் நம்மாழ்வாருக்கு ஐந்து வடிவங்களுடன் காட்சியளித்ததாகத் தெரிகின்றது. அவை பொன்னப்பன் - மணியப்பன் - முத்தப்பன் - என்னப்பன் - திருவிண்ணகரப்பன். இந்த ஐவரையும் நம்மாழ்வார் பெயரிட்டுப்பாடியுள்ளார்.

**7. பாடிய ஆழ்வார்கள்**

இத்தலத்தையும் இவ்வெம்பெருமானையும் நம்மாழ்வார் (11 பாசுரம்), திருமங்கையாழ்வார் (34 பாசுரம்), பொய்கையாழ்வார் (1 பாசுரம்), பேயாழ்வார் (2 பாசுரம்) ஆகிய நான்கு ஆழ்வார்கள் மங்களாசாஸநம் செய்தருளி யுள்ளனர். (மொத்தம் 48 பாசுரங்கள்).

**2. தலத்தின் பெயர்கள்**

இத்தலம் ஆகாசநகரம் - வைகுண்ட நகரம் - திருவிண்ணகர் - ஒப்பிலியப்பன் ஸந்நிதி - உப்பிலியப்பன் ஸந்நிதி முதலிய பெயர்களால் வழங்கும்.

**3. எம்பெருமான் திருநாமங்கள்**

இத்தலத்து எம்பெருமானுக்குத் ''திருவிண்ணகரப்பன்'' ''தன்னொப்-பாரில்லப்பன்'' ''ஒப்பிலியப்பன்'' ''உப்பிலியப்பன்'' ''ஸ்ரீநிவாஸன்'' என்ற திருநாமங்கள் வழங்கும். ஸ்ரீ வேங்கடாசலபதி என்ற திருநாமமும் உள்ளது.

**4. பிராட்டியின் திருநாமங்கள்**

இங்குப் பிராட்டிக்கு ''பூமிதேவி'' ''பூதேவி'' ''பூமிநாச்சியார்'' ''தரணீதேவி'' ''வஸுந்தரை'' என்ற திருநாமங்கள் வழங்கும்.

**5. எழுந்தருளியுள்ள முறை**

பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்திலும், நாச்சியார் வடக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்திலும் எழுந்தருளி யுள்ளனர். மார்க்கண்டேயர் தெற்கு நோக்கி அமர்ந்து கன்னிகாதானம் செய்யும் கோலத்தில் காட்சி தருகின்றார்.

**8. திவ்விய தேசத்தின் தனிப்பெருமை**

நம்மாழ்வார் எம்பெருமானைப் பிரிந்து வருந்தி நின்ற நிலையில் இத்தலத்து எம்பெருமான் தானே மேல் விழுந்து , ஆழ்வாரை அணைத்துக்களித்த தலமாதலின், இதை எந்நாளும் பிரியாது எம்பெருமான் இங்கு நித்யவாஸம் செய்வதாய் முன்னோர்களான ஆசிரியர்கள், ஆழ்வார் பாசுரத்துக்கு உரைகண்டனர். பின்னும் நம்மாழ்வார் இத் தலத்துக்குத் தாம் பாடிய திருவாய் மொழிப் பதிகத்தில் ஒன்பது பாசுரங்களில் முரண்பாடுள்ள பொருள்களைப் பேசி அவற்றுக்கு அந்தர்யாமியாய் எம்பெருமான் நிற்பதால், சேராத பொருள்களைச் சேர்க்கும் பெருமையன் என்று பாடியுள்ளார். மேலும் திருமங்கையாழ்வார் பாடிய இத்தலத்தின் முப்பதிகங்களில் முதலாவதில் ஒன்பது பாசுரங்களில் முற்பகுதியில் எம்பெருமானது பெருமையைக் கூறி அவனை அழைத்துப் பிற்பகுதிகளில் அவனைக் காணும் பேற்றை அருளினால் மனைவாழக்கையை வேண்டவில்லையென்று ஒரே வகையான விசித்திரக் கவிகளால் பாடியுள்ளார்.

9. **பெருமானை நேரில் கண்டவர்கள்**

கருடன், காவேரி, தர்மதேவதை, மார்க்கண்டேயர் இவர்கள் நால்வருக்கும் இத்தலத்து எம்பெருமான் காட்சி அளித்ததாகப் புராணம் கூறுகின்றது.

10. **விமானம்**

சுத்தாநந்தம் (சுத்த ஆனந்தம்) என்பது விமானத்தின் பெயர். இது மிக புனிதமாய்ச் சேவிப்பவர்களுக்குப் பெருமகிழ்ச்சியைத் தருவதால், இப்பெயரை உடையது. திருமலை திருப்பதியில் உள்ள விமானத்தின் பெயர் ஆனந்தம் என்பது இங்கு நோக்கத்தக்கது.

11. **க்ஷேத்திரம்**

இது மார்க்கண்டேய முனிவரின் அருந்தவப் பயனாய் எம்பெருமானும் பிராட்டியும் இங்கு அவதரித்து நித்ய வாஸம் செய்வது பற்றி ''மார்க்கண்டேய க்ஷேத்திரம்'' என வழங்குகின்றது. திருத்துழாய்க் காட்டில் பூமி தேவியாகப் பிராட்டி அவதரித்தது பற்றித் ''துளஸீவனம்'' என்ற பெயரும் உண்டு.

12. **புஷ்கரணி**

இதற்கு 'அஹோராத்ர புஷ்கரணி' எனப் பெயர். மற்றைத் தலத்துப் பொய்கைகளிற் போலன்றி இதில் காலவரையரை யின்றிப் பகலும் இரவும் நீராடலாம். ஆதலின் இப்பெயர் பெற்றது. இந்தப் புஷ்கரணி, தற்போது, திருக்கோவில் திறந்திருக்கும் போது மட்டும் நீராட அனுமதிக்கப்படுகின்றது.

13. **மற்ற நீர்நிலைகள்**

ஆலயத்திற்கு வெளியே சார்ங்க தீர்த்தம் - ஸூர்ய தீர்த்தம் - இந்த்ர தீர்த்தம் - ப்ரஹ்ம தீர்த்தம் என்ற நான்கு குளங்கள் புராணப் புகழ் பெற்றுள்ளன.

14. **புண்ணிய நதிகள்**

ஆலயத்திற்குத் தெற்கே தக்ஷிண கங்கை - தக்ஷிண யமுனை - தக்ஷிண கோதாவரி என்னும் மூன்று புண்ணிய நதிகள் ஓடுகின்றன.

15. **பெருமாள் திருஅவதார தினம்**

எம்பெருமான் ஒரு பங்குனி மாதத்தில் ஏகாதசி கூடிய திருவோண நட்சத்திரத்தில் பகல் 12மணிக்கு இத்தலத்தில் அவதரித்தான். இந்த அவதார தினத்தில் திருத்தேருடன் ஒன்பது நாள் பிரம்மோத்ஸவம் ஆண்டுதோறும் சிறப்பாய் நடக்கின்றது.

16. **திருமணம் புரிந்த நாள்**

எம்பெருமான் பூமிப்பிராட்டியை ஐப்பசி மாதத்துத் திருவோணத்தன்று மணந்து கொண்டார். ஆண்டுதோறும் ஐப்பசி திருவோணத்தில் திருக்கல்யாண உத்ஸவம் தொடங்கித் தற்கால முறைக்கு ஏற்பப் பலவகை இசைநிகழ்ச்சிகளுடன் 12 நாள் நடந்து வருகிறது.

17. **ஆலயத்தின் விசேஷ அம்சம்**

உப்பு இல்லாமலே பகவானுக்கு சகல நைவேத்தியங்களும் செய்யப்படுகின்றன. உப்பையோ அது கலந்த பொருளையோ கருடன் ஸந்நிதிக்கு அப்புறம் ஒருவரும் கொண்டு போகக் கூடாது. அதைக் கொண்டு போவது இவ்வெம்பெருமானுக்குச் செய்யும் மன்னிக்க முடியாத பெரிய அபசாரமாகும். அதனாலேயே இவ்வெம்பெருமானுக்கு லவணவர்ஜித (உப்பை விலக்கிய) ஸ்ரீநிவாஸன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இந்தச் சந்நிதியில் தனியாகத் தாயார் சந்நிதி கிடையாது. பெருமாளுக்குப் பக்கத்தில் பூமி நாச்சியார் மட்டுமே உண்டு. பூமிநாச்சியாரைப் பிரிந்து பெருமாள் மட்டும் தனியாக ஆஸ்தானத்தை விட்டு எழுந்தருள்கின்ற வழக்கமே கிடையாது.

18. **பிரார்த்தனை உத்ஸவங்கள்**

இத்திருகோயிலுக்கு வரும் எண்ணற்ற பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்று வதற்காகப் பிரார்த்தனை உத்ஸவங்கள் தினமும் நடைபெறுகின்றன. பிரார்த்தனை திருக்கல்யாண உத்ஸவம்; கருட சேவை, தங்கரதம், பிரஹ்மோத்ஸவம், ஊஞ்சல் சேவை, பள்ளியறை சேவை, நித்ய ஆராதனம் செய்யப்படுகின்றன. மூலவர் திருமஞ்சனம் உத்ஸவர் திருமஞ்சனம் முதலியவையும் செய்யப்படுகின்றன.

குருவாயூரைப் போன்று பிரார்த்தனை துலாபாரம் இத்திருக்கோயிலில் வைக்கப் பட்டுள்ளது. தென்திருப்பதி எனப் பக்தர்களால் கொண்டாடப்படும் அற்புதப் பிரார்த்தனைத் திருத்தலம் இதுவாகும்.


**திருக்கோயில்**
**திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச்சந்தா | ரூ 120/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச்சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**


**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை – பட்டினத்தார்

முனைவர். இரா. செல்வக்கணபதி



சைவத்திரு முறைகளுள் ஒன்றாகிய பதினொராம் திருமுறை 12 அருளாளர்களால் பாடப்பெற்ற 40 சிற்றிலக்கியங்களின் தொகுப்பாகும். பூம்புகாரை அடுத்த திருவெண்காட்டு இறைவர் திருநாமம் தாங்கிய திருவெண்காட்டு அடிகள் என்பவர் 12 அருளாளர்களுள் ஒருவர். கடற்கரை நகரங்களைப் பட்டினம் என்பது வழக்கு. பிற்காலத்தில் இவரைப் பட்டினத்தார் என்றும், பட்டினத்துப் பிள்ளையார் என்றும் பட்டினத்து அடிகள் என்றும் குறித்தனர்.

பதினோராம் திருமுறையில் திருவெண்காட்டு அடிகள் அருளியனவாக ஐந்து சிற்றிலக்கியங்கள் இடம் பெற்றுள்ளன. கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக் கோவை, திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒரு பஃது என்பன அவை.

பிற்காலத்தில் இவர் பெயரால் யாரோ சிலர் பாடிய பாடல்கள் பட்டினத்தார் பாடல்கள் என்ற பெயரில் தனிப்பாடல் திரட்டில் இணைக்கப்பட்டுள்ளன. இவர் கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாழ்ந்திருந்தவர். தனிப்பாடல் திரட்டில் வரும் 'ஏகரித்து, ஒப்பார், ஒய்யாரம், கலங்கிறண்டா, சவ்வாது, சலவை, சொகுசு, தாவாரம், பல்லாக்கு, பொக்கசம், பொம்மலாட்டம், போச்சுதடி, மாய்கை, வேட்டி, வேலை மினக்கிட்டு போன்ற பிற்காலச் சொற்களில் ஒன்றுகூட திருவெண்காடர் பாடல்களில் காணப்படவில்லை.

பிற்காலத்து இயற்றப்பட்ட பட்டினத்துப் பிள்ளையார் புராணத்தில் இவர் வரலாறு பின்வருமாறு விரித்துரைக்கப்பட்டுள்ளது.

இவர் காவிரிப்பூம்பட்டினத்து வணிகர். சிவபக்தர். பெரும் பொருள் ஈட்டி வாழந்தவர்.

திருவிடைமருதூர் இறைவன் மருதவாணர் என்னும் பிராமணச் சிறுவராகி - தம் அன்பர் சிவசருமர் என்பவரைத் தம்மைப் பட்டினத்தாரிடம் விற்றுப் பொருள் பெறுமாறு பணித்தார்.

மருதவாணரை விலைக்கு வாங்கிய பட்டினத்தார் அவரைத் தம் காதல் மகனாகவே வளர்த்து வணிகத்தில் பழக்கினார்.

வணிகத்தில் சிறந்த மருதவாணர் வெளிநாடு சென்று பொருளீட்டி, திருக்கோயில் பணிகளுக்கும், சிவனடியார்களுக்கும் வழங்கினார். எஞ்சிய பொருளுக்கு எரு மூட்டைகளை வாங்கிக் கொண்டுக் கப்பலில் தாயகம் திரும்பினார்.

கப்பல் கடலில் திசைமாறிய போது, எரு மூட்டை வாங்கியமை பற்றி இகழ்ந்துரைத்த சக வணிகர்கள், சோறு சமைக்கப் பற்றுச்சீட்டு எழுதிக் கொடுத்து எரு மூட்டைகளைக் கடனாகப் பெற்றனர்.

கரை திரும்பிய வணிகர்கள் மருதவாணர் வீண்செலவு செய்ததாகப் பட்டினத்தாரிடம் கோள் மூட்டினர்.

பட்டனத்தார் ஒரு எரு மூட்டையை உடைக்க உள்ளே மாணிக்க மணிகள் இருந்தன. அடுப்பெரிக்கப் பயன்படுத்திய வணிகர்கள் அதைக் கண்டு மனம் வருந்தினர்.

பண ஆசைமிக்கவராய் எல்லா எருமூட்டைகளையும் உடைத்த பட்டினத்தார், அவற்றுள் மாணிக்கக் கற்கள் இல்லாமையை கண்டு, மருதவாணரைத் தண்டிக்கக் கருதித் தனி அறையில் பூட்டி வைத்தார்.

அன்புமிக்க, பட்டினத்தார் மனைவியார் அறையில் சென்று வளர்ப்பு மகனைக் காண முற்பட்டபோது மருதவாணர் உமை, முருகனோடு சோமாஸ்கந்தராய் அவ்வம்மைக்குக் காட்சி தந்தார்.

மருதவாணர் பெருமை உணர்ந்து பணிந்த

## பட்டினத்தடிகள் பாராட்டிய வரகுணபாண்டியன்

திருவிடைமருதூரில் ஆலயத்திருப்பணி மேற்கொண்டிருந்த வரகுணபாண்டியன் ஒருநாள் ஆலய வெளிமதிலைச் சுற்றிவந்தபோது ஒரு மண்டைஓடு கிடக்கக் கண்டான். அதனைச் சாஸ்டாங்கமாக விழுந்து வணங்கிய வரகுணபாண்டியன் ''செத்தபிறகும் இத்திருத் தலத்தைப் பிரிய உனக்கு மனம் வரவில்லை அல்லவா! உன்னைப்போல் என் தலையும் இத்தலத்தே கிடைக்க இறைவர் அருள்புரிக'' என்று வெண்டிக் கொண்டான். அவன் அன்பைப் பெரிதும் வியந்து பட்டினத்தடிகள் ''பெரிய அன்பின் வரகுணபாண்டியன்'' என்று புகழ்ந்திருக்கின்றார். இப்பாடல் ''திருவிடைமருதூர் மும்மணிக்கோவை''யில் உள்ளது.



பட்டினத்தாருக்கு உலகப் பற்றுஅறப் பல உபதேசங்களைச் செய்தார் மருதவாணர்.

காதற்ற ஊசியை, இழை பிரித்த நூலுடன் பட்டுத் துணியில் மூடி, ஒரு பெட்டியில் வைத்து, 'உமது கணவருக்கு உரிய பொருள் இதுவாகும் ஃ கொடுப்பீர்' எனக் கொடுத்து மறைந்தார்.

பட்டினத்தாருக்கு ஞானம் பிறந்தது. பற்றுகள் சிதறின.

**''பாரனைத்தும் பொய் எனவே**
**பட்டினத்துப் பிள்ளையைப் போல்**
**யாரும் துறத்தல் அரிது அரிது''**

என்கின்றார் தாயுமானவர்.

தமது மாளிகையைத் துறந்து ஊரம்பலம் சேர்ந்தார் பட்டினத்தார். நாடாளும் மன்னன் அவரைச் சந்தித்து, ''நீர் துறவடைந்து பெற்ற பயன் யாது?'' என வினவினான்.

'நீநிற்கிறாய். யான் அமர்ந்திருக்கிறேன் இதுவே பயன்' என்றார் பட்டினத்தார். மன்னன் தாழ்ந்தான்.

பல இல்லங்களிலும் இவர் பிச்சைஏற்று உண்பதைக் கண்டு அவமானமடைந்த உறவினர், அவர் தமக்கை வழி நஞ்சு கலந்த அப்பத்தை அவருக்கு உண்ணக் கொடுத்தனர்.

***''தன் வினைத் தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்''*** எனக்கூறி, அவ்வப்பத்தை இறப்பிற் செருகினார். வீடு தீப்பற்றி எரிந்தது.

அன்னை இறந்த பொழுது சில பாடல்கள் பாடி அவர் சிதைக்குத் தீ மூட்டினார்.

தல யாத்திரை மேற்கொண்டு அருட் பனுவல்களைப் பாடிப் பரவினார்.

இவர் தலைமைக் கணக்கர் சேந்தனாரை மன்னன் சிறைப்பிடித்தபோது **''மத்தளைத் தயிருண்டானும்''** என்ற பாடலைப் பாடச் சிவ கணங்கள் அவரைச் சிறை மீட்டுப் பிள்ளையார் முன் நிறுத்தினர்.

தில்லையில் அன்னை சிவகாமி உணவளித்து அவர் பசி நீக்கி அருளினாள்.

திருவொற்றியூரில் சிறுவர்களுடன் ஒரு மணற்குன்றில் மறைந்து மற்றொன்றில் வெளிப்பட்டு வியப்பூட்டினார். நிறைவாகச் சிறுவர்களை அழைத்துத் தம்மை மணலால் மூடச் சொன்னார். பின் வெளிப்படவே இல்லை. மணலை அகற்றிப் பார்க்கச் சிவலிங்கமாகக் காட்சி தந்தார்.

பிற்காலத்தில் குபேரனே விரும்பிப் பூம்புகாரில் திருவெண்காடராக அவதரித்தான் என்று கூறினர்.

பத்ரகிரியாரை இவர் நண்பர் என்று தொடர்புபடுத்திக் கதைகள் கூறப்படுகின்றன.

பேய்க்கரும்பு ஒன்று, தித்திக்கும் இடமே நின்முத்தித்தலம் என்று சிவன் வழங்கியதாகவும் கதை உண்டு.

பட்டினத்தாருக்கும் - திருவண்ணாமலை தாசி ஒருவருக்கும் பிறந்தவரே அருணகிரி என்று கதை கட்டியவர்களும் உளர்.

இவர் பெயரால் பிற்காலத்தில் பாடப்பெற்ற தனிப்பாடல்கள் பொருட்சிறப்பு நிறைந்தனவாய் - நிலையாமை கூறி - சாதி பேதங்களைக் கடிந்து நிற்கின்றன.

அவை தனியே ஆராயத்தக்க சிறப்பு மிக்கன. **''ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப் பட்டினத்தார் பத்ரகிரி பண்புரைப்ப தெந்நாளோ!''**

- தாயுமானவர்.

## திருஞான சம்பந்தர் திருமணம் நடைபெற்ற தலம்

சிதம்பரத்திற்குத் தென்கிழக்கே 12 கி.மீ. தூரத்தில் உள்ளது ஆச்சாள்புரம். இதுவே திருஞானசம்பந்தர் - தோத்திரபூரணாம்பிகை திருமணம் நடைபெற்ற திருத்தலம் ஆகும்.

இத்திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ள திருவெண்ணீற்று உமையம்மையின் மறு பெயர் ஆச்சாள் என்பது ஆகும். அதன் காரணமாக ஆச்சாள்புரம் என அழைக்கப் படுவதாக அறிகிறோம்.



# பதினாறு வயதினிலே பதினெட்டு அதிசயங்கள்

- டாக்டர் கே.பி. முத்துசாமி


**கொஞ்சு தமிழ் வேதப் பாடல்களால் திருஞானசம்பந்த சுவாமிகள் நிகழ்த்திய அற்புதச் செயல்கள்**

1) சீர்காழிப்பதியில் தமது மூன்றாவது வயதில் சிவபெருமான் கட்டளைப்படி உமாதேவியார் தந்த ஞானப்பாலை உண்டு சிவஞானம் பெற்றுத் திருஞானசம்பந்தராகித் தேவாரப் பதிகங்கள் பாடியருளினார்.

2) திருக்கோலக்கா என்னும் தலத்தில் சிவபெருமான் வழங்கிய திருஐந்தெழுத்து பொறிக்கப் பெற்ற தங்கத்தினாலாகிய தாளங்களை ஓசைஉடையனவாகப் பெற்றார்.

3) திருநெல்வாயில் அரத்துரை என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் இவருக்கு முத்துச்சிவிகையும், முத்துக்குடையும், முத்துச்சின்னங்களும் தந்தருளினார்.

4) திருப்பாச்சிலாசிரமம் எனும் திருத்தலத்தில் வாழ்ந்திருந்த கொல்லிமழவன் மகளுக்கு ஏற்பட்ட முயலகன் நோயைத் தேவாரப் பதிகம் பாடி நீக்கி அருளினார்.



5) திருச்செங்கோடு எனும் திருத்தலத்தில் உடன் வந்த சிவனடியார்களுக்கு உண்டாகிய குளிர்க் காய்ச்சலைப் பதிகம் பாடி நீக்கி அருளினார்.

6) திருப்பட்டீச்சுரம் எனும் திருத்தலத்தில் வெயில் வெப்பம் தணிக்க இறைவனே முத்துப்பந்தர் வழங்கினார்.

7) திருவாவடுதுறையில் தன் தந்தையார் வேள்வி நடத்தப் பதிகம் பாடி ஆயிரம் பொற்காசுகள் கொண்ட பணமுடிப்பைப் பெற்றார்.

8) திருமருகல் என்னும் தலத்தில் பாம்பு தீண்டி இறந்த வணிகனைப் பதிகம் பாடி உயிர்பெறச்செய்தார்.

9) திருவீழிமிழலையில் பட்டினியால் வாடும் அடியார்கள் துயர் தீர்க்கப் பதிகம் பாடித் தினமும் ஒரு பொற்காசு பெற்று அன்னம் பாலித்தார்.

10) திருமறைக்காடு எனும் வேதாரண்யத்தில் வேதங்களால் பூட்டப்பெற்ற கோயிலின் முன்புறக் கதவுகளைத் திருநாவுக்கரசு சுவாமிகள் பதிகம் பாடித் திறப்பிக்க, இவர் பதிகம்பாடி மீண்டும் பூட்டவும் திறக்கவும் அருளினார்.

11) மதுரையில் அடியார்களுடன் இவர் தங்கி இருந்த மடத்திற்குச் சமணர்கள் வைத்த தீ பற்றாதிருக்கவும், அத்தீயின் வெப்பம் பாண்டிய மன்னனைச் சேரவும் பதிகம் பாடியருளினார்.

12) சமணர்களால் தீர்க்க முடியாத கூன் பாண்டிய மன்னனது வெப்பு நோய் நீங்கும்படி பதிகம் பாடித் திருநீறு பூசியருளினார்.

13) சமணர்களோடு புரிந்த அனல் வாதத்தில் தேவாரப் பதிகம் எழுதிய ஏடு நெருப்பில் வேகாமல் பச்சையாக விளங்கச் செய்தார்.

14) சமணர்களோடு புனல்வாதம் செய்து பாடிய தேவாரப் பதிக ஏடு , வைகை ஆற்றின் நீரை எதிர்த்துச் செல்ல அருளினார். மன்னனைச் சைவனாக மாற்றி கூன் நிமிர்த்து நின்ற சீர் நெடுமாறாக்கினார்.

15) திருக்கொள்ளம்புதூரில் பதிகம்பாடி முள்ளிநதி வெள்ளத்தில் ஓடத்தை ஓடக்காரன் இன்றியே செலுத்தி மறுகரை சேரும்படி அருளினார்.

16) திருவோத்தூர் என்னும் தலத்தில் பதிகம் பாடி ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கி அருளினார்.

17) திருமயிலாப்பூரில் சிவநேசர் மகள் பூம்பாவை பாம்பு தீண்டி இறந்த உடம்பை எரித்து எலும்புகளையும், சாம்பலையும் ஒரு குடத்தில் சேமித்துப் பூசித்து வந்தார். அக்குடத்தை கபாலீச்சரம் கொண்டுவரச் செய்து பதிகம்பாடி 5 ஆண்டுகளுக்கு முன் இறந்துபோன பூம்பாவையை அதுவரையுள்ள 12 வயது உடல் வளர்ச்சியுடன் குடத்திலிருந்து வெளிவரும் படி பதிகம்பாடிச் செய்தருளினார்.

18) திருநல்லூர்ப் பெருமணம் என்னும் திருத்தலத்தில் தம்முடைய திருமணம் நடந்தபோது , இவ்வுலக வாழ்க்கை யிலிருந்து தம்மை அழைத்துக் கொள்ள வேண்டுமென்று சிவபெருமானிடம் வேண்டிப் பதிகம் பாடி உடனிருந்த அனைவரையும் அழைத்துக் கொண்டு வைகாசி மூலத்தன்று திருஞானசம்பந்தர் அங்குத் தோன்றிய ஜோதியில் கலந்து பேரின்பப் பேறு பெற்றார்.

திருமாகாளத்தில்

# சோமயாகத் திருவிழா

திருவாரூர் மாவட்டத்தில் நடைபெறும் புகழ்பெற்ற கோயில் திருவிழாக்களில் ஒரு திருவிழா, சோமயாகப் பெருவிழாவாகும்.

63 நாயன்மார்களில் ஒருவரான சோமாசிமாறர் வரலாற்றோடு தொடர்புடைய இச்சோமயாகப் பெருவிழா ஒவ்வொரு ஆண்டும் 'கோயில் திருமாகாளத்'தில் வைகாசி மாதம் ஆயில்யத் திருநட்சத்திரத்தன்று மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

இத்திருவிழாவைக் கண்டு ஆனந்தமும், அருளும் பெற அக்கம்பக்கம் ஊர்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோயில் மாகாளம் வந்து கூடுகின்றனர்.

சோலைகள் சூழ்ந்த திருஅம்பர் எனும் ஊரில் தோன்றியவர் மாறர். யாகங்களில் சிறந்த சோமயாகம் என்பதை இவர் விரும்பி நிகழ்த்தி வந்தபடியால் இவருடைய பெயரே சோமயாஜி என வடமொழியில் வழங்கி ''சோமாசி மாறர்'' என நம் செந்தமிழிலும் வழங்கலாயிற்று.

இவர் தாம் செய்யும் யாகத்திற்குச் சிவபெருமான் எழுந்தருள வேண்டும் என்ற விருப்பத்தைக் கொண்டிருந்தார்.

சுந்தரர், சிவபெருமானின் அணுக்கத் தொண்டர். ஆதலால் அவரை அணுகினால் தம் எண்ணம் ஈடேறும் என்று எண்ணினார் சோமாசிமாறர்.

சுந்தரரின் அன்பைப் பெற ஒரு தந்திரம் செய்தார் சோமாசிமாறர்.


சுந்தரருக்குத் தூதுவளங்கீரை என்றால் உயிர். அவருக்குத் தினமும் சமையலில் தூதுவளங்கீரை சேர்க்கப்படவேண்டும் என்று அறிந்து கொண்ட சோமாசிமாறர், தூதுவளங்கீரையைத் தினமும் பறித்துக் கொண்டு போய் பரவைநாச்சியாரிடம் கொடுத்தார்.

பரவைநாச்சியாரும் பக்குவமாய் அக்கீரையைச் சமைத்துச் சுந்தரருக்குப் படைத்து மகிழ்ந்ததோடு, சோமாசிமாறரைப் பற்றிச் சுந்தரருக்கு எடுத்துக்கூறி அவருடைய விண்ணப்பத்தைப் பற்றியும் சமயமறிந்து சுந்தரரிடம் கூறிச் சோமாசிமாறரின் சோமயாகத்தில் தியாகப் பெருமானை எழுந்தருளச் செய்யக் கேட்டுக் கொண்டார்.

பரவையாரின் பரிந்துரையைச் சுந்தரர் தட்டி உரைக்க இயலுமா? அவரும் தியாகராஜரிடம் பரிந்துரைக்க, சுந்தரர் விருப்பப்படியே நேரே யாகத்திற்கு வந்து சோமாசிமாறர் வழங்கும் அவியைப் பெற்றுக் கொள்வதாக உறுதியளித்தார்.

அம்பருக்கும் - கோயில் திருமாகாளத்திற்கும் இடையில் உள்ள ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு சோமாசிமாறர் சோமயாகத்தைத் தொடங்கினார்.

வைகாசி ஆயில்யத் திருநாளில் யாகம் நிறைவு பெற்று, பூர்ணாகுதி ஆகி, ஈசருக்கு அவி வழங்க வேண்டிய நேரம் நெருங்கிற்று.



சொன்ன வாக்கு மாறாத தியாகராஜர் நீசனைப் போல் வேடம் புனைந்து, மழுவேந்தும் கையில் இறந்து போன ஒரு கன்றுக்குட்டியுடன், மற்றொரு கையில் பறையை முழக்கிக் கொண்டு, நான்கு வேதங்களும் நான்கு நாய்களாகிப் பின் தொடர வருகை புரிந்தார்.

பார்வதிதேவியும் நீசவடிவம் பூண்டு, தலையில் கள்குடம் ஏந்தி, தன்னிருகரங்களிலும் கீழ்ச்சாதிச் சிறுவர்களாய் உருமாறியிருந்த கணபதியையும், முருகனையும் பற்றிக்கொண்டு பின்னால் வந்தாள்.

முதலில் சோமாசிமாறர் நீசனாய் குடும்பத்தோடு வந்த சிவபெருமானை உணர்ந்து கொள்ளாமல் ''இறைவன் வந்து அவிர்பாகம் பெறவேண்டிய நேரம், நீசன் ஒருவன் குடும்பத்தோடு வந்து நிற்கிறானே'' என்று வருந்தினார்.

ஆனால் அடுத்தகணமே ''தியாகேசனே இக்கோலத்தில் வருகிறார் போலும்'' என அவர்தம் உள்ளுணர்வு உணர்த்த தெளிவு பெறுகிறார்.

அதற்குள் யாகசாலையிலிருக்கும் அந்தணர்கள் ''யாகம் மாசு அடைந்தது'' என்று ஓலமிட்டவாறு ஓடுகின்றனர்.

அச்சமயம் கணபதி சோமாசிமாறரின் ஐயம் தீர்க்கும் வகையில், ''அவிவாங்க வந்துள்ள எந்தை இவரே!'' என்று சுட்டிக்காட்டுகின்றார்.

சோமாசிமாற்ர் தியாகராஜரை வரவேற்று அவிர்பாகத்தை வழங்குகின்றார். யாவரும் இறைவன் இறைவியைக் கணபதி, முருகனுடன் தரிசித்து புண்ணியம் பெறுகின்றனர்.

அந்தணர், தாழ்ந்தவர் என இறைவருக்குப் பேதம் கிடையாது என்பதைச் சோமாசிமாறருக்கும், அம்பர் திருத்தலத்து அந்தணர்களுக்கும், யாவருக்கும் எடுத்துரைக்கும் வகையில் தியாகராஜர் நடத்திய அருள்விளையாடல் ஆகும் இது.

இத்தகைய ஒப்பற்ற தத்துவத்தை உணர்த்தும் வகையிலேயே ஒவ்வொரு ஆண்டும் சோமயாகப் பெருவிழா இன்றும் ஒருவார கால விழாவாகக் கொண்டாடப்பெற்று, வைகாசி ஆயில்ய நாளன்று இறைவன் - இறைவி தரிசனத் திருக்காட்சியோடு விழாசிறப்புற நிறைவு பெறுகின்றது.

அம்பருக்கும், கோயில் திருமாகாளத்திற்கும் இடையில் உள்ள ஸ்ரீ அச்சம் தீர்த்த விநாயகருக்கு முதல்நாள் அபிசேகத்துடன் இத்திருவிழா தொடங்கி நடைபெறுகிறது.

மறுநாள் மாலை 5 மணிக்கு அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம் நடை

பெறுகிறது. திருமாகாளநாத சுவாமி ஆலயத்திலிருந்து சோமாசிமாறநாயனாரும், அவர் மனைவி சுசீலையம்பாளும் அம்பர் ஆலயத்திற்கு எழுந்தருளி அன்றிரவு அங்கு மண்டகப்படி நடந்து அங்கேயே தங்குகிறார்கள்.

மறுநாள் காலை சுந்தரர், பரவைநாச்சியாருடன் திருமாகாளம் ஆலயத்திலிருந்து புறப்பட்டுக் கீழவீதி தென்கோடியில் அமைந்துள்ள மாளிகைக்கு எழுந்தருளுகிறார்.

அம்பர் திருத்தலத்திலிருந்து சோமாசிமாற நாறனார் தம் துணைவியாருடன் பல்லக்கில் புறப்பட, ராஜகோபுர வாசலுக்கு வெளியே தூதுவளங்கீரைக் கொடி ஒன்று தயாராய் நட்டுவைக்கப்பட்டிருக்கின்றது.

அர்ச்சகர் அக்கொடிக்குப் பல்வேறு அபிசேகங்கள் செய்து, அர்ச்சனை புரிந்து, கற்பூர தீபாராதனை காட்டி, அதிலிருந்து கீரையைப் பறித்து முன்பே பறித்து வைக்கப்பட்டிருக்கும் பூ, காயுடன் அதையும் சேர்த்துச் சோமாசிமாறரின் திருவடிகளில் வைக்கப் பல்லக்கு புறப்படுகின்றது.



அச்சந்தீர்த்த விநாயகரின் திருச்சந்நிதியின் முன்னர் அமைக்கப்பட்டிருக்கும் யாகமேடைக்குப் பல்லக்கு வந்து சேருகின்றது.

மறுநாள் அச்சந்தீர்த்த விநாயருக்குச் சோமாசிமாறரும், அவரது துணைவியாரும் வழிபாடு நடத்தி, யாகம் எந்த விக்கினமும் இல்லாமல் நடைபெறவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கிறார்கள்.

பின்னர் சோமாசிமாறர்தம் பல்லக்கு, சுந்தரர் தங்கியுள்ள மாளிகைக்கு வருகின்றது.

தூதுவளம்பூ, காய், கீரை முதலியவற்றைப் பரவையாரிடம் சோமாசிமாறர் ஒப்படைத்துத் தம் விண்ணப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்.

அன்று மாலை சுந்தரருக்கும், பரவை நாச்சியாருக்கும் திருக்கல்யாண வைபவம் நடைபெறுகின்றது.

இரவு எட்டுமணிக்குச் சுந்தரர் ஸ்ரீதியாகராஜப்பெருமான் சந்நிதிக்குச் சென்று வழிபட்டு, தமது மாளிகைக்குத் திரும்புகிறார்.

ஆனால் சோமாசிமாற நாயனாரின் யாகத்திற்கு நேரில் வந்து அவிர்பாகம் பெறவேண்டும் என்று அவர் தியாகேசரிடம் கேட்க மறந்து விடுகிறார்.

இதனால் அன்றிரவு சுந்தரருக்கும் பரவையாருக்கும் பிணக்கு ஏற்படுகின்றது.

எனவே சுந்தரர் மறுநாள் தியாகராஜப்பெருமானிடம் மீண்டும் சென்று, சோமாசிமாறரின் யாகத்திற்கு எழுந்தருள வேணுமாய் வேண்டுகிறார். பெருமானும் ஒப்புதல் தர அச்செய்தியைச் சோமாசிமாறரிடம் கூறி யாகத்தைத் தொடங்குமாறு உத்திரவிடுகிறார் சுந்தரர்.

மறுநாள் ஆயில்ய நட்சத்திரத்துடன் கூடிய நன்னாள். சோமாசிமாறர் தம் துணைவியாருடன் யாகசாலைக்கு எழுந்தருளி ஸ்ரீஅச்சம் தீர்த்த விநாயகரின் ஆசியுடன் சோமயாகத்தைத் தொடங்குகிறார்.

பக்தர்கள் திரளாக யாகமேடையருகே கூடி பூர்ணாகுதிக்காகக் காத்திருக்க, மேளச்சத்தம் கேட்கிறது.

பகல் பன்னிரண்டு மணிக்குமேல் திருமாகாளநாதர் திருக்கோயிலிலிருந்து ஸ்ரீதியாகராஜரும், பஞ்சமூர்த்திகளும் புறப்பாடாகி வர, எங்கும் ஒரே கோலாகலம்.

ஸ்ரீதியாகராஜர் நீசவேடம் புனைந்து வருகிறார். பறையடித்தவாறு வருகிறார். நான்கு வேதங்கள், நான்கு நாய்களாக உடன் வருகின்றன.

அம்பிகையும் நீசப்பெண்மணியாகத் தலையில் மதுக்குடம் தாங்கிவருகிறார். இவர்கள் பவளக்கால் மஞ்சத்தில் பவனிவரும் காட்சி, கண்கொள்ளாக்காட்சியாக மக்கள்கண்டு மகிழ்வார்கள்.

தியாகராஜசுவாமியும், அம்பாளும் நீசவேட அலங்காரத்துடன் வர, ஆளுயரப் பதுமைகளும் உடன்வருகின்றன.

காட்சி கொடுத்த நாயனார் தனிவிமானத்தில் வருகிறார். கணபதியும், சுப்பிரமணியரும், நந்திஎம்பெருமானும் உடன் வருகிறார்கள்.

மங்கள வாத்யங்களுடன் இவர்கள் யாகசாலை நோக்கிவர, வழிநெடுகிலும் ஒவ்வொரு இல்லத்திலும் மக்கள் பக்திப்பரவசத்துடன் வரவேற்று மகிழ்கிறார்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் பெண்கள் தண்ணீர் தெளித்துக் கோலம் போட்டு மங்களகரமாய் இறைவரை வரவேற்கிறார்கள்.

அம்பர்திருமாகாளத்திலிருந்து புறப்பட்ட தெய்வங்கள் யாகசாலை வந்து சேருகின்றனர்.

நீசவேட அலங்காரங்கள் நீங்கி, தியாகராஜப்பெருமானும், அம்பாளும், கணபதியும், சுப்பிரமணியரும் காட்சி வழங்க, பூர்ணாகுதி நடைபெற்று, சுவாமி அவிர்பாகம் பெறுவதற்கு அடையாளமாக அனைத்துத் தெய்வங்களுக்கும் கற்பூர ஆரத்தி ஆகின்றது.

உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்ற சிறுமைகளில் சிக்கி உழலும் அஞ்ஞானிகளின் மனக்கண்களைத் திறக்கும் ஞானப் பெருவிழாவாக சோமயாகப் பெருவிழா ஒவ்வொரு ஆண்டும் அம்பர்மாகாளத்தில் நடைபெற்று வருகின்றது.

தமிழகத்திற்குப் பெருமை அளிப்பவை அதன் மிகப் பெரிய திருக்கோயில்களே ஆகும்!

ஒரு நாளிலோ அல்லது ஓரிரவிலோ உருவாக்கப்பட்டவையா கிடைத்தற்கரிய கலைப் பொக்கிஷங்களாக இப்புனித ஆலயங்கள்? மாமன்னர்களின் பக்தி நிறைந்த ஆதரவினால் இரவு, பகல் பாராது, ஊண், உறக்கம் இன்றிக் கவனத்துடன் உளியிலே மனதை ஊன்றி, கண் முன் கடவுளை நிறுத்தி, தெய்வீகச் சக்திபெற்ற சிற்பிகள் உருவாக்கிய கலைச் செல்வங்களே இத்திருக்கோயில்கள் ஆகும்.

ஜோதிடச் சக்ரவர்த்தி
ஏ.எம்.ஆர்.



தாரமங்கலத்தின் புகழ் பெற்ற கைலாய நாதர் திருக்கோயிலில், கருத்தையும், கற்பனையையும் மீறிய தெய்வீகப் பேரழகுடன், நம்முடன் பேசாது பேசும், அழகுப் பெட்டகங்களாக விளங்கும், அதியற்புதச் சிலைகளைப் போல் ஒன்றையாவது உலகில் வேறெங்கும் காணமுடியுமா?

திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் சிற்பத் தூண்களைப் போல ஒரே ஒரு தூணைச் செதுக்கச் செய்ய முடியுமா இப்போது?

திண்டுக்கல்லை அடுத்த தாடிக்கொம்பு திருக்கோயிலின் சிற்பச்செல்வங்களைக் கண்டு பிரமித்த அமெரிக்க நிபுணர்கள் குழு, இது போன்ற கலைத் திறனையும், சிற்பத் திறனையும் உலகில் வேறெங்கும் காணக் கூட முடியாது என திகைத்துக் கூறியது எத்தனைபேர் அறிவர்?

இவை அனைத்திற்கும் மேலாக, இத்திருக்கோயில்களினுள் புதைந்து கிடக்கும் மாபெரும் தெய்வீகச்சக்தி, உலகில் வேறெங்கிலும் காணக்கிடைக்குமா?

அன்பே உருவான சிவபெருமானுக்கு தான் எத்தனை, எத்தனை சன்னிதிகள்! கருணையாங் கடலான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்குத் தான் எத்தனை, எத்தனை சன்னிதிகள்!!

அம்பிகை பாகன் அனைத்துச் சன்னிதிகளிலும் ஒரே மாதிரியாகத் தான் சிவலிங்கமாக தரிசனம் தந்தருள்கிறான். அது போன்றே, அனைத்து திருமால் சன்னிதிகளிலும், சங்கு, சக்கர, பீதாம்பர தாரியாகத்தான் ஆபத்பாந்தவனான பகவானும் சேவை சாதிக்கின்றான்.

இருப்பினும் ஒவ்வொரு திருச்சன்னிதிக்கும், வேறு, வேறு, விசேஷ சக்திகள் உள்ளன. பார்ப்பதற்கு ஒரே மாதிரியாகத் தோன்றினாலும், ஒவ்வொரு திருக்கோயிலும், அதனதன் வீரியத்திலும், தெய்வீக, ஆதர்ஷண சக்தியிலும், உணர்வு அலைகளிலும் மற்ற திருக்கோயில் களினின்றும் மாறுபடுகின்றன.

ஆரோக்கியத்தை அளிக்கும் சக்தி சில திருக்கோயில்களுக்கும், மனஅமைதியை அளிக்கும் சக்தி சில திருக்கோயில்களுக்கும், விவாக தடைகளை நீக்குவது; குடும்ப ஒற்றுமையை அளிப்பது, முக்தி தருவது; கண்பார்வை சம்பந்தமான கோளாறுகளைப் போக்குவது; சரும நோய்களைப் போக்குவது; புத்திர தோஷ நிவாரணம்; கடன் தொல்லை என்று ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் சில விசேஷ சக்திகள் உள்ளன. இதற்குக் காரணம், அந்தந்த மூல மூர்த்தியின் பீடத்தின் அடியில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள அளவற்ற சக்தி வாய்ந்த, பிரத்தியேகமாக மந்திர சக்தி ஊட்டப்பெற்ற சக்கரங்களே ஆகும்.

# பெரும்பாக்கம் கிடைத்தது நமது பெரும் பாக்கியம்!



ஆதலால்தான், நாம், நமது, ஆயுட்காலத்தில் எத்தனைத் திருக்கோயில்கள் முடியுமோ அத்தனை திருக்கோயில்களையும் தரிசனம் செய்து விட வேண்டும்.

இந்த மந்திரசக்திகள் அனைத்தும், வேதமந்திரங்களிலிருந்து பெறப்பட்டவை ஆகும். அந்த மந்திரசக்திகள் வேதங்களிலிருந்து, கீழ்க்கண்டபடி பெறப்பட்டவை ஆகும்.

1. ரிக் வேதம் ஃ ஔஷதம் (மருந்துகள்)
2. யஜுர் வேதம் ஃ யாகங்கள்
3. சாம வேதம் ஃ கானம் (சங்கீதம்)
4. அதர்வண வேதம் ஃ மாந்திரீகம் - மந்திரப் பிரயோகங்கள்.

உதாரணமாக, சாம வேத மந்திரங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருக்கோயில்களை தரிசித்துப், பூசிப்பவர்களுக்குத் தெய்வீக (பக்தி) சங்கீதம், வீணை, குழல், போன்றவை நன்றாக வரும். ஆதலால் எல்லாக் கோயில்களுமே ஒரே மாதிரிதான் என்ற கருத்து முற்றிலும் தவறானது.

இத்தகைய, ஏராளமான தனிச் சிறப்புகள் கொண்ட, விலை மதிப்பற்ற மாபெரும் பொக்கிஷங்களான நம் திருக்கோயில்களைத் தான் இன்று தமிழக அரசின் இந்துசமய அறநிலையத் துறை, கண்களை இமைகள் பாதுகாப்பதைப் போல் பாதுகாத்து, பராமரித்து வருகின்றது.



எம்பெருமானைத் தவிர - அவனது திவ்ய தரிசனத்தைத் தவிர வேறெதிலும் மனதை செலுத்தாத மகான்கள் பலர் இந்த சிற்றூரிலேயே வசித்து வந்ததால், இங்கு, சதா வேத சப்தங்களும், திவ்யபிரபந்த பாராயணங்களும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

## மகான்களால் புனிதமடைந்த திருத்தலம்ஃ

இத்தகைய, விசேஷ, தனிச்சிறப்பைப் பெற்ற திருக்கோயில்களில் ஒன்று தான் பெரும்பாக்கம் என்று மகான்களால் அழைக்கப்பட்டும் பூஜிக்கப்பட்டும் வரும் திருக்கோயில் ஆகும். விழுப்புரம் - மாம்பழப்பட்டு திருக்கோயிலூர் மார்க்கத்தில், விழுப்புரத்திலிருந்து 7கி.மீ. தூரத்தில் உள்ளது இச்சிற்றூர். இங்குதான் அமர்ந்து, அருள் பாலித்து வருகிறான், அழகன் அருள்மிகு வேங்கட வரதராஜப்பெருமான்.



அண்டியவர் துயரினை அன்றே களைந்திடும் கருணாமூர்த்தியான இந்த எம்பெருமான் எழுந்தருளியுள்ள பெரும்பாக்கம் என்ற இந்த புண்ணிய திருத்தலம் "தட்சிண அகோபிலம்" (தென் அஹோபிலம்) என்றும், அனைத்து பாக்கியங்களையும் அளித்தருள்வதால், "பாக்கியபுரி" என்றும் புராதன காலத்தில் பிரசித்தி பெற்று விளங்கியது.

## வரதனும், வேங்கடவனும் இணைந்த எம்பெருமான்!

வைணவ திருத்தலங்களில் 108 திவ்யத்திருத்தலங்கள், ஆழ்வார்களால் பாடப் பெற்ற விசேஷ பெருமையும், தெய்வீகமும் பெற்றவை ஆகும். இவற்றை "திவ்ய தேசங்கள்" என வைணவப் பெரியோர்களும், மகான்களும் கொண்டாடி மகிழ்கின்றனர். இவற்றிலும் ஓர் இணையற்ற, தனிப் பெருமை பெற்றவை, காஞ்சித் திருத்தலத்தில் எழுந்தருளி உள்ள அருள் மிகு வரதராஜப் பெருமாளும், திருவேங்கடத்து எம்பெருமானான, ஸ்ரீநிவாஸனும் (வேங்கடாசலபதி) ஆவர். அழகிலும், அருள் பாலிப்பதிலும், இணையற்ற சக்தியாக விளங்கும் இந்த இரு எம்பெருமான்களின் சக்தி அனைவரும் அறிந்ததே.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு, வயதிலும், பக்தியிலும் முதிர்ந்த ஒரு வைணவ சீலரின் கனவில் பகவான் தோன்றி, குறிப்பிட்ட ஒரு இடத்தில், பூமியில் தான் மறைந்து இருப்பதைக் கூறித், தன்னைத் தனது தேவியருடன் வெளியில் கொணர்ந்து, திருக்கோயில் நிர்மாணித்து, தன்னைப் பூஜித்து வருமாறு அருளாணையிட்டு மறைந்தார்.

எம்பெருமானின் திருவுள்ளப்படி, அந்த வைணவப் பெரியவரும், ஊர் மக்களும் ஒன்று சேர்ந்து, பகவான் கனவில் வந்து கூறிய நிலத்தைத் தோண்டிப் பார்த்தபோது, கண்ணையும், கருத்தையும் கவரும் பேரழகுப் பெருமானான ஸ்ரீ வேங்கடவரதன்,

ஸ்ரீதேவி, ஸ்ரீபூமி பிராட்டி சமேதனனாகக் காட்சி தந்து அருளினார். ஒப்பற்ற திருமேனியுடன், சங்கு, சக்கர தாரியாக சார்ங்கம் என்னும் வில்லுடனும் பேரழகுடன் விளங்கிய அப்பெருமானுக்கு கி.பி. 1605-ம் ஆண்டு (ஆதாரம் : கல்வெட்டு) அழகான திருக்கோயில் நிர்மாணிக்கப்பட்டு பூமியிலிருந்த கிடைத்த பேரருளாளனும், ஸ்ரீதேவி, பூமிதேவியும் பிரதிஷ்டை செய்யப்பட்டு, மகா சம்பரோக்ஷணமும் (கும்பாபிஷேகம்) பல மகான்களின் முன்னிலையில் நடைபெற்றது.

தாயார் ஸ்ரீ பெருந்தேவிக்கும், தனிச் சன்னிதி அமைக்கப்பட்டது. இவை தவிர, ஸ்ரீ நம்மாழ்வார், ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீமத்ராமாநுஜர், ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், புகழ் பெற்ற ஸ்ரீ அஹோபிலமடத்தின் ஸ்தாபகரும், அதன் முதல் அழகிய சிங்கருமான (ஜீயர்) ஸ்ரீ ஆதிவண் சடகோபயதீந்த்ர மஹா தேசிகன் ஆகியோருக்கும் அழகான, தனிச் சன்னிதிகள் நிர்மாணிக்கப்பட்டு, ஆண்டு தோறும, அவர்கள் திருநட்சத்திர மஹோத்ஸவங்கள் விமரிசையாக நடைபற்று வருகின்றன.



## மக்களின் பக்தி

காலத்தின் கோலத்தால் இந்த அழகுப் பெருமானுக்கு அமைந்த திருக்கோயில் மிகவும் சிதலமடைந்த நிலையில் இருந்து, காண்போர் நெஞ்சைப் பிழிந்தெடுத்தது.

ஏராளமான பக்தர்களும் கிராமமக்களும் இந்நிலையைக் கண்டு, மனம் வருந்தி பெரும் முயற்சி செய்து, இத்திருக்கோயிலை புனர்நிர்மாணம் செய்து, அனைத்துச் சன்னிதி விமானங்களையும் புதுப்பித்து தாரண வருடம், ஆவணி மாதம், 6-ம் தேதி (22-8-2004) அன்று மகா சம்ப்ரோக்ஷணம் செய்து, பரமானந்தம் அடைந்தனர்.

இத்திருக்கோயிலில் பங்குனி உத்திர தினத்தன்று, ஸ்ரீ பெருந்தேவி தாயாரின் திருக்கல்யாண வைபவம் விமரிசையாக நடைபெறுகிறது. அதே போன்று, வைகுண்ட ஏகாதசி உற்சவமும், நவராத்திரியில் பெருமான் தாயார் உற்சவங்களும், ஆழ்வார்கள், ஆச்சாரியர்கள் உற்சவங்களும் பிரபலமானவை.

ஸ்ரீமத் அஹோபில மடத்தின் 37வது பட்டம், ஸ்ரீமத் அழகிய சிங்கரின் பீடாரோகணமும் இத்திருக்கோயிலில் தான் ஜனவரி 24, 1899-ம் ஆண்டு நடைபெற்றது, இத்திருச்சன்னிதியில் கூடுதல் சிறப்பாகும்.

மகத்தான ஆச்சாரியர் சிலர்களாலும, மகாபுருஷர்களாலும் ஆராதிக்கப்பட்ட இந்த எம்பெருமானின் தெய்வீகத் தனிச்சிறப்பு, காஞ்சி வரதராஜப்பெருமானும், வேங்கடத்து

## ஜூன் திங்களில் திருக்குட நீராட்டுவிழா காணவுள்ள திருக்கோயில்களில் சில..



1. அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் நாள் 10-6-05
2. அருள்மிகு நித்தியக்கல்யாணப் பெருமாள் திருக்கோயில், திருவிடந்தை நாள் 10-6-05
3. அருள்மிகு நாகேஸ்வரம் திருக்கோயில், குன்றத்தூர். நாள் 10-6-05
4. அருள்மிகு வரகுணபாண்டீஸ்வரர் திருக்கோயில் இராதாபுரம், திருநெல்வேலி. நாள் 10-6-05
5. அருள்மிகு இருதயாலீஸ்வரர் திருக்கோயில், திருநின்றவூர் நாள் 10-6-05
6. அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் கருங்கல்பாளையம், ஈரோடு. நாள் 10-6-05
7. அருள்மிகு கடம்நாதசுவாமி திருக்கோயில் கடம்பர்கோயில், உத்திரமேரூர். நாள் 17-6-0

## தங்கரதத் திருப்பணி தொடக்கவிழா





திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் தங்கரதத் திருப்பணி தொடக்கவிழா 5-5-05 அன்று காலை மிகச் சிறப்பாக நடை பெற்றது. இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து சமய அற நிலைய ஆட்சித் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., மற்றும் அறநிலையத் துறை ஆணையாளர் திருமிகு த.பிச்சாண்டி, இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பி.எல். ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

இன்னமுதனும் இணைந்து, ஒரே எம்பெருமானாக சேவை சாதிப்பது (தரிசனம் தந்தருள்வது) தான்.

### ஸ்ரீ கல்யாண ஆஞ்ஜநேயர்

இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகல்யாண ஆஞ்ஜனேயர் சக்தி அளவிடற்கரியது. திருமணத் தடைகளைத் தகர்த்தெறிவதால் இந்த, அழகிய அனுமனுக்கு இப்பெயரும், புகழும் ஏற்பட்டது. அண்டியவர் துயனர அன்றே போக்கும் அருள் சக்தி படைத்தவன் இந்த அஞ்சனை மைந்தன்.

**''பெண்ணைப் பெற்றவர்கள் கலங்கவேண்டாம்''** என்று பேசாமல் பேசும் இவனது அழகிய திருமுக மண்டலமும, கண்டவரைக் கவர்ந்திழுக்கும் காந்தக் கண்களும், திருவடிகளும் காணப் பலபிறவிகளில் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

பெரும்பாக்கம் எம்பெருமான், ஸ்ரீவேங்கட வரதனை ஆராதித்துவரத் தொடர்ந்து, மகத்தான ஆச்சார சீலர்கள் கிடைத்து வருவதால் இந்த சன்னிதியின் சக்தி நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை பக்தர்கள் அறிவர். எங்கு, எத்தகைய சக்தி மறைந்துள்ளது என்பது அந்த எம்பெருமானுக்கு மட்டுமே தெரிந்த சூட்சமம் ஆகும். அத்தகைய மாபெரும் தெய்வீக சக்தியைத் தன்னுள் மறைத்துக் கெண்டுள்ள மகாக்ஷேத்திரமான பெரும் பாக்கம் நமக்குக் கிடைத்தது, தமிழக மக்கள் பல பிறவிகளில் செய்துள்ள நற்பெயல்களின் (புண்ணியம்) பலனே ஆகும்.

தரிசித்துப் பலன் பெறுவோம் வாரீர்.!

### ஆனிமாதத்தில் ஆழ்வார் - நாயன்மார் திருநட்சத்திரம்



பெரியாழ்வார் - சுவாதி நட்சத்திரம்
அமர்நீதியார் - பூரம்
கலிக்காமர் - இரேவதி
அருணகிரிநாதர் திருநட்சத்திரம் - ஆனி மகம்

சிறப்பாசிரியர் மற்றும் திருமிகு **த. பிச்சாண்டி,** இ.ஆ.ப., ஆணையர்.
வெளியிடுவோர் : தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
...ார் : குணசுந்தரி மாடர்ண் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929



# அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில்,

## திருக்கழுக்குன்றம் - 603109
## காஞ்சிபுரம் மாவட்டம்,

நான்கு வேதங்களும் நான்கு சிகரமாக, அச்சிகரத்தின் உச்சியில் சுயம்புவாய்ச் - சுடர்க்கொழுந்தாய் இறைவன் எழுந்தருளித் திருவருள் பாலிக்கும் திருத்தலம். ''வேதகிரி'' என அழைக்கப்படும் திருக்கழுக்குன்றம் திருத்தலம் ஆகும்.

சமயக்குரவர்கள் திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசர். சுந்தரர். மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் வழிபட்டுப் பாடியுள்ள திருத்தலம் என்ற பெருமையும் திருக்கழுக்குன்றத்திற்கு உண்டு.

பட்சி தீர்த்தம், வேதமலை என்று அழைக்கப் பெறும் இப்புனிதத்தலத்தில் மலைக் கோயிலில் வேதகிரிஸ்வரரும், 'தாழக்கோயில்' என அழைக்கப்படும் அடிவாரக் கோயிலில் அருள்மிகு பக்தவச்சலேசுவரரும், அருள்மிகு திரிபுரசுந்தரி அம்மனும் எழுந்தருளிப் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றனர்.

இத்திருக்கோயிலுக்கு 58.6 அடி உயரத்தில் புதிதாகச் சுவாமி திருத்தேர் செய்யும் திருப்பணி 29 லட்சரூபாய் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திருத்தேர் செய்வதற்கு முக்கிய பகுதியான இரும்பு அச்சுகள் மற்றும் 4 சக்கரங்கள் BHEL மூலமாக உபயதாரரால் செய்து தர ஒப்புக் கொள்ளப்பட்டுப் பணி தற்பொழுது நடைபெற்று வருகின்றது.

மேலும் கலையம்சம் நிரம்பிய நூறு பொம்மைகள் இத்திருத்தேரில் அமைக்கப்பட உள்ளன. ஒவ்வொரு பொம்மையும் அமைக்க சுமார் ரூ3200 (ரூபாய் மூவாயிரத்தி இருநூறு மட்டும்) ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது,

மேலும் இரும்புச்சட்டங்கள், சங்கிலி மற்றும் தேர்ச்சீலை. தேரினைப் பாதுகாக்க இரும்புக்கூரை ஆகியவை அமைக்கத் தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கித் தேர்த்திருப்பணியை விரைந்து முடிக்க ஆவன செய்யுமாறு அன்புடன் வேண்டப்படுகிறது,

நன்கொடைகள் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாக அதிகாரி அவர்கள்,
அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில்,
திருக்கழுக்குன்றம் - 603109
காஞ்சிபுரம் மாவட்டம்,
வெப்சைட் : www.vedagireeswarar.com
இ-மெயில் : vedhatkm@sancharnet.in
இ-பூஜா : tntemple.org

இவண்

வ.ச. மறைமலை, M.A., B.L.
நிர்வாக அதிகாரி

கோ. ஆறுமுகம், M.A., B.L.
தக்கார் /
உதவி ஆணையர்





108 வைணவ திவ்ய தேசங்களில் முதன்மையானதும்
பூலோக வைகுண்டம் எனப் போற்றப்படுவதுமான

# ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

பூஜைகளில் கலந்து கொண்டு திருவரங்கனின்
திருவருளுக்குப் பாத்திரராக வேண்டுகிறோம்

## நித்திய ஆராதனைக் கட்டளை

| வ.எண் | பூஜை விவரம் | ஸ்ரீரங்கநாதர் சன்னதி | | ஸ்ரீ தாயார் சன்னதி | | ஸ்ரீ சக்கரத்தாழ்வார் சன்னதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தொகை | இ - பூஜா தொகை | தொகை | இ - பூஜா தொகை | தொகை | இ - பூஜா தொகை |
| 1. | திருவாராதனம் | 1000 | 1250 | 500 | 625 | 100 | 125 |
| 2. | பொங்கல் | 6000 | 7500 | 1500 | 1900 | 1300 | 1650 |
| 3. | உச்சிக்காலம் | 4000 | 5000 | 1000 | 1250 | 500 | 625 |
| 4. | சீராண்ணம் | 5000 | 6250 | 2500 | 3150 | 600 | 750 |
| 5. | செலசம்பா | 2000 | 2500 | 500 | 625 | 500 | 625 |
| 6. | அரவணை | 2000 | 3025 | 1500 | 1900 | -- | -- |

## அன்னதானக் கட்டளை

| திருக்கோயில் பெயர் | | ஒரு நாள் உபயத் தொகை | முதலீட்டுத் தொகை |
|---|---|---|---|
| ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் | நாள் ஒன்றுக்கு 200 நபர்களுக்கு | ரூ. 2500/- | ரூ. 30,000/- |
| உபகோயில் திருவெள்ளறை அருள்மிகு புண்டரீகாட்சப் பெருமாள் திருக்கோயில் | நாள் ஒன்றுக்கு 100 நபர்களுக்கு | ரூ.1250/- | ரூ.15,000/- |

## வைரமுடி சேவை மற்றும் திருமஞ்சனக் கட்டண விபரம்

| வ.எண் | பூஜை விபரம் | Present rate | Online rate |
|---|---|---|---|
| 1. | வைரமுடி சேவை | 1000 | 1325 |
| 2. | சக்கரத்தாழ்வார் திருமஞ்சனம் | 450 | 575 |
| 3. | அனுமார் திருமஞ்சனம் | 375 | 475 |
| 4. | சிங்கர் திருமஞ்சனம் | 700 | 935 |

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**


இணை ஆணையர் -செயல் அலுவலர்,
அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்,
ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி - 620 006.

தொலைபேசி : 0431 - 2432246
தொலைநகலி : 0431 - 2436666

**Website: WWW.srirangam.org**
**e-Mail : info@srirangam.org ; srirangamtemple@sancharnet.in**


ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி கணக்கு எண் :

**Sri Aranganathaswamy Temple - General 612501122808**


வி. வெங்கட்ராமன்
தலைவர், அறங்காவலர்கள் குழு.

தி. ஜெயராமன், B.A.,B.L.
இணை ஆணையர் - செயல் அலுவலர்

வி. மாதவன், M.C., ராயர் கே. சுப்பாராவ், த. கஸ்தூரி, M.Sc., M.Phil., PGDCA.,
அறங்காவலர்கள்